# முதல் மொழியில் வாசிக்க ஊக்குவித்தல்



பாரம்பரிய மொழி கற்பித்தற் கருவிகள்

## கற்பித்தல் மதியுரைகள்

2

# முதல் மொழியில் வாசிக்க ஊக்குவித்தல்

பசில் ஷாடர்

வலேரியா பொவினா
இத்தாலியன் பயிற்சியாளர்

பாரம்பரிய மொழி கற்பித்தற் கருவிகள்

## கற்பித்தல் பரிந்துரைகள் 2

தொடர்: "பாரம்பரியமொழி கற்பித்தற் கருவிகள்"
(HSU: in Switzerland HSK: தாய்மொழியும் பண்பாடும் அறிவுறுத்தல்): கற்பித்தல் மதியுரைகள் 2

சூரிச் ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகத்தின் பன்னாட்டுக் கல்வித் திட்டங்கள் நடுவகத்தால் வெளியிடப்பட்டது.

PH ZH
IPE – INTERNATIONAL PROJECTS IN EDUCATION
ZURICH UNIVERSITY OF TEACHER EDUCATION

| | |
|---|---|
| திட்ட முதல்வர் / பதிப்பு: | பசில் ஷாடர் |
| நூலாசிரியர்: | பசில் ஷாடர், Prof. Dr. Dr.<br>சூரிச் ஆசிரியர் கல்விப் பல்கலைக் கழகம்,<br>பல்பண்பாட்டுக் கற்பித்தல் வல்லுநர்,<br>கற்பித்தற் பொருள்களின் ஆசிரியர். |
| HSU பதிப்புத் துணை: | வலேரியா பொவினா,<br>இத்தாலியன் பயிற்சியாளர். |
| தேர்வு – கற்பித்தல் முறையைத் தேர்வுசெய்து பார்த்தவர்கள்: | நெக்சத் மாலொகு, சூரிச் (HSK அல்பானியன்)<br>சகினே கொச், சூரிச் (HSK துருக்கி)<br>பொஸ்னா அலெபிச், (HSK சேர்பியன்)<br>எலிசா ஏஷிமன்-பெரெரா மற்றும் ராக்கேல் ரோஸா (HSK போர்த்துகீஸ்)<br>ஹசிர் மெமெத்தி, வியன்<br>ரிபத் ஹாமத்தி, டுசில்டோர்ப் |
| விளக்கப் படங்கள், ஒட்டுமொத்த வடிவமைப்புக் கருத்து மற்றும் நிறைவேற்றுகை: | பார்பரா முல்லெர், ஏர்லென்பாஹ் |
| மொழிபெயர்ப்பு: | தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து<br>Tamil Education Service Switzerland<br>பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸ், Prof. Dr.<br>ஷெளினா சிவநாதன், B.A. Honours (Translation Studies) |

"பாரம்பரிய மொழிக் கற்பித்தற் கருவிகள்" நூல் தொடர் சுவிஸ் கலை பண்பாட்டுப் சமஷ்டி பணியகத்தின் (BAK) துணையுடன் உருவாக்கப்பட்டது.

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Eidgenössisches Departement des Innern EDI
**Bundesamt für Kultur BAK**

இக் கருத்திட்டம் ஐரோப்பிய ஆணைக்குழுவின் துணையுடன் பகுதி நிதியுதவி பெற்றது. இவ்வெளியீட்டின் பொருளடக்கத்திற்கு நூலாசிரியர்களே பொறுப்புடையவர்கள்; இதிலுள்ள தகவல்களின் தொடர் பயன்பாட்டுக்கு ஆணைக்குழு பொறுப்பேற்காது.

AMuSE

Lifelong Learning Programme

# பொருளடக்கம்


நூல் தொடரின் முன்னுரை
"பாரம்பரிய மொழி கற்பித்தற் கருவிகள்" 7

## அறிமுகம்

1 பாரம்பரிய மொழியில் படித்தல்: வாய்ப்புகளும் சவால்களும் 8
2 இந் நூலின் நோக்கங்களும் கட்டமைப்பும் 9
3 தற்போதைய படிப்புக் கற்பித்தலின் முக்கிய பண்புகள் 10
4 பாரம்பரிய மொழிக்கல்வி வகுப்பறையில் படித்தலுடன் குறிப்பாக தொடர்புடைய பண்புகள் 13

## I பகுதி I: படித்தலை ஊக்குவித்தல்

நூல்கள் எழுத்துருக்களுக்கான அறிமுகம்

1 ஒரு கடமை போல் உரத்துப் படித்தல 20
2 முதல்மொழியில் சிறிய நூலகமொன்றை அமைத்தல் 21
3 Bibliomedia போன்ற அமைப்புக்களிலிருந்து நூல்களைப் பெற்றுக்கொள்ளல் 22
4 ஒரு நூலகத்தைப் பார்வையிடுதல் 22
5 டோமினோ நூல் 23
6 முதல் வாக்கியங்கள் 24
7 கருதுகோள்களை உருவாக்குதல் 25
8 வண்ணப் பைகளில் நூல்கள 26

நூல்களையும் எழுத்துருக்களையும் படித்தலும், விளங்க-ிக்கோள்ளுதலும்

9 கட்டற்ற படிப்புத்தொடர்கள் (தனிப்பட்ட படித்தல்கள்) 27
10 உரத்துப் படித்து மற்றவர்களுக்காக ஒலிப்பதிவு செய்தல் 28
11 குழுக்களாக அல்லது வகுப்பாகப் படித்தல் 29

படித்தவற்றிலிருந்து அறிக்கையிடுதல்

12 எனது நூலை யாரால் கண்டுபிடிக்க முடியும்? 32

13 விடுகதை முடிச்சு 33

14 எழுத்தாக்கங்கள் பற்றிய வினாக்களை உருவாக்குதல் 34

15 ஒரு நூலுக்கான சுவரொட்டியொன்று உருவாக்குதல் 35

16 "நூல் ஸலாம் (slam)" 36

17 "நூல் பற்றிய அறிமுகச்சந்திப்பு (Dating)" 37

படித்தவற்றை உருக்காட்டுதல் (வெளிக்காட்டுதல்)

18 உரத்துப் படித்தல்: ஒரு சுய மதிப்பீடு 38

19 ஒருவர் தான் படித்ததை மீட்டுப்பார்த்தல் 39

II பகுதி II:
படித்தற் பயிற்சி

படித்தற் திறன்கள்

20 எழுத்துக்களைத் தன்னிச்சையாக அடையாளங்காணுதல் 44

21 சொற்களை மிக வேகமாகப் படித்தல் 45

22 வாக்கியங்களை முழுமையாகப் படித்தல் 47

23 படித்ததை விளங்கிக்கொள்ளல் 48

தடங்கலின்றிப் படித்தல்

24 தடங்கலின்றிப் படித்தலைப் பயிற்சிசெய்தல் 50

படித்தல் மதிநுட்பங்கள்

25 படிப்பதற்கு முன்னரான மதிநுட்பங்கள் 53

26 படிக்கும்போது மதிநுட்பங்கள் 54

27 படித்தலின் பின்னான மதிநுட்பங்கள் 55

III பகுதி III:
இலக்கிய-பண்பாட்டுக் கல்வி

28 கேட்டல் 60

29 நூலிலுள்ள கதைமாந்தர்கள் 61

30 உருவக அடிப்படையில் ஓர் இடத்தைக் கற்பனை செய்தல் 63

நூற்பட்டியல் 64

## விளக்கங்கள் மற்றும் சுருக்கங்கள்

முதல்மொழி: தாய்மொழியாகவும் அல்லது குடும்ப மொழியாகவும் அமைவது: ஒரு குழந்தை வீட்டில் கற்றுப் பேசுவது முதல் மொழி. சில பிள்ளைகளுக்கு இரண்டு முதல் மொழிகள் உள்ளன.

பள்ளிமொழி: குடிபுகு நாட்டுப் பள்ளிகளில் பேசப்படும் மொழி. அத்துடன் உள்ளூர் பேச்சுமொழி சூழல் மொழியாகக் கொள்ளப்படும்.

சுருக்கங்கள்:

மா = மாணவர்
ஆ = ஆசிரியர்
பா.மொ.க = பாரம்பரிய மொழி கற்பித்தல்
எ.கா. = எடுத்துக்காட்டு

விளக்கம்:
கற்பித்தல் முன்மொழிவுகள் தொடர்பான ஒழுங்கு வடிவம். வகுப்பு, நேரத் தேவைகள் ஆகியவற்றைக் குறிக்கும் படங்கள்:



த.வே. = தனி வேலை



கூ.வே. = கூட்டாளியுடன் வேலை செய்தல்



சி.கு. = சிறு குழு



மு.வ. = முழு வகுப்பும்

1ம் - 9ம் தரம்

... தொடக்கம் ... வரை என்பதற்குப் பொருந்தும். (எ.கா. : 3ம் - 6ம் வகுப்பு). இந்நிலை தனிப்பட்ட மாணவர்களின் தேவைகளுக்கேற்ப மாற்றமடையலாம் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

10 - 20 மணித்துளிகள்

ஏறத்தாழ தேவைப்படும் நேரம், எ.கா. : 20 மணித்துளிகள் (மதிப்பிடப்பட்டநேரம், பயிற்சியாளரால் வகுப்பின் நிலை மற்றும் தேவைகளுக்கேற்ப முடிவுசெய்யப்பட வேண்டும்).

# நூல் தொடரின் முன்னுரை "பாரம்பரிய மொழி கற்பித்தற் கருவிகள்"

ஒரு பிள்ளையை அடையாளப்படுத்தவும், அப்பிள்ளையின் மொழித்திறனை வளர்க்கவும் ஜெர்மனியிலும் ஒஸ்ரியாவிலும் "Herkunfts- sprachlicher Unterricht (HSU)" எனவும் சுவிற்சர்லாந்தில் "Unterricht in Heimatlicher sprache und Kultur (HSK)" எனவும் வழங்கும் பாரம்பரியமொழிக் கற்பித்தல் (பா.மொ.க HLT) அல்லது தாய்மொழி கற்பித்தல் துணைசெய்கிறது. இது பன்மொழித்துவத்தை ஊக்குவிப்பதுடன் மதிப்புள்ள தன்னிலை மற்றும் சமூகநிலை வளமாகவும் பணி செய்கிறது. இவ்வுண்மை பற்றிய விழிப்புணர்வு ஆய்வு மற்றும் கட்டமைப்பு வழிகாட்டல்களான ஐரோப்பியப் பேரவையின் R(82)18 மற்றும் R(98)6 பரிந்துரைகளினால் உருவானது. எனினும், இத்தகைய கற்பித்தல் வழமையான பாடத்திட்ட வகுப்பறைக் கற்பித்தலைவிட பெரும்பாலும் மிக இடர்ப்பாட்டு நிலைகளிலேயே நடைபெறுகிறது. இதற்குப் பல காரணிகள் பொறுப்பாயுள்ளன:

- பல இடங்களில் பாரம்பரியமொழிக் கல்வி நிறுவன நிலையிலும் நிதி நிலையிலும் காப்பற்ற வலுவிலேயே உள்ளது. எடுத்துக்காட்டாக சுவிற்சர்லாந்தில், பாரம்பரியமொழி ஆசிரியர்களுக்கு அவர்கள் தாய் நாட்டினால் அல்லது பெற்றோர்களினாலேயே நிதி வழங்கப்படுகிறது.

- பாரம்பரியமொழி வகுப்புகள் பெரும்பாலும் வழமையான வகுப்பறைக் கற்பித்தலுடன் மிகக் குறைவான முறையிலேயே தொடர்புபடுத்தப் பட்டுள்ளன. வழமையான பாடத்திட்ட ஆசிரிய அணியுடனான தொடர்பும் கூட்டுறவும் பெரும்பாலும் மிகக் குறைந்த முறையிலேயே மேம்படுத்தப் பட்டுள்ளன.

- பாரம்பரியமொழி வகுப்புகள் கிழமையில் இரண்டு மணி நேரம் மட்டும் அமைவதால், ஆக்கநிலையான, இடையீடற்ற கற்றல் கடினம் ஆகின்றது.

- பாரம்பரியமொழி வகுப்புகள் பெரும்பாலும் விருப்பக்கல்வியாக அமைந்தமையால், மாணவர்களின் பங்களிப்புச் சிறிதாகக் காணப்படுகிறது.

- பாரம்பரியமொழி வகுப்புகள் பல்வகுப்புக்களை இணைத்து கற்பிக்கும் முறையை கொண்டுள்ளமையால், 1-9ம் வகுப்பு வரையுள்ள மாணவர் ஒரு வகுப்பிலே சேருகின்றனர். இது பெரும் உள்வாரி வேறுபாட்டினைக் கையாள்வதையும் கற்பித்தல் திறனையும் ஆசிரியரிடமிருந்து வேண்டிநிற்கின்றது.

- பாரம்பரியமொழி வகுப்பறைகளில் பலவகைப்பட்ட மாணவர் குழுமம் இருப்பது போல மாணவர்களின் மொழித் தகைமையும் வேறுபட்டதாயுள்ளது. சிலர் வீட்டில் தம் தாய்மொழியின் எழுத்துமொழிவழக்கிலும் பேச்சுமொழி வழக்கிலும் நல்ல செயற்றிறன் பெற்றிருக்கும் அதே வேளை, மற்றவர்கள் பேச்சுமொழியில் மட்டுமே பேசுபவராயுள்ளனர். புதிய நாட்டில் ஏற்கனவே பல ஆண்டுகளாக வாழ்ந்துவரும் பாரம்பரியமொழி பேசுபவர்களாகிய இரண்டாம் மூன்றாம் தலைமுறையினர்க்கு, அங்கு பேசப்படும் மொழி (எ.கா. ஜெர்மன்) மேலாதிக்க மொழியாக அமைய அவர்கள் முதல் மொழியாற்றல் பேச்சுமொழியாக வரையறுக்கப்படுவதுடன், அதுவும் குடும்பச் சிக்கல்களுடன் மட்டுப்படுத்தப்பட்ட சொற்கோவையுடன், வாய்வழியாக மட்டுமே வெளிப்படுத்தப்படுகிறது.

- பாரம்பரியமொழி ஆசிரியர்கள் தம் தாய் நாடுகளில் பொதுவாக நல்ல அடிப்படைக் கல்வியைப் பெற்றிருப்பார்கள். ஆனால் குடிபெயர்ந்த நாடுகளில் பல்வகுப்புச் சூழ்நிலையில் கற்பித்தலின் உண்மை நிலைகளுக்கும் அதன் நுட்பங்களுக்கும் அவர்கள் முன்னேற்பாடாயில்லை. தொடர்கல்வி விருத்தி வாய்ப்புகள் வாழும் நாடுகளில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

"பாரம்பரியமொழி கற்பித்தற் கருவிகள்" தொடர் தாய்மொழிக் கல்வி வகுப்பு ஆசிரியர்களுக்கு அவர்களுடைய இன்றியமையாத வேண்டப்படுகிற பணிக்குத் துணை செய்கிறது. இதனூடாக இத்தகைய உகந்த தரமுள்ள கற்றலுக்கு பங்களிக்க எண்ணுகிறது. மேற்கு மற்றும் வடக்கு ஐரோப்பிய குடிபெயர் நாடுகளின் (அடிப்படைகளும்... என்னும் தொகுதியை ஒப்பிடுக) தற்போதைய ஆசிரியப்பணி மற்றும் கற்பித்தல் பற்றிய பின்னணிகள் மற்றும் கோட்பாடுகளின் மீளாய்வு, வகுப்பறைக்கான உருப்படியான நடைமுறை மதியுரைகளையும் மாதிரிகளையும் கொண்ட பணிநூல்கள் "கற்பித்தல் மதியுரைகள்" நூலின் துணையுடன் இந்நோக்கினை மேலும் முன்னெடுக்கின்றன. மொழியியல் தகைமையை முன்னெடுப்பதையே இவை வலியுறுத்துகின்றன. கற்பித்தல் மதியுரைகள் வேண்டுமென்றே, வழமையான பாடத்திட்டம் அதன் கற்பித்தல் கருவிகள் ஊடாக வந்த மாணவர்கள் நன்கு அறிந்த கற்பித்தற்கலைக் கோட்பாடுகள் நடைமுறைகளை நோக்கிச் செல்கின்றன. இத்தகைய நன்கறிகை, பாரம்பரியமொழிக் கல்விக்கும் வழமையான பாடத்திட்டக் கற்பித்தலுக்குமிடையே ஒரு நெருக்கத்தினை கொண்டு-வந்து அவை இரண்டுக்குமிடையே முடிந்தளவு பெரியதோர் இணைப்பினை உறுதிப்படுத்துகின்றது. பாரம்பரிய மொழிக் கல்வித் திட்டங்களின் ஆசிரியர்கள் என்ற முறையில் அவர்கள் தங்களை வழமையான பாடத்திட்டத்தில் தற்போது பயன்படுத்தப்பட்டுள்ள கற்பித்தல் அணுகுமுறைகளுடனும் குறிப்பிட்ட நடைமுறைகளுடனும் நன்கு இணைத்துக்கொள்ள, அவர்கள் மேலும் பயற்சியினைப் பெறுகின்றனர். இது இருமொழி, இருபண்பாட்டு அடிப்படையில் வளர்ந்துவரும் மாணவர்களின் கல்விச் செயன்முறையில் இணையான மதிப்புள்ள பங்காளிகளாக தம்மை உயர்த்துவதைப் வலுப்படுத்தும் என நம்பப்படுகின்றது.

# அறிமுகம்

## 1. பாரம்பரிய மொழியில் படித்தல்: வாய்ப்புக்களும் சவால்களும்

மக்கள் தமது பாரம்பரிய மொழியில், தாய் மொழியில் அல்லது முதல் மொழியில் படிக்கவும் எழுதவும் தெரிந்திருத்தல் மிக இன்றியமையாததுடன் அதுவே அவர்களுடைய தன் அடையாளமாகும். இக் கல்வியறிவுத் திறன் குறைந்தவர்கள் தமது முதல் மொழியிலே கல்வியறிவற்றவர்களாகவே இருப்பர். அவர்கள் அம் மொழியின் எழுத்தறிவுப் பண்பாட்டுத் தொடர்பை இழந்துவிடுவதுடன் அவர்களது இரு பண்பாடு, இருமொழியில் பேசுதல், இருமொழியில் எழுத்தறிவு மிகக் கடுமையாக இடர்பாட்டுக்குள்ளாகும். இன்னொரு வகையில் கூறுவதானால், தனது முதல் மொழியில் எழுத்தறிவைக் கொண்ட ஒருவர் ஏராளமான சிறந்த செல்வநிலையான வாய்ப்புக்களை அடைவார். நூல்களிலிருந்தும் மின்னியல் ஊடகத்திலிருந்தும் தகவலைப் பெற்றுக் கொள்வதற்காகப் புலம்பெயர்ந்து தன்னுடைய மக்களின் இலக்கியத்தை அடைவதற்கும் அதன் எழுத்துப் பண்பாட்டில் பங்கு பற்றுவதற்கும் நன்மையானநிலையை அடையவும் அதனைப் முழுமைப்படுத்தி ஒருவருடைய தொழிற்புலமை வாய்ப்புகளை அதிகரிக்கவும் வரையறையைக் கொண்டுள்ளது.

ஆகக்குறைந்தது, ஒருவர் இலத்தீன் அரிச்சுவடியைப் பயன்படுத்தும் மொழிகளில் படிக்கும் போதும் முதல் தடவையிலேயே படிப்பில் பாரிய பிரச்சினையை எதிர்பார்க்க முடியாது. இக் கூற்று முற்றுமுழுதாகத் தவறாகும்: உண்மையில் பிரச்சினைகளும் சிக்கல்களும் அங்கே உள்ளன. இவை மூன்று தலைப்களில் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

### அ) வரிவடிவ எழுத்துக்களின் (சிறப்பு எழுத்துக்களும், ஒலிப்புகளும்) பட்டியல், எழுத்துக்களின் தொடர் வரிசை தொடர்பான சிக்கல்கள்

பெரும்பாலான மொழிகள் சிறப்பு எழுத்துக்களைக் கொண்டுள்ளன (ë, ç, č, ş, ğ, ı, â, æ, ă, etc.). குடியேறும் நாட்டின் வழமையான வகுப்பறை கற்பித்தல்களின்போது எழுத்தறிவுப் பயிற்சியின் ஒரு பகுதியாக இவ்வரிவடிவ எழுத்துக்கள் கற்பிக்கப்படுவதில்லை. இந் நடைமுறை தனித்தனியான வரிவடிவ எழுத்துக்களின் வேறுபட்ட ஒலிப்பிற்குப் பயன்படுத்தப்படுகின்றதென்பது உண்மையே (எடுத்துக்காட்டு:<z> ஜேர்மன் மொழியில் ts உச்சரிப்பினை கொண்டிருக்கின்றது. அதே சமயம் ஏனைய மொழிகளில் இது ஓசையுடைய s ஐக் குறிப்பிடுகின்றது. <c> துர்கிஷ் மொழியில் dsch என உச்சரிக்கப்படுகின்றது. ஸ்லாவிக் மொழிகளில் இது ts உச்சரிப்பினைக் கொண்டுள்ளதோடு ஜேர்மன் மொழியில் ts அல்லது k எனும் உச்சரிப்பினைக் கொண்டுள்ளது). மொழியைப்பொறுத்து ஒலிப்புகள் வேறுபட்டனவாக விவரிக்கப்பட்டுள்ளன. இதனால், ஜேர்மன் ஒலிப்பு [ ʃ ] ஆங்கிலத்திலுள்ள <sch> ஐ ஒத்திருக்கும். எடுத்துக்காட்டாக, அல்பானியன் மொழியில் <sh> என வழங்கப்படுவதுடன் துருக்கிமொழியில் <, ş > எனவும் ஸ்லாவிக் மொழிகளில் <š> எனவும் உச்சரிக்கப்படுகின்றது. அகரமுதலியிலுள்ள எழுத்துக்களின் தொடர்ச்சி எல்லா இடங்களிலும் தெளிவாக இனங்காண முடிவதில்லை. எடுத்துக்காட்டாக, துர்கிஷின் ö, ü ஆங்கில o மற்றும் u சொற்களின் ஒலிப்பைப் பின்பற்றுகின்றன. அதே சமயம் ஜேர்மனில் அவை ஒத்துப்போகின்றன. அத்துடன் ஆங்கிலம் மற்றும் போத்துக்கேய மொழிகளில் அவை எப்போதும் காணப்படுவதில்லை. பிள்ளைகள் தமது முதல் மொழியில் தடையின்றி படிக்கவோ பேசவோ வேண்டுமெனில் அவர்கள் இவ் அனைத்துச் சிறப்புப் பகுதிகளையும் வீட்டிலோ பா.மொ.க விலோ கற்றுக்கொள்ள வேண்டும். புலம்பெயர் நாட்டின் மொழியைக் கற்றுக்கொள்வதிலுள்ள குழப்பத்தைத் தவிர்க்க வகுப்பின் முதலாம் வருட நிறைவிலோ அல்லது இரண்டாம் வருடத்தின் தொடக்கத்திலோ இச் சிறப்புப் பகுதிகளை பல பாரம்பரிய மொழி ஆசிரியர்கள் அறிமுகம் செய்துவைப்பர். இலத்தீன் எழுத்துக்கள் அல்லாத ஏனைய மொழியின் எழுத்துக்களைப் பயன்படுத்தும் போது அனைத்து எழுத்துக்களும் முதல்மொழியில் அமையவேண்டும்.

### ஆ) முதல் மொழியின் இயல்புநிலை வேறுபாட்டுடன் தொடர்புடைய சிக்கல்கள்

பல சிறுவர்களும் இளைஞர்களும் தமது முதல் மொழியின் பேச்சுமொழியிலே கதைக்கின்றனர். இது அம் மொழியின் எழுத்து வடிவத்திலிருந்து காலத்துக்குக் காலம் பாரியளவில் வேறுபடக்கூடியதாகவுள்ளது. (எடுத்துக்காட்டாக, பல தென் இத்தாலிய மொழிகளில் அல்லது வட அல்பானியன் பேச்சுமொழிகளில் காணலாம்).இவை படிப்பில் மிகப் பாரிய சிக்கல்களை உருவாக்கலாம்.(ஒருவர் பேச்சுமொழியிலும் கூட எழுதலாம் என்னும் வகையில் எழுத்தில் குறைந்த சிக்கலையே ஏற்படுத்தும்). ஒருவருடைய எழுத்துப் பண்பாட்டைப் பேணுதற்கான அணுகுதலுக்கு வருகின்ற போது எழுத்து மொழிகளுக்கான கண்காணிப்புடன் கூடிய அறிமுகம் பா.மொ.க வின் இன்றியமையாத பணியாகும். தம் நாட்டின் எழுத்து அல்லது தம் மொழியின் இயல்பு மாறுறுடன் எவ்வித தொடர்பில்லாத அல்லது குறைந்த தொடர்புடைய கல்வியில் வாய்ப்பற்ற குடும்பங்களின் பிள்ளைகளுக்கு சிறப்பாக இன்றியமையாததாகும்.

### இ) பாரம்பரிய பண்பாடு மற்றும் பெற்றோர் பக்கத்துணை குறைவு ஆகியவற்றோடு தொடர்புடைய சிக்கல்கள்.

கடினங்கள் சிக்கல்களின் பரிமாணம் இயல்பாகவே பா.மொ.க வுக்கு மட்டுமே குறிப்பிடத்தக்கது என்றல்ல ஆனால் அது பெற்றோர் கல்விகற்பதால் வரும் நன்மையில் அல்லது தீமையில் தங்கியுள்ளது. மேலோட்டமாகப் பார்த்தால் நூல் படிப்பதையும் எழுதுவதையும் பழக்கமாகக் கொண்ட சிறுவர்களும் இளைஞர்களும் இவ் இன்றியமையாத வேண்டுகைகள் இல்லாதவர்களைக் காட்டிலும் எழுத்து மற்றும் பாடநூல் சார்ந்த பள்ளிகளிலும் சங்கங்களிலும் வெற்றி அடையக்கூடிய மிகச்சிறந்த இடத்தில் உள்ளனர். குறிப்பாக இது முதல்மொழியில் படிப்பதை உள்ளடக்கு கின்றது. அதேவேளை பள்ளி மொழியில் படிப்பது பல ஆண்டுகளாக வழமையான வகுப்பறைக் கற்பித்தலில் ஊக்கமாக பயிலப்படுகின்றது. இக் குறைபாட்டினை ஈடுசெய்வதில் பா.மொ.க மிக இன்றியமையாத பங்கினை வகிக்கின்றது. பெற்றுக்கொண்ட தகைமைகள் குறிப்பிட்ட மாணவர்களுக்கு பா.மொ.க வில் மட்டும் நன்மையளிப்பதோடு மட்டுமல்லாது அவர்களுடைய வழமையான வகுப்பறைக் கல்விக்கும் நன்மையளிப்பதால் இது மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். இச் சிக்கல் தொடர்பான மேலதிக விவரங்கள் “Foundations and Backgrounds” எனும் நூலின் 1,2, மற்றும் 8ஆம் இயல்களிலும் Sträuli et al (2005) நூலின் 130ஆம் பக்கத்திலும் நூற்பட்டியலிலும் காணலாம்.

"பா.மொ.க வின் மாணவர்கள் தமது முதல் மொழியில் படிக்கும்போது எதிர்நோக்கும் சிக்கல்கள் யாவை?" எனும் வினாவுக்கு விடையாக இவ் இதழ் வெளியீட்டிற்கு முன் மொழிக்கற்பித்தல் ஆசிரியர்களிடம் ஒரு சிறு கருத்துக் கணிப்பை நடத்தினோம். மேற்குறிப்பிட்ட மூன்று வகைப் பாடுகளுக்கு அமைவான விடைகள் பின்வரும் எடுத்துக்காட்டுகளிலிருந்து வெளிப்படுகின்றன.

- "அல்பானியன் மொழியிலுள்ள ç q, xh, sh, gi, etc. எழுத்துக்களின் ஒலிப்புக்களுக்கிடையிலான வேறுபாட்டை மாணவர்களால் தெளிவாக வெளிப்படுத்த முடியவில்லை, அத்துடன் எமது எழுத்து மொழியுடன் அவர்களுக்கு சிக்கல்களுமுண்டு".

- "துர்கிஷ் மொழியின் சிறப்பு எழுத்துக்களை ஒலிப்பதில் சிக்கல்கள் உள. மேலும், அவர்களது சொற்களஞ்சியம் குறைவான எழுத்துக்களைக் கொண்டிருப்பதால் அவர்களால் பல சொற்களை அடையாளங் காணமுடியவில்லை".

- "எமது மொழியின் சிறப்பு எழுத்துக்கள் மற்றும் வேறுபட்ட எழுத்துக்களின் ஒலிப்புக்களின் உறுதியற்ற தன்மைகளே எமது பிரச்சினை. இயல்பாகவே, வழமையான வகுப்பறைக் கற்கையின் போது மாணவர்கள் இந்த வேறுபாடுகளைக் கற்றுக்கொள்ள மாட்டார்கள். சிறுவர்களுக்கு இவற்றை நான் மிகக் கவனமாகக் கற்பித்துப் பயிற்சியளிக்க வேண்டும், இல்லாவிடில் தமது ஒலிப்புக்களில் தொடர்ந்தும் தவறிழைப்பார்கள் அல்லது பல எழுத்துக்களில் குழப்பத்தை எதிர்கொள்வர்".

- "கிழமையில் குறைந்த மணித்தியாலத்தைச் செலவிடுதல் மற்றும் எழுத்து மொழியில் மாணவர்களின் தொடர்பு கொள்ளும் வாய்ப்பில் காணப்படும் சிக்கல் படிக்கப் பழகுவதில் ஏற்படும் சிக்கல்தன்மைக்கு வழிவகுக்கின்றது. பெரும்பாலான மாணவர்கள் தமது பேச்சுமொழியை வீட்டில் கதைப்பதுடன் அவர்கள் அரிதாகவே தமது பெற்றோரால் ஊக்குவிக்கப்படுகின்றனர்".

- மிகவும் அரிதாகவே வீட்டில் படிப்பதாலும் பெரும்பாலான மாணவர்கள் பா.மொ.க வில் மட்டும் முதல் மொழியில் படிப்பதனாலும் முதல் மொழியில் படிப்பது அவர்களுக்கு மிகக் கடினமாகவுள்ளது. மற்றுமொரு கடினம் என்ன வெனில் அவர்கள் வீட்டில் பேச்சுமொழியை மட்டுமே பேசுகின்றனர். ஆகவேதான், எழுத்து மொழியிலுள்ள சொற்களைப படிப்பதிலும் விளங்கிக்கொள்வதிலும் அவர்களுக்குக் கடினம் உண்டு. அவர்கள் அவற்றைக் குறைவாகவே விளங்கிக்கொள்கின்றனர்.

- கணிசமான படிப்புப்பயிற்சியின்மையே மாணவர்களின் முதன்மையான சிக்கலாகும். அதற்குப் பல காரணங்களுண்டு.

  a) பெற்றோரும் மிகக் குறைவாகவே படிப்பர் அவர்கள் படிப்பதைப் பிள்ளைகள் மிக அரிதாவே காண்பர்.

  b) பிள்ளைகளுக்குக் கதைகள் படிக்கப்படுவதில்லை, மிக அரிதாகவே எப்போதாவது படிக்கப்படுகிறது.

  c) அவர்கள் தம்முடைய நாட்டில் தங்கியிருக்கும்போது பெரும்பாலும் வாய்மொழித் தொடர்பாடலையே பயன்படுத்துகின்றனர்.

- "மாணவர்கள் பொதுவாக குறைவாகவே படிக்க ஊக்குவிக்கப்படுகின்றனர். தமது தாய்மொழியில் படிப்பதில் சிக்கல்கள் காணப்படுவதால் படிப்பு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது".

படிப்புத் தகைமைகள் (அதேபோல் எழுதும் தகைமைகள் மற்றும் மொழியைக் கற்றுக்கொள்வதற்கான ஏனைய உத்திகளும் மதிநுட்பங்களும்) சில மொழிகளில் காணப்படுவதில்லை. அவை ஒருமுறை உள்வாங்கப் பட்டதன்பின் ஒருவரின் ஏனைய மொழிகளுக்கு எளிதாகக் கடத்திக்கொள்ளலாம் அதேபோல் இம்மொழிகளிலும் பயன் படுத்தலாம். இக்காரணத்தினால் முதல் மொழியில் படிப்புத் திறனை மேலும் கூட்டுதற்கு பா.மொ.க முயற்சிக்கின்றது, அத்துடன் அதுவே அவர்களுடைய வழமையான கல்வி வகுப்புகளிலும் துணைசெய்கின்றது. மாணவர்களுடைய படிப்புத் தகைமையை உருவாக்க பா.மொ.க மற்றும் வழமையான வகுப்பறைக் கல்வி ஆகியன ஒத்துழைப்பு வழங்குமானால் அது மிகவும் விரும்பத்தக்கது. இந்தப் பண்பும் எமது கணக்கெடுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

- தமது பள்ளி மொழியில் நன்றாகவும் தடுமாற்றம் இன்றியும் படிக்கும் மாணவர்கள் தாய் மொழியிலும் சிறப்பாகப் படிப்பர். படிப்புத் தகைமைகள் மொழியை மேம்படுத்துகின்றன.

- படிப்பு பயிற்சி பெறவேண்டிய ஓர் உத்தியாகும். ஒரு மொழியில் இவ் உத்தியில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஒருவர் அதனை பயன்படுத்தக்கூடியவராக மாறுவதுடன் ஏனைய மொழிகளிலும் அதனைப் பயன்படுத்தக் கூடியவராக இருப்பார். மேலும், பிள்ளையொன்று ஒருமொழியிலோ அல்லது பல மொழிகளிலோ படிக்க விரும்பினால் உலகத்தோடு தொடர்பை ஏற்படுத்திக்கொள்வது, அனைத்து மொழிகளிலும் நோக்கத்தோடு படித்தல் மற்றும் பயிற்சியெடுத்தல் மிக இன்றியமையாதது. அனைத்து மொழிகளிலும் படிக்கும்போது பயன்படுத்தவேண்டிய உத்திகள், நுட்பங்களில் பெரும்பாலானவற்றை ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்தலாம் என்பதில் தெளிவாயிருக்க வேண்டும்.

- பா.மொ.க ஆசியர்களுக்கும் வழமையான பாடசாலைக்கும் இடையிலான நெருங்கிய கூட்டிணைவு மிகப்பெரும் நன்மையாக அமையும். இவ்வாறு, இப் படிப்புப் பரப்பிலுள்ள மாணவர்களுக்கு பக்கத்துணை ஆற்றுதற்கு அவை இரண்டும் சிறப்பாகவும் செயல்த் திறன் மிக்கதாகவும் தொழிற்படும்.

## 2. இந் நூலின் நோக்கங்களும் கட்டமைப்பும்.

மேலே விவரிக்கப்பட்டது போல் முதல்மொழியில் படித்தலும் எழுதுதலும் வேறு எத் திறனைப்போலும் ஒருவரால் குடிபெயர் நிலையில் கைவிடக்கூடியவையல்ல. மாணவர்கள் தமது முதல் மொழியில் எழுதப்பட்ட தகவலை பெற்றுக்கொண்டு வேலைசெய்யக்கூடியவர்களாக இருக்கவேண்டும் என்பது அவர்களுடைய முழுமையான இருமொழிப் பண்பாட்டு வளர்ச்சிக்கு பிரிக்கமுடியாத முன்கட்டுப்பாடாகும். மேலும், புலம்பெயர் நாட்டின் பள்ளி மொழியில் திறமைகளை உள்வாங்கிக்கொள்ள தாய் மொழியில் அடைந்த தேர்ச்சி துணைசெய்கின்றது. மிகச்சிறந்த தெரிவுத் தகைமையாக, பள்ளியில்

வழமையான கல்வி வகுப்புக்களின் வெற்றிக்கு இதுவும் அடிப்படையாக அமைகின்றது.

இவ் வெளியீடு தமது தாய்மொழியிலே படிப்பதற்கும் படிப்பதால் கிடைக்கும் மகிழ்ச்சியைக் கண்டறியும் மாணவர்களின் திறமையை ஊக்குவிக்கும் ஆசிரியர்களின் செயற்பாட்டுக்குப் பக்கத்துணை வழங்கவும் முயற்சிக் கின்றது. மேலும், தடையின்றிப் படிப்பதை முன்னேற்றுதல், பொருளை விளங்கிக்கொள்ளல், அதேபோல் தமது மாணவர்களுடன் இணைந்து வடிவமைக்கப்பட்ட உரையைப் படிப்பதால் உண்டாகும் மகிழ்ச்சியினைக் கண்டுபிடித்தல் போன்ற படிப்புத்தகைமையின் வேறுபட்ட பரப்புகளை மேலும் வேறுபடுத்திப் பார்க்கவும் எடுத்துக்காட்டுகளுடனும் வழிகளுடனும் ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தலை வழங்குகின்றது.

இப் பணிநூலுக்கான அறிமுகம் பா.மொ.க வின் இன்றியமையாத சிக்கல்களுக்கான நுட்பமான சில வழிகளைக் குறிப்பிடுவதுடன், குறிப்பிடத்தக்க இன்றியமையாத சில கருத்துக்களில் கண்காணிப்புச் செலுத்தி தற்காலப் படிப்பு நெறிமுறைகளையும் வழங்குகின்றது. இரண்டாவதாக, பயிற்சிப் பகுதி, படிப்பை ஊக்குவிக்கும், படிப்புப் பயிற்சி மற்றும் இலக்கிய பண்பாட்டுக் கல்வி ஆகிய பகுதிகளுக்கு 30 குறிப்பிடத் தக்க பயிற்சி மதியுரைகளைக் கொண்டுள்ளது. இம் மதியுரைகள் குறிப்பாக ஆசிரியர்களை நோக்காகக் கொண்டன. வகுப்பறைக் கற்பித்தலின்போது நேரத்தை எடுத்துக்கொள்ளும் சுமையாக அமையாமல் இவை எளிதாக நடைமுறைப்படுத்த முடியும். அத்துடன் படிப்புக் கருவிகளுடன் அவை எப்படியும் கலந்துரையாடப்படுகின்றன. வெவ்வேறு அகவை மட்டங்களிலுள்ள மாணவர்களுக்கு அகவைக்கு ஏற்றாற்போல் குறிப்பிட்ட அகவை மாற்றங் களைச்செய்து பெரும்பாலான மதியுரைகள் நடைமுறைப் படுத்தப்படக்கூடியன. பெரும்பாலான வகுப்புகள் அகவை வேறுபாட்டைக் கொண்டிருப்பதாலும் பல்வேறு மட்டங்களில் அவை அம் மாணவர்களை ஒன்றிணைத்தே நடை பெறுவதாலும் இவ் அணுகுமுறையானது பா.மொ.க சூழ்நிலைகளில் சிறந்த பதிலைத் தருகின்றது.

## 3. தற்போதைய படிப்புக் கற்பித்தலின் முக்கிய பண்புகள்

படிப்பை ஒரேநாளில் கற்றுவிட முடியாது. தனித்தனி எழுத்துக்களை மெதுவாகக் கண்டறிவதிலிருந்து ஒரு நூலினை முழுமையாக படிப்பது வரையான பாதை மிகக் கடினமானதாகும். பெரும்பாலான சிறுவர்களையும் இளைஞர்களையும் இச்செயற்பாட்டில் ஈடுபடுத்தி பக்கத் துணை வழங்கவேண்டும். பல்வேறு வகையான படிப்பிற்காக சிறுவர்களை வளர்த்தெடுக்கும் இளைஞர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் இச்செயற்பாட்டிற்கு இன்றியமை யாதவர்கள். படிக்கும் சிறுவர்களுக்கு அவர்கள் முன் மாதிரியானவர்களாக விளங்குவதுடன் மாணவர்களுடன் படித்த கதைகள் பற்றிக் கலந்துரையாடுவார்கள். இது சிறுவர்கள் பள்ளி செல்வதற்கு மிக நீண்ட காலத்திற்கு முன் தொடக்கப்படவேண்டும். பெற்றோர் படங்களுடைய நூல்களை படித்து அதைப் பார்த்து அது தொடர்பாகத் தமது பிள்ளைகளுடன் கதைத்தால் அல்லது அவர்களுக்கு கதைகளை படித்துக் காட்டி அது தொடர்பாகக் கதைத்தால் தொடக்கப் படிப்பு முறைக்கு மிகவும் சிறந்ததாகும். படிப்பில் ஈடுபடும் இளைஞர்களின் பட்டறிவு அறிக்கையின் அடிப்படையில் அவர்களின் படிப்பை ஊக்குவிப்பதற்கான மிகப் பயனுள்ள கல்விசார் ஊக்குவிப்பை வழங்குபவர்கள் தங்களை படிப்பவர்கள் என வெளிப்படுத்தும் ஆசிரியர்களாவர். இவர்கள் மாணவர்களின் படிப்புக் கருவிகளைத் தெரிவு செய்வதில் ஆர்வம் காட்டுவார்கள், அவர்களுக்கு பல்வேறு வகையான நூல்சார் அறிவிருக்கும். மேலும் அவர்கள் தாம் படிக்கும் படிப்புக் கருவியினைப் பற்றி கற்பவர்களுடன் ஊக்கமளிக்கும் கலந்துரையாடல்களைத் தொடக்கி அவற்றை வழிநடத்திச்செல்லக்கூடியவர்கள்.

மகிழ்ச்சியுடன் நன்றாக படிப்பதற்கு - வெற்றிகரமான படிப்பு மேம்பாட்டுக்கு இவ் இரண்டு பண்புகளும் மிகவும் இன்றியமையாத முன்கட்டளைகளாகும் என்பதுடன் அவை ஒன்றிலொன்று தங்கியுள்ளன. குறித்த பொருளை படிப்பதால் கிடைக்கும் மகிழ்ச்சி மற்றும் எதை வெளிப்படுத்துகின்றனர் என்பதில் ஆர்வங்கொண்டவர்கள் மட்டுமே மேலும் அதை முன்னெடுத்துச்செல்ல வேண்டுமென எண்ணுவர். குறிப்பாக அதிகமாக முயற்சிக்கும் வழியை முன்னெடுப்பர். மாறாக, மாணவர்கள் மேலும் படிப்பில் பிழைகளின்றி மகிழ்ச்சியாக ஈடுபடுத்துவதற்குக் குறித்த படிப்புக் கருவிகள், படங்கள் மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றில் சில திறமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதால் படித்தலைக் கற்பிப்பதற்குக் கைக்கொள்ளும் அணுகுமுறையினை மேலும் கூட்டுதற்குப் பல்வேறு பொருட் பரப்புக்களில் கவனத்தைச் செலுத்த வேண்டும். அவை படிப்பை முன்னேற்றுதல், படிப்புப் பயிற்சி மற்றும் இலக்கிய-பண்பாட்டுக் கல்வி ஆகிய மூன்று பண்புகளில் வேறுபடுத்தப்படலாம். இம் மூன்று பொருட் பரப்புக்களும் ஒன்றையொன்று முழுமைப்படுத்துகின்றன. ஆனால் அவற்றிற்குத் தேவைப்படும் தகைமைகள் ஒரே நேரத்தில் ஒரே பொருட் பரப்பில் பயில முடியாது. குறிப்பாக இது தாய்மொழிக் கல்விகற்றல் மற்றும் தாய் மொழியில் படித்தல் ஆகியவற்றிற்கு பயன்படுத்தப் படுகின்றன. எவ்வாறாயினும் பல்வேறு வழிகளில் தனியாள் பகுதி பொருட் பரப்புக்கள் வேறுபடுத்தப்பட்ட விடயப் பரப்புக்கள் மற்றும் கணிப்பீடுகளினூடாகக் கற்பிக்கப்படவும் பயிற்சியளிக்கப்படவும் முடியும். இது முதல்மொழியில் எழுத்தறிவைப் பெற்றுக்கொள்ளவும் அதேபோல் புலம்பெயர் நாட்டின் மொழியில் எழுத்தறிவைப் பெற்றுக்கொள்ளவும் நன்மையான விளைவைக்கொண்டுள்ளது. இந் நூல் ஏராளமான கருத்துகளின் தொகுதியையும் இம் மூன்று பரப்பிற்கும் ஒப்படைகளையும் வழங்குகின்றது.

#### அ) படிப்பை ஊக்குவித்தல்

மாணவர்களை படிப்பில் ஈடுபடுத்துவதில் வெற்றிகாண்பதே படிப்பை ஊக்குவிப்பதன் குறிக்கோளாகும். அவர்கள் பாடப்பரப்பு மற்றும் நூல்களில் ஆர்வம் மிகுந்தவர்களாக மாற வேண்டும். அவற்றிலிருந்து தமது ஆர்வத்திற்கு ஏற்றாற்போல் தெரிவுசெய்யக்கூடியவர்களாக இருக்க வேண்டும். மிகச் சிறந்த நூல்கள் மற்றும் பாடப் பரப்புக்களைப் பற்றிய பட்டறிவைக் கொண்டிருக்க வேண்டுமென்பதுடன், அவற்றின் பொருட்பரப்பை படிப்பது எவ்வளவு எதிர்பார்ப்பு நிறைந்ததாகக் காணப்படும் என்பதை அவர்கள் பட்டறிவின் வாயிலாகக் கண்டடைய வேண்டும். மாணவர்கள் முதல்மொழியிலும் அதேபோல் பள்ளி மொழியிலும் படிப்பது பள்ளியிலும் அதேபோல் வீட்டிலும் ஒரு இயற்கையான செயற்பாடாக மாறவேண்டுமென்பதே படிப்பின் குறிக்கோளாகும்.

இவ் இலக்கின் பார்வையில் பரந்தளவில் ஏலவே காணப்படும் பொருள்களை வழங்குவது மிக இன்றியமையாததாகும். அதன்மூலம் பெரும்பாலான மாணவர்கள் தாம் ஈடுபடும் படிப்பில் ஓர் ஈடுபாட்டினைக் காணமுடியும். இவ் அடிப்படையில் பல்வேறுவகையான நூல்களின் தெரிவு, நூல்களை மட்டுமல்லாது கற்பனையல்லாத தலைப்புக்களின் தகவல்களைக்கொண்ட இணையத்தளத்திலிருந்து உரையாடலை மேற்கொள்ளக்கூடிய வசதிகள் மற்றும் இலத்திரனியல் நூல்கள் உள்ளடங்கலாக சஞ்சிகைகள்,

செய்தித்தாள்கள், நகைச்சுவைப் பக்கங்கள், புகைப்படம், மற்றும் படங்களுடைய நூல்கள் எனபவற்றைக் கொண்டிருக்க வேண்டும்.

குறைந்தளவிலான வாசிப்பு ஊக்கத்தைக்கொண்ட மாணவர்களைக் கையாளும்போது சில வேளைகளில் படிப்பிற்குத்தேவையான அமைதியை வெளிப்படையாக வேணடுவது தேவைப்படலாம். இச் சிறுவர்களும் இளைஞர்களும் தமது நூல்களையும் பொருட்பரப்பையும் படிப்பதற்குத் தமது மேசையில் அமைதியாக இருக்கப் பழகவேண்டும். அத்துடன் அவர்கள் எந்தப் பொருள் தொடர்பாக எவ்வளவு படித்தார்கள் என்பதற்குத் தமக்குப் பொறுப்புக்கூறக் கூடியவர்களாக இருக்க வேண்டும். இந்த வழியில்தான் சில மட்டத்திற்கான விடாமுயற்சியைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அது தொடர்பாகப் பயிற்சியும்பெறலாம். இது அவர்களின் படிப்புத்தெரிவு அடிக்கடி கைவிடப்படவில்லை என்பதை உறுதிசெய்கின்றது.

படிப்பை ஊக்குவிக்கும் கல்வி அணுகுமுறையானது மாணவர்கள் தமது படிப்பின்போது ஐயங்களைத் தீர்க்க அணுகும் வழிகாட்டிகளையும் தமது படிப்புத்தொடர்பான பட்டறிவுகள் மற்றும் தகவல் பரிமாற்றத்திற்கும் கலந்துரையாடுவதற்கும் தமது ஒரே வயது படிப்பவர்களையும் அடையாளங் கண்டுகொள்வதையும் இது உறுதிப் படுத்துகின்றது. பல்வேறு வயதுமட்டத்திலுள்ள மாணவர்களைக்கொண்ட வகுப்பறை மற்றும் குழுக்களில் வயது கூடிய மாணவர்கள் இன்றியமையாத முன்னெடுத்துக்காட்டுகளாத் திகழ்வார்கள்.

படிப்பை ஊக்குவித்தல் பின்வரும் நோக்கங்களில் பெரும்பாலானவற்றைக் கொண்டுள்ளது.

- நூல்கள் மற்றும் எழுத்துக்கள் மற்றும் படங்களோடுள்ள ஏனைய ஊடகங்களின்பால் முதலில் ஆர்வத்தைத் தூண்ட வேண்டும்.

- பல்வேறு வகையான அதிகளவிலான எழுத்துருக்களைக் கையாள்வதற்கு மாணவர்களுக்கு தகைமை வழங்கக் கூடியதாக இருக்கவேண்டும். அத்துடன் பொருத்தமான கற்றலுக்கான துணை மற்றும் மதிநுட்பங்களையும் வழங்கவேண்டும்.

- எழுத்துலகில் அனைத்து வழிகளையும் திறந்துவிடுவதுடன் படிப்பை அன்றாட வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி விவரித்தல் மற்றும் ஒருவர் வாழும் தன் சுற்றுச்சூழலில் பல்வேறு தொடர்பைக் கொண்டிருப்பதையும் விவரித்தல் (ஆள் ஒருவரின் தன் - விருப்பில் எழுத்துருக்களைத் தெரிவுசெய்தல், ஒரே தலைப்பிற்கு வேறுபட்ட ஊடகங்களைக் கையாளுதல் மற்றும் முதல் மற்றும் இரண்டாம் மொழிகளிலுள்ள பொருளின் பயன்பாடு மற்றும் பல). இந்த வகையில் தான் புதிதாக படிப்பவர்கள் படிப்பில் வெற்றிபெறலாம் (வெற்றிபெற வேண்டும்) ஊக்குவிக்கப்படலாம் (ஊக்குவிக்கப்பட வேண்டும்).

- படிப்பை ஊக்குவிப்பது படிப்பினால் அடையக்கூடிய மகிழ்ச்சிக்கு இட்டுச்செல்ல வேண்டும். அப்போதுதான் சிறுவர்களும் இளைஞர்களும் பாடசாலை நூல்களையும் பொருளை மட்டும் படிப்பதோடு நின்றுவிடாது கற்கை நெறி தொடர்பாக தமது வழமையான செயற்பாட்டின் ஒரு பகுதியாக தமது முதலாம், இரண்டாம் மொழிகளிலுள்ளவற்றைப் படித்து அதனில் ஈடுபடுவார்கள்.

### ஆ) படிப்புப் பயிற்சி

இலக்குப் பயிற்சியினூடாக தடையற்ற முறையில் படித்து அறிந்துகொள்வதை ஒரு சிறந்த படிப்புப் பயிற்சி நோக்காகக்கொண்டது. நன்றாக தடையின்றிப் படிக்கக் கூடியவராக இருப்பது அறைகூவலானதாகும். பெரும்பாலும் கல்வியறிவற்ற குடும்பத்திலிருந்து வரும் சிறுவர்களையும் இளைஞர்களையும் குறிப்பிட்ட அளவீடுகளைக் கொண்டு பக்கத்துணை வழங்காதவிடத்து அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள். அனைத்து மட்டங்களிலும் வேறுபட்ட படிப்புப் பயிற்சி மாதிரிகளை மேற்கொள்வது ஊக்கமான படிப்புச்சூழலுக்கு மிக இன்றியமையாததாகும். இப் பயிற்சிகள் அடிப்படைப் படிப்புத் திறன்கள், தடையின்றி படித்தல்(துல்லியம் மற்றும் வழக்கமான)அத்துடன் படிப்பு நுட்பங்கள்(சிக்கலானவற்றைச் சிறப்பாக விளங்கிக் கொள்வதற்கு துணைசெய்கின்றன) ஆகியவற்றில் கண்காணிப்புச் செலுத்துகின்றன.

ஆகவேதான், படிப்புப் பயிற்சி படிப்பிற்கான ஊக்கத்தால் முதன்மை முறையில் வழிநடத்தப்படுவதில்லை. இதன் நோக்கம் மாணவர்களின் படிப்பு இயலுமைகளை ஊக்குவிப்பதற்கான ஓர் இலக்கு நோக்கிய பயிற்சியாகும். இது கட்டமைக்கப்பட்ட திறன்சார் பயிற்சிகள், ஒரே எழுத்துருவுடனும் மதிநுட்பத்துடனும் மீண்டும் மீண்டும் படிப்புப் பயிற்சிகள் ஆகியவற்றுடன் அமைவன. அத்துடன், இது மிகவும் அறைகூவலான எழுத்துருக்களை மாணவர்கள் நன்கு விளங்கிக்கொள்ள துணைசெய்வதற்காக வடிவமைக்கப்பட்டதாகும்.

படிப்புக் கற்பித்தல் மூன்று நடுவப் பயிற்சிப் பரப்புக்களிடையே வேறுபாடு காண்கிறது. இவை முதல் மொழியில் படிப்பதற்கும் பயன்படுகின்றன என்பது சொல்லாமலே விளங்குவதாகும்:

#### 1. படிப்பு திறன்கள்

இப் பரப்பு முதன்மையாக எழுத்து, சொல், வாக்கியம் ஆகிய மட்டங்களில் படிப்பின் தொழில்நுட்பப் பண்புகளைக் கொண்டுள்ளது அதேவேளை பல மாணவர்கள், குறிப்பாக இளையவர்கள், போதுமான அளவுக்குத் தகைமையைக் கொண்டிருப்பதில்லை. அவர்கள் தன் நாட்டு மொழியின் வரிவடிவங்களையும் எழுத்துகளையும் அடையாளங்கண்டு குறிநீக்கல் மற்றும் வாக்கியத்தின் பகுதிகளை வாக்கியங்களுடன் இணைத்தல் தொடர்பாக சிக்கல்களைப் பட்டுணர்கின்றனர். இது குறிப்பாக பாடசாலை மொழியிலிருந்து(மேலே பாரக்கவும்) தாய்மொழியின் குறியீட்டு அமைப்பு மற்றும் ஒலியனியல் அமைப்பு வேறுபடுகின்றபோது செயற்படுத்தப்படுகின்றது. இதன் முடிவாக, பா.மொ.க மாணவர்களின் தாய்மொழியில் வரிவடிவ எழுத்துக்களிலும் எழுத்து அமைப்பிலும் கண்காணிப்புடன் கூடிய அறிமுகத்தை வழங்குவதுடன் முறையான சொல்லகராதி வளர்ச்சி மற்றும் மிகச் சிக்கலான வாக்கிய அமைப்புக்களில் ஈடுபடுவதிலும் சிறந்த பக்கத்துணையை வழங்குகின்றது.

#### 2. தங்குதடையற்ற படித்தல்

தங்குதடையின்றிப் படிக்கும் பயிற்சி, கல்விசார் நடை முறையில் குறிப்பிடத்தக்க முறையில் தொடர்பு பட்டிருந்தாலும், நல்லூழின்மையால், அது கல்விப் பயிற்சியில் முழுமையாக ஆழப்பதியவில்லை. ஒப்பீட்டளவில் மிக வேகமாகவும் வழுக்கள் இன்றியும் படிக்கும் ஒரு கற்பவர் ஓர் எழுத்துருவினுள்ளே சென்று அதன் உள்ளடக்கத்தை விளங்கிக்கொள்வதில் குறைந்தளவிலான கடினத்தையே எதிர்கொள்வார். பயிற்சி

பெற்ற படிப்பவர்கள் அவர்களுடைய படிப்புச் செயற்பாட்டின் ஏராளமான தொழில்நுட்பப் பண்புகள் பெருமளவில் தானியங்கு நிலையிலுள்ளதால், அவர்கள் எழுத்துருவை அதிகளவில் விளங்கிக்கொள்ளுதலிலே கருத்தூன்றும் திறமையுடையவராவார். மாறாக, குறைந்த அளவில் தங்கு-தடையின்றிப் படிப்பவர்கள், படிப்புச் செயற்பாட்டில் குறியீடுகளை விளங்கிக்கொள்ளல் மற்றும் ஏனைய தொழில் நுட்பப் பண்புகளுக்காகத் தமது வலுவின் ஒரு பகுதியை முதலிட வேண்டும். ஜேர்மன் ஆய்வின் புதிய முடிவுகள் தங்குதடையின்றிப் படிப்பதற்கான பயிற்சிக் காலத்தில் தம்முடைய படிப்புச் செயற்பாடுகள் தொடர்பாக மாணவர்கள் தமது வாசிப்புச் செயற்பாடுகளுக்கு புதியதும் நீண்டகால நிலையானதுமான தன் எண்ணக்கருவை உருவாக்கக் கூடியவர்களாக இருந்தார்கள் என்பதைக் காட்டுகின்றன. இப் பயிற்சி நிலையை நிறைவுசெய்த பின், அவர்கள் மிகவும் தகுதிவாய்ந்தவர்களாக உணர்ந்ததுடன் மிகச்சிறந்த ஊக்குவிக்கப்பட்ட படிப்பாளர்களாகவும் தம்மை அடையாளங் கண்டுகொண்டுள்ளனர். இது படிப்புக்கான பாரிய ஊக்குவிப்புக்கு இட்டுச்செல்கின்றது. இது ஓர் அடிப்படையான உண்மையை உறுதிப்படுத்துகின்றது: மிக நன்றாக படிக்கக் கூடியவர்கள் படிப்பதை விரும்புகின்றனர். படிப்பை விரும்புகின்றவர்கள், பெருமளவில் படிப்பார்கள். பெருமளவில் படிப்பவர்கள் நன்றாகப் படிப்பார்கள்.

## 3. படிப்பு மதிநுட்பங்கள்

நன்றாகப் பயிற்சி பெற்ற நல்ல படிப்பாளர்கள் தம்மால் முடிந்தவரை விரைவாகவும் முழுமையாகவும் விடயப் பரப்பைப் விளங்கிக்கொள்ள அவர்களால் செய்யக்கூடியது எது என்பது அவர்களுக்குத் தெரியும். அவர்கள் பொருளை உரைவிளக்கஞ் செய்வதற்கு பல்வேறுபட்ட மதிநுட்பங்களைப் (சில வேளைகளில் தங்களுக்கே தெரியாமல்) பயன்படுத்துகின்றனர் என்பதுடன் சிறந்த படிப்பை எதிர்பார்த்து இயல்பாகப் படிப்பதில்லை. எடுத்துக்காட்டாக, அவர்கள் முன்பே தற்காலிக வாசிப்புத் திட்டத்தை ஏற்பாடு செய்வதுடன் இத் திட்டத்திற்கேற்பவும் அவர்களின் இலக்குகளிற்கேற்பவும் வேறுபட்ட வழிகளில் படிக்கவேண்டிய எழுத்துருவைப் படிப்பார்கள். படித்தலைக் கற்பிப்பதற்கான அணுகு முறைகளில், படித்தலுக்கான மூன்று வேறுபட்ட வகைகளிலான படிப்பும் படித்து விளங்குதலும் காணப்படுகின்றன. இவை பொருத்தமான எழுத்துருக்களை அடிப்படையாகக் கொண்டு வகுப்பறைகளில் இயல்பாக பா.மொ.க விலும் கூட வேண்டுமென்றே பயிற்சியளிக்கப்படவேண்டியன:

- இலக்குப்படுத்தப்பட்ட படித்து விளங்கல்: இது சில தகவலுக்காக இலக்குத் தேடுதலை செயற்படுத்துகிறது. அதாவது, ஓர் அகரமுதலியில் அல்லது தொலைபேசி நூலில், அல்லது ஒரு நேர அட்டவணையில் அல்லது ஒரு கற்பனைசாரா எழுத்துருவில்
- உலகளாவிய படித்துவிளங்கல்: இதன் இலக்கு ஒவ்வொரு சிறிய தகவலையும் தேவையின்றிச் சேமிக்காது எழுத்திலமைந்த விடயத்தின் கருத்துச் சுருக்கத்தை விளங்கிக்கொள்ளல். இலக்கிய எழுத்துருக்கள் அல்லது செய்தித்தாள் கட்டுரைகள் ஆகியவற்றோடு தொடர்புடையதாக இவ்வகையான படித்தல் அடிக்கடி நிகழ்கின்றது.
- விரிவான படித்து விளங்கல்: பெரும்பாலும் ஒரு எழுத்துருவின் ஒவ்வொரு தகவலையும் விளங்கிக் கொள்வதற்காக வேண்டப்படுவது (எ.டு. ஒரு செய்முறை, ஒரு தேர்வுக்கான அறிவுறுத்தல் மற்றும் பல).

பயிற்சிபெற்ற படிப்பாளர்கள் படிக்கும்போது விளங்கிக் கொள்ளும் செயற்பாட்டைத் தொடர்ச்சியாக உறுதிப்படுத்துகின்றனர். அத்துடன் விளங்கிக்கொள்வதில் எழக்கூடிய எவ்வித கடினங்களையும் எதிர்கொள்வர். ஒருவரின் படிப்பு மதிநுட்பங்கள் பற்றிய அறிவு மற்றும் அவற்றின் கட்டற்ற பயன்பாடு படித்தல் தகைமையின் குறிப்பிடத்தக்க பண்பினை எடுத்துக் காட்டுகின்றன. இம் மதிநுட்பங்களின் உண்மையான கற்பித்தல் வகுப்பறையிலுள்ள மாணவர்களுடன் ஒன்றிணைந்து எழுத்துருக்களூடாக தொழிற்படும்போது போது மிக நன்றாகச் செயற்படும், எ.டு. மேற்கிளம்பும் ஒரு வகுப்பறைக் கலந்துரையாடலின் ஒரு பகுதியாக. கண்காணிப்புள்ள ஓர் அறிமுகத்தைத் தொடர்ந்து மாணவர்களால் அவை உள்வாங்கப்படும் வரை வேறுபட்ட எழுத்துருக்களைக் கொண்டு மீண்டும் மீண்டும் இந்நுட்பங்கள் இயல்பாகவே பயிற்றுவிக்கப்பட வேண்டும். எழுத்துருக்களின் தன்மை மற்றும் உள்ளடக்கத்தை (புனைவல்லாதனவற்றை விளங்கிக்கொள்வதற்கான மதிநுட்பங்கள், கதைகளைச் சுருக்குதற்கான மதிநுட்பங்கள், அட்டவணைகளையும் வரைபடங்களையும் விளங்கிக்கொள்வதற்கான மதிநுட்பங்கள் மற்றும் பல) அடிப்படையாகக் கொண்டு அணுகுமுறையும் மதிநுட்பத்தைத் தேர்ந்தெடுக்கும் முறையும் வேறுபட வேண்டும். பொருத்தமான கற்பித்தற்கருவிகள் மற்றும் ஆலோசனைகளை "கற்பித்தற் கருவிகள் 5: பா.மொ.க வில் கற்றல் மதிநுட்பங்களையும் உத்திகளையும் கற்பித்தல்" என்னும் தொகுதியில் காணலாம், இயல் 03உம் படித்தலுக்கும் கற்பித்தல் வளங்களைப் (அகரமுதலிகள், உசாத்துணைகள், முதலியன) பயன்படுத்தலுக்கும் கூடுதலான மதிநுட்பங்களை வழங்குகின்றன.

படித்தல் திறன்கள், தங்குதடையின்றிப் படித்தல், படித்தல் மதிநுட்பங்கள் ஆகிய பரப்புக்களில் வித்தியாசமான பயிற்சிகளையும் எடுத்துக்காட்டுகளையும் வழங்குகின்ற இலக்கினை உடையதாக இத்தொகுதி அமைகிறது. அப்பரப்புகள் குறிப்பிட்ட வகுப்பின் அல்லது குழுவின் வேண்டுகைகளுக்கேற்பத் கொடுக்கப்படவேண்டும். குறைவுற்ற படிப்பாளர்கள் படித்தல் திறமைகள் பரப்பில் பெருந் தொகையான பயிற்சிகளைப் பயிற்சிசெய்யவேண்டும். வலுவுள்ள படிப்பாளர்கள் படித்தல் திறன் பயிற்சிகளை முழுமையாக அல்லது சிலவற்றைக் கைவிடலாம், அந்நேரத்தைத் தனிப்பட்ட படித்தல் பயிற்சிக்குப் பயன்படுத்தலாம். அன்றாட வகுப்பு எழுத்துருக்களை அடிப்படையாகக்கொண்டு தங்குதடையின்றிப் படித்தற் பயிற்சியினை மேற்கொள்ளல் குறிப்பாகப் பயன்மிக்கதாகும்.

### இ) இலக்கிய பண்பாட்டுக் கல்வி

இலக்கிய பண்பாட்டுக் கல்வி படைப்பாக்க (இலக்கிய) எழுத்துருக்களில் ஈடுபடும் மாணவர்களுக்கு செயல்முறைப் பட்டறிவினை வழங்குகின்றது. இது கவிதையிலும் மொழி விளையாட்டிலும் அல்லது வடிவமைக்கப்பட்ட இலக்கிய எழுத்துருக்களில் மகிழ்ந்திருத்தலிலும் உள்ள பாலுணர்வு மற்று விளையாட்டு மொழியுடனான தொடர்பு ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. உண்மையில் பா.மொ.க வின் முதன்மையான இன்றியமையாமை, தன் நாட்டு மொழி எழுத்துருக்கள் மற்றும் ஒருவருக்கு உரிய இலக்கிய வரலாற்றின் அடிப்படை அறிவை வயதுக்கு ஏற்பக்கற்பித்தல் ஆகியன. பா.மொ.க வின் உயர்நிலை வகுப்புகள் தம் நாட்டுமொழி இலக்கியத்துக்கும் மற்றும் தமது புலம்பெயர் நாட்டின் இலக்கியங்கள் மற்றும் உலக இலக்கியங்கள் ஆகியவற்றுக்கும் இடையே ஒப்பீட்டை மேற்கொள்ளுமானால் அவர்களது இலக்கிய எல்லையும் விரிவடையும்.

ஓர் அழகியல்சார் உணர்வினை மேம்படுத்துவதே மாணவர்களுக்கான முதன்மை இலக்காகும். அது கவிதை நடையாக உருவாக்கப்பட்ட எழுத்துருக்களில்

தொடர்ச்சியான பட்டறிவுகளை வழங்கும். எழுத்துருக்கள் மற்றும் நூல்கள், பாரம்பரிய கற்பனைக் கதைகள், புராணக்கதைகள் உள்ளடங்கலான நூல்கள் அதேபோல் கவிதைகள், கதைகள் அல்லது தற்கால நாவல்கள் ஆகியவற்றில் ஒரு நாட்டின் மக்களின் பண்பாட்டைப் பெரிய அளவில் உருக்காட்டுகின்றன. இவ்வாறான அனைத்து இலக்கிய வகைப்பாடுகளும் உள்ளடக்கம் மற்றும் வடிவம் ஆகியவை தொடர்பாக சில மொழியியல் விதிகளை உள்ளடக்கியுள்ளன, இவை அன்றாட அல்லது கற்பனை சாரா விடயங்களிலிருந்து குறிப்பிடத்தக்கதாக வேறுபடுகின்றன. உண்மையில் இவ்வேறுபாடுகளை பழைய மாணவர்களிடம் மேம்பாடடையச் செய்யமுடியும். எவ்வாறாயினும், முதலில் இலக்கிய எழுத்துருக்களைப் பகுப்பாய்வு செய்யாமலிருப்பதேயாகும். மாறாக முதலிலே இலக்கியத்துடன் தொடர்பேற்படுத்திக் கொள்வதும், அதைப் படிப்பதற்கும், மகிழ்வதற்கும் அதிக நேரத்தை அதனுடனே செலவிடுவதுமாகும்.

சிறிய பிள்ளைகளுக்கு ஆழமான புலன்சார் அழகியலைச் செவிமடுக்கும் பட்டறிவுகளை ஒத்த ஓசைப் பாடல் வரிகள், மொழியின் சந்தம், அத்துடன் வாசிப்புச் சூழ்நிலைகள் ஆகியவற்றை உருவாக்கக்கூடியதாகவுள்ளது. அவ்வாறான கேட்டல் பட்டறிவுகளை உணர்ந்தவர்கள் பின்பு அமைதியாக இலக்கியத்தை படிக்கும்போதும் கூட தொடர்ந்தும் தமது "உட்செவிக்கு" செவிமடுப்பர். கவிதை எழுத்துருக்களைப் படிக்கும்போது இது சிறப்பு இன்றியமையாமையைப் பெறுகிறது.

ஆசிரியரின் பக்கத்துணையுடனும் பொருத்தமான பயிற்சி ஒப்படைகளுடனும் ஆக்க மொழியிலமைந்த - எ.டு. ஒரு கவிதை அல்லது கதை வகுப்பறைப் படிப்பில் பகிரப்படும் எழுத்துருக்கள் மகிழ்வுக்கு மாத்திரமல்லாது பல்வேறு மட்டங்களில் விளங்கிக்கொள்வதற்கும் அடிப்படையாக அமைகின்றது. பரிமாற்றத்தினூடாகவும் விளங்கிக் கொள்வதில் காணப்படும் இடைவெளி இல்லாமல் செய்யப்படுவதுடன் ஆழமான கருத்துக்களை வெளிக் கொண்டுவர விழிப்புணர்வு உருவாக்கப்பட்டு வளர்த்தெடுக் கப்படுகின்றது. படங்களும் காட்சிகளும் கூட்டாகக் கற்பனை செய்யப்படுவதுடன் நிகழ்த்தியும் காட்டப்படுகின்றன (மீண்டும் நிகழ்த்திக் காண்பிப்பது விளங்கிக்கொள்வதைக் கட்டுப் படுத்தும் மிகச்சிறந்த வடிவம் மற்றும் விளங்கிக்கொள்வதை ஆழமாக்கும்.). கதைமாந்தர்களும் தனியாள் நடிப்புகளும் விளக்கப்பட்டு கலந்துரையாடப்படும். இலக்கிய எழுத்தாக்க மொன்றை படிப்பதால் தாம் பெற்ற பட்டறிவை மாணவர்கள் பரிமாறக்கூடும். கூட்டு உருக்காட்டல், கலந்துரையாடல் மற்றும் ஓர் எழுத்துரு பற்றி எண்ணிச்செயற்படல் மாணவர்கள் ஓர் எழுத்துருவின் பொருளை நன்கு விளங்கிக்கொள்ள துணைசெய்கின்றது. இவ்வணுகுமுறை தனித்த எண்ணத்துடன் தனி அறையொன்றிலிருந்து படித்தலைக் காட்டிலும் மிகப் பயனுடையதாகும். அது கூடிய நுண்ணறிவுகளுக்கு இட்டுச்செல்லும்.

## 4. பாரம்பரிய மொழிக்கல்வி வகுப்பறையில் படித்தலுடன் குறிப்பாக தொடர்புடைய பண்புகள்

மேற்குறிப்பட்டது போல் பாரம்பரிய மொழிக் கற்பித்தலில் படித்தலும் படித்தலை ஊக்குவிப்பதும் வழமையான வகுப்பறைக் கல்வியிலிருந்து முதன்மையாக அவர்களுடைய எழுத்துருக்கள் தொடர்பாக மொழி மற்றும் பண்பாட்டுத் தோற்றுவாயிலிருந்து வேறுபடுகின்றன. எவ்வாறாயினும் முதலாம் மற்றும் இரண்டாம் மொழிகளில் இலக்கிய சமூகமயமாக்கல், ஊக்குவித்தல் ஆகியவற்றின் இலக்குகளைப் போல வேலை மற்றும் பயிற்சியளிக்கப்படும் இடங்களும் பாரிய அளவில் ஒற்றுமையுடையன.

தொடர்ச்சியாக, பின்வரும் அ), ஆ) பகுதிகள் பொதுவாக பா.மொ.க வுக்கு மட்டும் பொருத்தமானவையாக இல்லை, மாறாக அவற்றைவிட இரண்டு பொதுவான கருத்துக் களுக்கும் அவை (அதேபோல் பா.மொ.க வுக்கும் இன்றியமையாதன) கூடிய சிறப்பிடம் கொடுக்கின்றன.

### அ) படித்தலுக்கு முன்பான எழுத்துருத் தெளிவு

படித்தலின் போது சொற்கள் மிக இன்றியமையாத இடத்தை வகிக்கின்றன. படிப்பவர்கள் அவர்களுக்குத் தெரியாத பெருமளவு சொற்கள் காணப்படுவதனால் ஓர் எழுத்துருவை விளங்கிக்கொள்வதில் சிரமமடைகின்றனர். குறிப்பாக முதல்மொழியின் எழுத்து வடிவில் எழுதப்படும் எழுத்துருக்கள் பாரிய சிக்கலுக்கு இட்டுச்செல்லக்கூடியன. ஏனெனில் பெரும்பாலான சிறுவர்களும் இளையவர்களும் வீட்டில் குறித்த மொழியின் பேச்சுமொழியிலேயே பேசுவர்.

இக் காரணத்தினால், ஆசிரியர்கள் எழுத்துருக்களின் மொழிச்சுமையை முன்னரேயே எளிமைப்படுத்தி அவற்றை அணுகுவதற்கு வாய்ப்புக்களையும் செய்துள்ளனர் (strauli et al, பக்கம் 58ஐ பார்க்க). கடினங்களைத் தீர்க்க முக்கியச் சொற்களின் பட்டியல், வழமையாகவே சிக்கலுடைய சொற்கள், தொடர்கள் ஆகியவை தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுதல் உறுதிசெய்யப்பட்ட ஒரு முறையாகவுள்ளது.

("இங்கே பார்க்கவும், நாம் பின்வரும் சொற்களைக் கொ-ண்ட ஓர எழுத்துருவைப் படிக்கவுள்ளோம் <கட்டுமானம்>, <அமைந்திருந்தது>, <தவழும்>, <வீரனின் கவசம்>. முதலில் அவை பற்றிய தெளிவை நாம் பெறவேண்டும்!"). மாணவர்கள் எழுத்துரு உள்ளடக்கத்தில் கண்காணிப்புச் செலுத்துவது மட்டுமல்லாது ஏற்கனவே குறித்த எழுத்துரு தொடர்பாக தமக்குள்ள அறிவை செயற்படுத்திக்கொள்ளவும், கருதுகோள்களை உருவாக்கிக்கொள்ளவும் வாய்ப்பினை வழங்குகின்றது. எழுத்து மொழியிலமைந்த எழுத்துருவில் காணப்படும் வடிவம் மற்றும் விதிகளின் பாரிய பகுதிகளை ஏற்கனவே அவர்கள் விளங்கிக்கொண்டுள்ளனர். விளங்கிக் கொள்வதை எளிமையாக்கும் ஏனையவைகளாக நிகழ்வுளை விவரிக்கும், விவரங்களைக் காட்டும் படங்கள், உருக் காட்டும் மன உணர்வுகள் அல்லது சித்தரிக்கும் குறிப்பிடத் தக்க குறிப்பிடத்தக்க படங்களின் உள்ளடக்கம் என்பனவாகும்.

### ஆ) ஒவ்வொரு சொல்லையும் எப்பொழுதும் விளங்கிக்கொள்ள வேண்டியதில்லை

படிப்பவர்களும் (ஆசிரியர்களும்கூட) முதலில் விளங்கிய வற்றில் கருத்தூன்றுதற்குப் பதிலாக விளங்கிக்கொள்ளப் படாதவற்றில் அடிக்கடி கவனம் செலுத்துவர். இந்தக் குறைபாட்டை அடிப்படையாகக் கொண்ட பார்வையானது சீரின்மையை ஏற்படுத்தும்.

இதற்கு மற்றுமொரு தீர்வும் காணப்படுகின்றது: எடுத்துக்காட்டாக மாணவர்கள் படிக்கும்போது விளங்கிக் கொண்ட அனைத்திற்கும் கீழக்கோடிடுமாறு அவர்களைக் கேட்டுக்கொள்ளல், உடனடியாக விளங்கிக்கொள்ளப்பட்ட அனைத்துப் பந்திகளையும் குறித்துக்காட்டும்போது தாம் முதலில் வாசிக்கும்போது வாக்கியங்களின் ஒரு பகுதி அல்லது சில சொற்கள் மட்டுமே விளங்கிக்கொள்ளப் படாதவை என்பதை உணரத் தொடங்குவர். இப்போக்கானது படித்தலைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு வேண்டிய ஊக்கத்தைக் கூட்டுகின்றது. மேலும் விளங்கிக்கொண்ட வற்றிலிருந்து பெற்ற உள்வாங்கல் சிக்கல்கள் எப்போதும் தீர்க்கப்படக்கூடியன.

பல எழுத்துருக்களைப் படிக்கும்போது படிப்பவர்கள் ஒவ்வொரு சொல்லையும் விளங்கிக்கொள்ள வேண்டு மென்பதில்லை கல்வியின் இலக்குகள், எழுத்துரு வகை,

உலகு தழுவிய விளக்கம் (மேலே பார்க்கவும்) என்பன போதுமானவையாகும். எழுத்துருவில் முன்பு அடையாளப் படுத்திய முக்கிய சொற்கள் மற்றும் இன்றியமையாத பந்திகள் என்பனவற்றை விளங்கிக்கொள்ளத் துணை செய்வனவாக அமையும். இந்த வழியில் எதற்குக் கண்காணிப்புச் செலுத்த வேண்டுமென்பதும், எப் பகுதிகள் சிறப்புத் தன்மையுடையன என்பதும் படிப்பவர்களுக்குத் தெரியும். எழுத்துரு வேலையுடன தொடர்புடைய கல்வி இலக்குகளின் அடிப்படையில் (எ.டு. உள்ளடக்கம், தகவல்களின் விரிவான பகுப்பாய்வு) படித்தல்களைத் தொடர்ந்து மேம்படுத்த சொற்கோவைப் பயிற்சி இடம்பெற வேண்டும். உண்மையான எழுத்துருக்களின் சொற்களுடன் வேலைசெய்வது குறிப்பாக உண்மையாக இருக்கவேண்டும் என்பது வெளிப்படையாகும்.

#### இ) வழமையான வகுப்பறைக் கல்வியுடன் ஒத்துழைப்பு

பா.மொ.க வும் வழமையான வகுப்பறைக் கற்பித்தலும் ஒன்றாகப் பணி செய்யும்போது இக்கூட்டிணைவு எல்லையை அகலமாக்கி கற்றலின் பேண்தகு நிலையை ஆழமாக்கு கின்றது. இது பொதுவாக இணைந்ததாகப் பயன்படுத்தப் படும் உள்ளடக்கத்தை மட்டுமல்லாது (எ.டு. பல்வேறு நாடுகளில் காணப்படும் நீர் அல்லது விவசாயம்) பல்வேறு கற்றல் மதிநுட்பங்களையும் உத்திகளையும் உள்ளடக்கு கின்றது. பெரும்பாலும் இவை எப்போதும் மொழியியலுக்கு -அப்பாற்பட்டவையாக இருப்பதால், அதாவது, அவை பல்வேறு மொழிகளுக்குப் பயன்படுத்தப்படலாம், இப் பரப்பில் பா.மொ.க மற்றும் வழமையான வகுப்பறை ஆசிரியர்களுக்கிடையிலான கூட்டிணைவு குறிப்பாகப் பெறுமதியானதாகும். இது இலக்கிய - பண்பாட்டுக் கல்வியின் இன்றியமையாத பகுதிக்கு நிகர் உண்மையாக விளங்குகின்ற அதேவேளை பா.மொ.க மற்றும் வழமையான வகுப்பறைப் பயிற்றுவித்தல் ஆகியன ஒன்றையொன்று உகப்பானதாக முழுமைப்படுத்துகின்றன என்பதுடன் இது வாசிப்பதனால் ஏற்படும் மகிழ்ச்சியை இணைந்ததாக ஊக்குவிக்கும்.

பா.மொ.க மற்றும் வழமையான வகுப்பறை கற்பித்தலுக் கிடையேயான நிறுவனத் தொடர்புகள் தன்னிச்சையானவை அல்ல, எடுத்துக்காட்டாக, சுவீடன் போன்ற நாடுகளில் தொடர்பைத் தொடக்கி படித்தல் பகுதியில் தாமாகக் கூட்டிணைவதற்கான அதனைப் பற்றிய தகவலை வழங்குவது பா.மொ.க ஆசிரியர்களின் வேலையாகும். மேலதிக எண்ணங்கள் மற்றும் மதியுரைகளுக்கும் இத்தொகுதியின் இரண்டாம் பகுதியைப் பார்க்கவும் (Strauli et al, பக்கம் 116ff).

- வெவ்வேறு மொழிகளில் கவிதையைப் படித்தல் (அத்துடன் / அல்லது கவிதைகளை தானாக உருவாக்குதல்) எப்படிக் கவிதையை ஓதுவதெனக் கற்றல், கவிதையை இறுவட்டில் பதித்தல், பல்மொழிச் சிறுநூலை உருவாக்குதல், பள்ளி மொழியில் மொழிபெயர்த்தல். பல்வேறு மொழிகளில் கவிதையை ஓதுவதற்கு பெற்றோரிற்கான மாலை நேரம் எனும் நிகழ்வை நடாத்துதல்.
- இருமொழி நூல், பலமொழி நூல் அல்லது பட நூலினைப் பொதுவாக படித்தல்.
- பல்வேறு மொழிகளிலுள்ள எழுத்துருக் கொண்ட நூல் விளக்கத்தை உருவாக்குதல். ஓர் அட்டையில் ஒவ்வொரு நூல் பற்றியதொரு சுருக்கமான விவரணம் வழங்குதல்.
- பொதுவான உண்மைசார் வெளியீட்டுக்கு (எ.டு. ஜேர்மனியிலும் துருக்கியிலும் உரோமன் ஊழி, முதலியன). வெவ்வேறு மொழிகளில் மின்னியல் மற்றும் ஏனைய வளங்களினைப் பயன்படுத்தல்
- சில படித்தல் மதிநுட்பங்கள் மற்றும் உத்திகளைப் பயன்படுத்தலும் அவற்றின் பொதுவான அறிமுகமும் (இத்தொகுதியின் பகுதி II மற்றும் தொகுதி 05: கற்றல் உத்திகளும் நுட்பங்களும், எனும் பகுதிகளைப் பார்க்கவும்).
- பள்ளியில் ஒரு பன்மொழிய நூலகத்தை நிறுவுவதில் இணைந்து செயற்படுதல்.
- "பல்வேறு மொழிகளில் வாசிப்பதில் மகிழ்ச்சி" எனும் தலைப்பில் செயற்திட்ட கிழமையினைக் கூட்டிணைந்து நடாத்துதல் அல்லது படித்தல் இரவின் ஒருபகுதியாக மேற்கொள்ளல்.

மிதமிஞ்சிய சுமைச் சிக்கல்கள் காரணமாக சில வேளைகளில் இணைந்து செயற்படுவதற்கான வாய்ப்பான வேளைகள் இல்லாமலுள்ளன. இவ்வாறான வேளைகளில் படித்தலை ஊக்குவித்தல், படித்தற் பயிற்சி, படித்தல் நுட்பங்கள் மற்றும் இலக்கியக் கல்வி ஆகிய பகுதிகளில் உள்ளூர் மதியுரைகள் மற்றும் அணுகுமுறையினை தாம் கைக்கொள்வதற்காக வழமையான பள்ளிப் பாட விதானத்திலிருந்து பா.மொ.க ஆசிரியர்கள் பாடநூல்களைக் கேட்டுநிற்பதை நாம் ஆகக்குறைந்த தீர்வாகப் பரிந்துரைக் கின்றோம். ஐயத்திற்கிடமற்ற முறையில் சில நல்ல கருத்துகளைப் பா.மொ.க வால் நடைமுறைப்படுத்த முடியும் என்பதுடன் மாணவர்களின் விளக்கங்கள், மதியுரைகள் மற்றும் பட்டறிவுகளும் கூட இம்முயற்சியில் குறிப்பாக துணைசெய்யக்கூடியது.

#### ஈ) பிறப்பு நாட்டு மொழியிலான எழுத்துருக்களை எங்கே காணலாம்?

- கற்பித்தற் பயன்பாட்டுக்கான எழுத்துருத் தொகுப்புகள்

பா.மொ.க ஆசிரியர்கள் தமக்கு உரியதாக ஒரு எழுத்துருத் தொகுதியினைக் கொண்டிருப்பார் என்பது தெளிவு. இவை இலக்கிய ஆக்கங்கள், கவிதைகளின் தொகுப்புகள் மற்றும் கற்பனைக் கதைகள், படநூல்கள் அல்லது பிறப்பு நாட்டு மொழியிலான பாடசாலை நூல்களை மட்டுமல்லாது சில உண்மைத் தலைப்புகளுக்குக் கட்டுரைகளின் தொகுப்புகள், கதைகள் முதலியனவற்றை உள்ளடக்கியுள்ளது. தகுந்த இணையத் தளங்களுக்கான இணைப்புக்களைக் கொண்ட பட்டியல்கள் மிகுந்தளவு இன்றியமையாதவை.

பா.மொ.க மாணவர்களுடன் எழுத்துருத் தொகுதிகள் நிறுவப்படலாம் அல்லது நிறுவப்பட வேண்டும். இதை எளிமையாக நிறுவலாம், அந்நோக்கத்திற்காக அவர்களது தாய் மொழியில் படித்தல் கருவிகளை பா.மொ.க வுக்கு வழங்குமாறு மாணவர்களை, அவர்களது பெற்றோரை மற்றும் உறவினர்களையும் கேட்டல் இதற்கு எளிமையான தீர்வாகும். இது பிள்ளைகளுக்கான நூல்கள், ஏனைய நூல்கள், விளக்கப் பருவ இதழ்கள் (பிள்ளைகளுக்கான) மற்றும் நகைச்சுவை வெளியீடுகளையும் உள்ளடக்கி இருக்கும். மாணவர்களின் தம் நாட்டு மொழியிலமைந்த எழுத்துருக்களை இணையத்தளத்தில் தேடுவது மாணவர்களால் மாணவர்களைக்கொண்டு மேற்கொள்ளப்பட

வேண்டும். ஆசிரியர்கள் இம் முயற்சியில் மாணவர்களுக்குப் பக்கத்துணை வழங்குவது மிக இன்றியமையாததுடன் அவர்கள் பொறுப்புடன் வளங்களைக் கையாள்வதற்கு அவர்களைத் தமது பொறுப்பின் கீழ் வைத்திருக்க வேண்டும் (வளங்கள் பற்றிய உசாத்துணைகள்: மேற்கோள் துணைகள்).

இன்றியமையாதது: பிறப்பு மாவட்டம் மற்றும் அரசியல் சூழல் என்பவற்றையொட்டி, ஆசிரியர் சார்பு மனப்பாங்கு கொண்ட எந்தவொரு எழுத்துருவோ, தேசிய சோசலிஸ்ட் அல்லது ஏனைய வகையில் தூண்டுகின்ற தன்மையில் உள்ளவையோ இத்தொகுதிக்குள் ஒருங்கிணைக்கப் படாதவாறு இறுக்கமான விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும்.

- மீளச்செலுத்தும் எழுத்துருத் தொகுதி

உடனடி வகுப்பறைப் பயன்பாட்டிற்கான எழுத்துருத் தொகுதிகள் இன்றியமையாதவை. ஆனால் அவை போதியளவில் பெரிதாக இல்லை. முதல்மொழியில் படித்தலை ஊக்குவிக்கும் நோக்கத்திற்காக, மாணவர்களால் இரவல் வாங்கி வீட்டில் படிக்கக் கூடியதாகவுள்ள நூல்கள் மற்றும் எழுத்துருக்களால் இத்தொகுதி முழுமைப்படுத்தப்பட வேண்டும். ஒரு நல்ல சூழலில், அவ்வாறான தலைப்புக் களைப் பல்பண்பாட்டு நூலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் (கீழே பார்க்கவும்) அல்லது பள்ளிக் கட்டிடத்திலுள்ள நூலகத்தில் அது பலமொழி நூல் தொகுதிகளைக் கொண்டிருக்குமானால் பெற்றுக்கொள்ளலாம், இது அப்படி இல்லாதவிடத்து, தீர்வொன்றைத்தேடுதல் ஆசிரியரிடம் தங்கியுள்ளது. அவனிடத்தில் அல்லது அவளிடத்தில் எழுத்துக் கருவித்தொகுதி காணப்பட்டால் அங்குள்ள நூல்களின் எளிமையான பட்டியலொன்றே போதுமானதாக இருக்கும் (நூல் தலைப்புக்களுடனும் அவற்றைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்களின் பெயருடனும் இரவல் வாங்கும் பட்டியலை உருவாக்குக.). பின்னர், மாணவர்கள் ஒவ்வொரு கிழமையும் தாம் எவற்றைப் படிக்க விரும்புகிறார்கள் என்பதற்கு விண்ணப்பிக்க முடியும வாசித்தவற்றை திருப்பிக் கொடுக்கவும் முடியும். மாணவர்கள் இச்சிறிய நூலகச் செயற்பாட்டிற்கு இயல்பாகவே துணைசெய்யும் இயலுமை உடையவர்களாக இருத்தல் நன்று. இதற்கான சிறந்த காலம் கோடைகால விடுமுறையாகும். அப்போதுதான் பெரும்பாலான மாணவர்கள் தம்முடைய பிறப்பு நாட்டில் நேரத்தைச் செலவிடுவதுடன் அங்கிருந்து அவர்கள் படித்தலுக்கான கருவிகளைக் கொண்டுவர முடியும். அவர்கள் தங்கள் விடுமுறைகளின் முன் சிறிது பணத்தைச் சேர்த்திருக்கலாம் (சந்தை, பெற்றோரின் ஒரு நிகழ்ச்சி, முதலியன). அதனால் ஒவ்வொரு பிள்ளையும் ஒரு சிறிய வரவு செலவு திட்டத்தை வைத்திருப்பர். இருப்பினும் அரசியல் மற்றும் கருத்தியல் நடுநிலைமை எனும் விடயத்தில் தலைப்பைத் தெரிவுசெய்வதில் மாணவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும்

பெற்றுக்கொண்ட சிறிய நூல்களை சேமித்துவைக்க பள்ளியில் அதற்குப் போதுமான அலுமாரி காணப்படலாம். பள்ளி நூலகம் (ஒன்றைக் கொண்டிருக்குமானால்) மாணவர்களின் தன் நாட்டு மொழிகளில் நூல்தொகுப்பைக் கொண்டிருக்குமானால், அவை பா.மொ.க வுக்கும் பெறக் கூடியதாக இருக்குமானால் இன்னும் சிறப்பானதாகவிருக்கும். வழமையான பள்ளி அமைப்பினுள் பா.மொ.க நன்கு ஒருங்கிணைக்கப்பட்டிருந்தால் இது எச் சிக்கலையும் உருக்காட்டாது. என்ன நிகழினும், பா.மொ.க ஆசிரியரினால் மேற்கொள்ளப்படும் அவ்வாறான தொடக்கம் நல்ல முயற்சியாக அமையும்.

- பல்பண்பாட்டுப் பொது நூலகங்கள்.

குறிப்பாக பெரிய நகரங்களிலுள்ள பல நூலகங்கள் பல் தெரிவு நூல்களைக் கொண்டிருக்கும் (பட நூல்கள், பிள்ளைகளுக்கான மற்றும் இளையவர்களுக்கான நூல்கள்) அத்துடன் சில சமயங்களில் வேறுமொழிகளிலுள்ள சஞ்சிகைகளையும் பார்க்க முடியும், அவற்றை இரவல்பெறவும் முடியும்.

சுவிற்சர்லாந்தில் பண்பாட்டு நூலகங்களுக் கிடையிலான கூட்டிணைவு காணப்படுகின்றது. தனிப்பட்ட அமைவிடங்கள் மற்றும் நூலை இரவல் கொடுத்தல் ஆகியவற்றை கண்ணோட்டம் செய்த அறிவைக்கொண்டு http://www.interbiblio.ch tiyj;jsj;ijg; ghu;itaplTk;.

சுவீடனில், விரிவான தகவல்கள் http://modersmal.skolverket.se/sites/svenska/index.php/fer-sprakighet-i-forskolan/kop-lan எனும் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஜேர்மனியில் தகுந்த நூலகத் தகவல்களைப் பெறுவதற்கு http://bibliotheksportal.de/themen/bibliotheks-kunden/interkulturelle-bibliothek/materialien-in-mehreren-sprachen.html இணையத்தளத்தை ஒப்பிட்டுப்பார்க்கவும்.

- நாட்டின்-குறிப்பிட்ட நிறுவனங்களில் (எடுத்துக்காட்டுகள்) நூல் இரவல் வாங்குதல் மற்றும் தகவல்கள்

***ஜேர்மனி:***

ஜேர்மனி நூலக சங்கத்தின் இணையத்தளம் விரிவான தகவல்களைக் கொண்டிருப்பதுடன் குறிப்பிடக்கூடிய தேடுதல்களுக்கும் ஒப்புதலளிக்கின்றது. பின்வரும் தலைப்புகளுக்கான கருவிகளும் தகவல்களும் உள்ளன: நூலக வேலைக்கான எழுத்துருக்கள், பன்மொழிய அருஞ் சொற்கோவைகள் மற்றும் இயங்கலை அகராதிகள், ஜேர்மன் பொது நூலகங்களில் பிறநாட்டு மொழியிலமைந்த தொகுதிகளின் பட்டியல்கள், மொழி மற்றும் பண்பாடு பற்றிய இணைப்புகளின் தொகுதிகள், பிற மொழிகளில் விக்கிப்பீடியா தளங்களின் இணைப்புகள், ஊடகம், செய்தித்தாள் மற்றும் சஞ்சிகைக்கான இணைப்புகள், மொழி மேம்பாடு மற்றும் வாசித்தலை ஊக்குவிப்பதின் நெறிமுறைகளுக்கான வார்ப்புரு எழுத்துருக்கள். இணைப்பு:http://www.bibliotheksportal.de/kw/Wk; http://www.bibliotheksportal.de/themen/biblio-thekskunden/in-terkulturelle-bibliothek/materialien-in-mehre-ren-sprachen.html

பல்வேறு மொழியிலான நூல்கள், வகுப்பறைக்கான கற்பித்தற்கருவிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான மிகப் பயனுடைய இணைப்புக்களின் தொகுப்பு ஆகியன பற்றிய பெறுமதியான தகவல்களை கோதெ நிறுவனத்தின் இணையத்தளம் வழங்குகின்றது: http://www.goethe.de/ges/spa/prj/sog/fms/lit/deindex.html

http://www.mehrsprachigvorlesen.verband-binationaler.de/ இணையத்தளத்தில் பெற்றோரை உள்ளடக்குதல் மற்றும் அவர்களை ஈடுபடுத்தல் தொடர்பான பரிந்துரைக்கப்படக் கூடிய தகவல்கள் மற்றும் ஆலோசனைகளைக் காணலாம்.

***ஒஸ்ரியா:***

http://www.mehrsprachigvorlesen.verband-binationaler.de/ இணைப்பினூடாக ஏராளமான தகவல்களையும் தேடுதல்களுக்கான விருப்பத் தேர்வுகளையும் கண்டுகொள்ளலாம்.

பிள்ளைகளுக்கும் இளையவர்களுக்குமான குறிப்பிடத்தக்க பன்மொழிய நூல்களுக்கு http://www.schule-mehrsprachig.at/in-dex.php?id=11 இணையத்தளத்தைப் பார்வையிடவும்.

ஏராளமான கற்பித்தற்கருவிகளுள் சுவிற்சர்லாந்து மற்றும் ஜேர்மனியில் பதிவுசெய்து பெற்றுக்கொள்ளக் கூடிய பல்வேறு மொழியிலமைந்த சிறுவர்களுக்கான சஞ்சிகைகளுமுள்ளன.

இது விலையற்றதாகப் பெறக்கூடியது, அனுப்புவதற்கான செலவு மட்டுமே அறவிடப்படும் http://www.wirlesen.org எனும் ஒஸ்ரியன் இணையத்தளத்தில் பயனுடைய மேலதிக தகவல்கள் கிடைக்கக்கூடியதாகவுள்ளது.

***சுவிற்ஸர்லாந்து:***

சுவிற்ஸர்லாந்தின் Bibliomedia நிறுவனம், பா.மொ.க ஆசிரியர்கள் நீண்டகாலம் வைத்திருந்து பார்ப்பதற்கென பல்வேறு தெரிவுகளான பிறநாட்டு மொழியிலும் பல்வேறு மொழியிலுமமைந்த நூல்கள் தொகுத்து தன்னகத்தே கொண்டுள்ளது. அல்பானியன், அரபிக்(சிறுவர் நூல்கள் மட்டும்) ஆங்கிலம், குரோசியன், போர்த்துக்கேய, ஸ்பானிய, சேர்பியன், தமிழ் மற்றும் துர்கிஷ் மொழிகளிலான நூல்கள் கிடைக்கக்கூடியதாகவுள்ளன. இணையத்தளத்திலுள்ள பட்டியல் பல்வேறு மொழியிலான நூல்களின் தெரிவினைக் காட்டுகின்றது. பள்ளி அமைவிடத்திற்கு ஏற்றாற்போல் இரவல் பெறுவதற்கான பெறுமதி வேறுபடுகின்றது. ஆசிரியர்கள் பள்ளி முகாமைத்துவம் அல்லது Bibliomediait நேரடியாகத் தொடர்புகொண்டு அது தொடர்பாக விசாரிக்க வேண்டும். Bibliomedia கற்பித்தற் கருவிகளையும் நூற்பட்டியல் மற்றும் தற்போதுவரை தொடருகின்ற இணைப்புக்களையும் கூட வழங்குகின்றது. பன்மொழித்தலைப்பிற்கு "Bibliomedia QUIMS", முகவரி: Bibliomedia,Rosenweg 2,4400 Solothurn, தொ.பே.எண்-032 624 90 20. இணையத்தள முகவரி: www.bibliomedia.ch எனும் தலைப்பிலமைந்த உசாத்துணையைப் பார்வையிடவும்.

JUKIBU (பிள்ளைகளுக்கும் இளையவர்களுக்குமான பல்பண்பாட்டு நூலகம்): Basel இல் உள்ள இச்சிறப்பு நூலகமானது 50 மொழிகளில் நூல்களையையும் ஊடகத்தையும் கொண்டிருக்கின்றது. தற்போதைய ஆன்லைன் பட்டியல் தலைப்பைக் கொண்டு தேடுவதற்கு உதவுகின்றது. JUKIBUவும் வழமையாகப் பெரும்பாலும் பல்வேறுபட்ட நிகழ்வுகளை வழங்குகின்றது. இணையத்தள முகவரி: JUKIBU,Elsasserstrasse 7,4056 Basel, தொ.பே.எண்-032 624 9020. இணைப்பைப் பார்வையிடவும் www.bibliomedia.ch.

Baobab: படித்தலில் கண்காணிப்புச் செலுத்தும் நோக்கத்திற்காக பல்பண்பாட்டு எணணக்கருக்களுடன் ஈடுபட்டுள்ளது, அத்துடன் தொடர்ச்சியாக பல்பண்பாட்டு நூல்களையும் வெளியிடுகின்றது.
இணைப்பு: http://www.baobabbooks.ch

நெற்வேக் சிம்ஸ்: இத்தளம் முற்பதிவு செய்யக்கூடிய வேற்றுமொழி நூல்களின் பட்டியலைக் கொண்டுள்ளது. குடிபெயர்வின்போது மாணவர்களின் மொழியை மேம்பாடு செய்வதை ஊக்குவிப்பதற்காகக் கிடைக்கக்கூடியதாகவுள்ள தரவிறக்கம் செய்யக்கூடிய பயனுள்ள கற்பித்தற்கருவிகள் பலவற்றைக் கொண்டுள்ளது: http://netzwerk-sim.ch

Bischu: நூலகம் மற்றும் பள்ளி கூட்டிணைவிற்கான கையேடு இது சூரிச் மாநிலக் கல்வித் திணைக்களத்தால் வெளியிடப்பட்டது. இக்கைநூல் வேறுபட்ட பெறுமதியான மதியுரைகளை வழங்குகின்றது. இது அவர்களுடைய முயற்சியின் பரப்பைக் காட்டுகின்றதுடன் கூட்டிணைவானது நூலைக் இரவல்கொடுத்தலுக்கு அப்பாலும் செல்கின்றது. இணையத்தள முகவரி: http://www.bischu.zh.ch

***சுவீடன்:***

வெளியீட்டாளர்கள், நூலகங்கள், நூலைக் கடன் கொடுப்பதற்கான சாதக நிலை மற்றும் பலவற்றைப் பற்றிய விரிவான தகவலை உசாத்துணை இணையத் தளத்தில் http://mofdersmal.skolver-eket.se/sites/svenska/in-dex.php/fersprakighet-i-for-sko-lan/kop-lan இல் காணலாம்.

பொதுவாக: ஐரோப்பிய தேசிய நூலகங்களின் நிறுவகம் ஐரோப்பாவிற்குட்பட்ட பல்வேறு பங்காளிகளுக்கு இணைப்புக்களை வழங்குகின்றது.

# பகுதி I:
# படித்தலை ஊக்குவித்தல்

I

# இப்பகுதியில் பயிற்சிகளுக்கும் கற்பித்தலுக்குமான குறிப்புகள் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| **நூல்கள் எழுத்துருக்களுக்கான அறிமுகம்** | கற்பித்தல் குறிப்புகள் 1-8:<br><br>இதன் முதன்மை நோக்கம் படித்தல் ஊக்குவிப்பை ஓர் இனறியமையாப் பண்பா-கக் கொள்ள வெவ்வேறு நூல்களையும் எழுத்துருக்களையும் அறிமுகப்படுத்திக்கொள்வதாகும். |
| **நூல்களையும் எழுத்துருக்களையும் படித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | கற்பித்தல் குறிப்புகள் 9-11:<br><br>இப் பகுதி சரியாக படித்தல் தொடர்பாகக் கண்காணிப்புச் செலுத்துவதோடு பல்வேறு தரப்பட்ட படித்தல் பாடங்களை எப்படி உருவாக்குதல் மற்றும் மாணவர்கள் தமக்குரிய படித்தல் முறைமையை எவ்வாறு திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவது போன்றவற்றிற்கு எடுத்துக்காட்டுகளையும் வழங்குகின்றது. |
| **படித்தவற்றை அறிக்கையிடுதல்** | கற்பித்தல் குறிப்புகள் 12-17:<br><br>இப்பகுதியானது முதன்மையாகப் படித்தவற்றைச் செயற்படுத்துவது அதாவது உள்ளடக்கங்கள் பற்றி கலந்துரையாடுதல் பற்றி கையாள்கின்றது. இது படித்தல் தொடர்பான பட்டறிவுகளை வகுப்பறையில் பகிர்ந்து கொள்வது பற்றிய பல்வேறு முன்மொழிவுகளை வழங்குகின்றது. |
| **படித்தவற்றை உருக்காட்டுதல்** | கற்பித்தல் குறிப்புகள் 18-19:<br><br>மாணவர்கள் தம்மைத்தாமே மதிப்பீடு செய்யும் ஆற்றலையும் தமது வாசிப்பு பழக்கங்களையும் விருப்புக்களையும் இனங்கண்டு கொள்ளுதலும் இங்கு முதன்மையான இரு கற்பித்தல் மதியுரைகளாகும். இப்பயிற்சியானது மாணவர்களை தாமாகவே முதிர்ச்சியடைந்த படிப்பவர்களாக வளர்த்தெடுப்பதில் பங்களிப்புச் செய்கின்றது. |

I

# 1 ஒரு கடமை போல் உரத்துப் படித்தல்

**இலக்கு**

*உரத்துப் படிப்பது கற்றலை ஊக்குவிக்கக்கூடிய எளிமையானதும் மிக பயனுள்ளதுமான வழிமுறையாகும். உரத்துப் படிப்பதால் மாணவர்கள் கதைகளை அல்லது ஒரு புத்தகத்தை எளிதாக சுவைத்து மகிழ முடியும். இதன் மூலம் மாணவர்கள் கதைகள் எவ்வளவு கவர்ச்சியுடையவை என்றும் அவற்றை சீராகவும் விரைவாகவும் படிக்கக் கற்றுக்கொள்வர்.*

1ம் - 9ம் தரம் | 15 - 20 மணித்துளிகள்

**கருவிகள்:**
நூல் (தொடர்ச்சியாக) அல்லது ஒரு சிறிய எழுத்துருக்கள் தொகுதி.

**செயல்முறை:**

ஒவ்வொரு பா.மொ.க அலகும் (எ.டு. ஒரு கிழமையில் இரண்டு பாடங்கள்) தொடர்ச்சியாக உரத்துப் படிப்பதோடு தொடங்கும். ஆசிரியர் ஒரு நூலிலிருந்து ஏறக்குறைய 15 நிமிடங்கள் படிக்கும் போது மாணவர்கள் வசதிவாய்ப்பாக இருந்து கொள்வர். இதன் முதன்மை நோக்கம் மாணவர்கள் கதைக்குள் தம்மை ஆழ்வித்தல் மற்றும் அதைச் சுவைக்கச்செய்வதாகும்.

**குறிப்புகள்:**

- ஒரு நூல் உரத்துப் படிக்கப்பட்டால் (தனித்தனி சிறுகதைகள் போல அல்ல) அது எவ்வித இடையூறுமின்றி தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிடில் மாணவர்கள் கதையின் வரியை தவறவிட நேரிடும்.
- பா.மொ.க வில் ஒரே நேரத்தில் வெவ்வேறு வகுப்புகள் நடைபெறுகின்றன. அதனால் எல்லா மாணவர்களுக்கும் ஏற்றவாறு உரத்துப் படிக்கும் ஓர் நூலைத் தேர்ந்தெடுக்கவேண்டும். பிற விருப்பங்கள்: குறுகிய நூல்கள், கீழ், நடுத்தர மற்றும் மேல் மட்டத்திற்கேற்ப
- உரத்துப்படிக்கும் பொழுது வகுப்பு அமைதியாக இருக்கவேண்டும். மாணவர்கள் இணையாக எதையாவது வரையலாம் ஆனால் சத்தத்தை உண்டாக்கும் மற்றும் திசை திருப்பக்கூடிய எதுவும் செய்யக்கூடாது.

**மாற்று முறைகள்:**

1. ஆசிரியரால் ஏற்கனவே ஏற்பாடு செய்த தெரிவுகளிலிருந்து மாணவர்கள் ஓர் எழுத்துருவை தெரிவு செய்யலாம். அதே போல் மாணவர்கள் தாமாக ஓர் எழுத்துருவை வகுப்புக்குக் கொண்டு வந்து உரத்து படிக்கலாம்.
2. நூல்களையும் கதைகளையும் எப்போதும் ஆசிரியர் படித்தலைத் தவிர்த்து மாணவர்களும் அப்பணியைச் செய்யலாம். இதற்காக மாணவர்கள் முன்கூட்டியே வீட்டிலே படித்தற் பயிற்சியை மிக ஆழமாகச் செய்து தம்மை ஏற்பாடு செய்து கொள்ள ஒரு கிழமை காலமேனும் வழங்கப்படவேண்டும். (பக்கம் 38 இல் ஒருவரின் தன் படித்தலுக்கான பக்கத்துணையையும் பார்க்க)
3. உரத்துப் படிக்கப்படும் பாடப்பகுதியை எப்போதும் ஒலிப்பன்னியொன்றில் அல்லது வேறு சேமிப்புக்கருவியில் பேச்சுப்பன்னி (Dictaphone), கைப்பேசி (cell phone), கணினி ஒலிப்பதிவு செய்வது சிறப்பானது. இவ்வாறு ஒலிப்பதிவு செய்பவற்றை சரிபார்த்து மற்றைய வகுப்புக்களுடனும் பகிர்ந்து கொள்ளலாம். மாற்றாக: பழைய மாணவர்கள் புதிய மாணவர்களுக்காக ஒரு நூலைப் படித்து ஒலிப்பதிவு செய்து வழங்கலாம். கற்பித்தல் ஆலோசனை 10 ஐயும் "வெளிப்படையாக மற்றவர்களுக்காக உரத்து வாசித்தல்" பார்க்க.

# 2 முதல்மொழியில் சிறிய நூலகமொன்றை அமைத்தல்

இலக்கு

*மாணவர்கள் தமது முதல்மொழியில் பரந்த தூண்டுதலுடைய எழுத்துருக்கள் உள்ளன என்பதை அறிந்து கொள்வர். தாம் படித்த கருவிகள் (அல்லது பட நூல்கள்) பற்றிய தகவல்களையும் பகிர்ந்து கொள்வதுடன் அவ் வேறுபட்ட நூல்களுள் தேர்வுசெய்தும் கொள்வர். அவர்கள் நூலக விதிமுறைகளுடன் பழக்கப்பட்டுக்கொள்வர்.*


1ம் - 9ம் தரம்

10 - 20 மணித்துளிகள்

**கருவிகள்:**
பல்வேறு நூல்கள், பட நூல்கள், நகைச்சுவை வெளியீடுகள், சிறுவர்கள் மற்றும் இளையவர்களுக்கான அவர்களுடைய முதல் மொழியில் உருவாக்கப்பட்ட சஞ்சிகைகள்.

**செயல்முறை:**

- இக் கருத்திட்டமானது ஒரு பகிர்வு முயற்சியாக தொடங்கப்பட்டது. நாம் எம்முடைய மொழியில் பல்வேறு வகைப்பட்ட எழுத்துருக்களை (நூல்கள், பட நூல்கள், உசாத்துணை நூல்கள், போன்றன) உள்ளடக்கிய சிறிய நூலகமொன்றை அமைக்க வேண்டும். தெளிவுபடுத்துவதற்கு: யார், எதைக் கொண்டு வரலாம்? நூல்களையும் எழுத்துருக்களையும் எங்கே களஞ்சியப் படுத்தலாம்? (அதற்காக பள்ளிக் கட்டடத்தில் ஓர் அலுமாரி அல்லது நூல் தட்டு அல்லது பள்ளி நூலகம் உள்ளதா?) நூல்களை இரவல் வழங்கும் முறை எவ்வாறு நிகழ வேண்டும்?
- மாணவர்கள் வீட்டிலிருந்து வெவ்வேறு வகையான வாசிப்புக் கருவிகளை எடுத்து வந்து அவற்றை வகுப்புக்கு எடுத்துரைப்பர். அவற்றின் தலைப்புகள் பின்னர் பட்டியலிடப்பட்டு (எ.டு. எளிமையான கடன்பெறு நூலில் இருந்து அட்டவணையாகப் படித்தல்) முடியுமாயின் புத்தகத்தட்டில் வைக்கப்படும்.
- இப்போது மாணவர்கள் தம்மிடையே படித்தல் முன்னூட்டல் குறிப்புக்களைக் கொடுக்கலாம் அல்லது நூல்களையோ சஞ்சிகைகளையோ பரிமாறிக்கொள்ளலாம். இச்செயற்பாட்டுக்காக ஒவ்வொரு கிழமையும் பத்து நிமிடங்கள் ஒதுக்கலாம். கடன்பெறு அட்டவணையில் யார் எந்த நூலைப் பெறுகிறார் என்பன பதியப்படும். இரவல் பெறும் நூல்கள் நல்லமுறையில் பாதுகாப்பாக திருப்பிதரப்படுவதை உறுதிசெய்வதற்காக ஒரு காலாண்டிற்கு இரு மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.




**குறிப்புகள்:**

- அத்தியாயம் 4(ன) இன் அறிமுகப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, மாணவர்கள் நீண்ட விடுமுறையிலிருந்து தமது தன் நாட்டு மொழியில் படித்தல் பொருட்களை கொண்டுவருமாறு கேட்டுக்கொள்ளப்படலாம். (விலைகளை ஈடுசெய்ய, ஒரு கடை அமைக்க, அல்லது பெற்றோர் நிகழ்வு, முதலியன. அதற்காக சிறிது பணம் திரட்டலாம்).
- இச் சிறிய பா.மொ.க நூலகமானது எல்லா வயதினருக்குமான படித்தல் கருவிகளோடு சிறுவர் கலைக்களஞ்சியங்களையும் அகரமுதலிகளையும் கொண்டிருப்பது இன்றியமையாததாகும்.
- இந் நூலகமானது கொள்வனவு செய்யப்பட்ட அல்லது வீட்டில் தயாரிக்கப்பட்ட ஒலிப்பதிவு நூல்களையும் கொண்டிருக்கலாம். (கற்பித்தல் மதியுரைகள் 1 ஐயும் 10 ஐயும் பார்க்க).

# 3 Bibliomedia போன்ற அமைப்புக்களிருந்து நூல்களைப் பெற்றுக்கொள்ளல்

**இலக்கு**

*மாணவர்கள் அவர்களது முதல்மொழியில் தமது விருப்புக்குரிய படிப்புக்கருவிகளைத் தெரிவு செய்து அவர்களது வாசிப்புத் தேடலையும் படிப்புத் தகைமையினையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். பொருத்தமான படிப்புக் கருவிகளைத் தேடும்போது, சுவிற்சர்லாந்தின் Bibliomedia போன்ற சிறப்பு அமைப்புக்களிலுள்ள தொகுப்புகளிலிருந்து பயன் பெறலாம். ஒருவர் நீண்ட காலத்திற்கு வெவ்வேறு மொழிகளிலமைந்த புத்தகங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய இவ்வாறான அமைப்புக்கள் பல நாடுகளில் காணப்படுகின்றன.*

1ம் - 9ம் தரம் | 15 - 30 மணித்துளிகள்

**செயல்முறை:**

- ஓர் அமைப்பின் நூலகத்திலுள்ள மாணவர்களின் முதல் மொழியில் அமைந்த இருப்புக்கள் ஒன்றாக மீள்பார்வை செய்து கலந்துரையாடப்படும். பொருத்தமானவை தெரிவு செய்யப்பட்டு முற்பதிவு ஒழுங்கு செய்துகொள்ளலாம்.
- நூல்களைப் பெற்றவுடன், மாணவர்கள் நூல்களை வீட்டுக்கு படிப்பதற்கு எடுத்துச் செல்லலாம். 4-6 கிழமைகளுக்கு, பா.மொ.க வகுப்புக்களில் 15-30 நிமிடங்கள் மாணவர்களுக்குத் தமது படித்தல் பட்டறிவுகளைக் கலந்துரையாடவும் பரிந்துரைகளை மேற்கொள்ளவும் வழங்கப்படும்.
- இரு மாணவர்கள் செயற்பாட்டினைக் கட்டுப்படுத்தவும் இரவல் வழங்கப்படும் நூல்கள் நல்ல முறையில் திருப்பித்தரப்படுவதை உறுதிப்படுத்தவும் தேர்வுசெய்யப்படுகிறார்கள்.

**குறிப்புகள்:**

- தன் நாட்டு மொழியில் அமைந்த நூல் தொகுதிகளை உடைய பொருத்தமான நிறுவனத்தை கண்டுபிடிப்பதற்கு நூலகத்திற்கு பொறுப்பான ஒருவர் அல்லது ஆசிரியர்கள் உதவிபுரிவார்கள்.
- ஜேர்மனி, ஒஸ்ரியா, சுவீடன் மற்றும் சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளிலுள்ள பல்வேறு நிறுவனங்கள் பற்றிய தகவல்களும் இணைப்புக்களும் இயல் 4(ள), "நாடு சார் நிறுவனங்களில் நூல்களும் தகவல்களும்" என்னும் அறிமுகப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 4 ஒரு நூலகத்தைப் பார்வையிடுதல்

**இலக்கு**

*மாணவர்கள் நூலகமொன்றை (இயலுமானால் ஒரு பன்மொழிய நூலகம்) சென்று பார்வையிடுவதன் மூலம் நூலகமொன்றின் வெவ்வேறு வகையான பரந்துபட்ட நூல்களின் சேர்க்கையை பட்டறிவு அடிப்படையில் கண்டுகொள்வர். மாணவர்கள் நூலக இருப்புகள், தலைப்புகள் மற்றும் நூலகத்தின் கட்டமைப்பு பற்றிக் கற்றுக்கொள்வதுடன் சுழற்சிமுறைக் கட்டுப்பாடுகள் பற்றியும் அறிந்துகொள்வர். அத்தோடு மாணவர்கள் நூலகம் என்பது ஒரு கற்றல் இடம் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும், அதாவது, நூலகத்தை குறிப்பிட்ட கருப்பொருள்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நடுவணிடமாக உணர்ந்துகொள்ளவேண்டும்.*

1ம் - 9ம் தரம் | 45 - 50 மணித்துளிகள்

**செயல்முறை:**

- பெரும்பாலான நூலகங்கள் வகுப்புகளை வரவேற்று நூலகத்தின் அமைப்பு முறைகளை அவர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் ஆர்வம் காட்டுகின்றன. பல நூலகங்களில், பெரும்பாலும் பெரிய நூலகங்களில், அவை இரவல் கொடுப்பதற்காக வெவ்வேறு மொழிகளில் பல தலைப்புக்களிலமைந்த நூல்களைக் கொண்டிருக்கின்றன.
- அனைத்து மாணவர்களும் நூலகத்திற்கு செல்லப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். நூலகத்தில் உண்மையில் தமது விருப்புக்குரிய படிப்புத் தெரிவுகளைக் கண்டறியவேண்டும். இது பல்வேறு தலைப்புகளை உட்படுத்தலாம், சமையற்கலை நூல்கள், உதைபந்தாட்டச் சஞ்சிகைகள், காதல் கதைகள், நகைச்சுவைக் கதைகள். தன் நாட்டு மொழியில் எழுத்துருக்களைத் தேடுவதற்காக நூலகங்களில் கணினி வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

**குறிப்புகள்:**

- பல்பண்பாட்டு நூலகங்கள் விரிவாக்கப்பட்ட பன்மொழித் தொகுதிகளையுடைய பாடசாலை நூலகங்கள் பற்றிய மேலதிக தகவல்களைப் பெற அத்தியாயம் 4(ன) இன் அறிமுகப்பகுதியைப் பார்க்க. பா.மொ.க ஆசிரியர்களுக்கும் வழமையான வகுப்பறை ஆசிரியர்களுக்கும் இடையிலான கூட்டிணைவின் உகந்த கருத்திட்டமே பாடசாலை உள்ளக நூலகத்தின் பன்மொழிய விரிவாக்கமாகும். அத்தியாயம் 4(உ)ஐயும் பார்க்க.
- பன்மொழிய அல்லது பல்பண்பாட்டு நூலகமொன்றிற்குச் செல்லுதல் மிகச் சிறப்பானதாக இருக்கும், ஏனெனில் மாணவர்கள் தம்முடைய மொழியில் அமைந்த நூல்களையும் அங்கு காண்பர், அந்த வாய்ப்பில்லாவிட்டால் நூலகத்திற்கு செல்லும் எண்ணத்தைக் கைவிட்டு விடாதீர்கள். ஏனெனில் இது கல்வியை பெற்றுக்கொள்வதில் பின் தங்கிய நிலையில் காணப்படும் மாணவர்களுக்கு புதிய உலகமொன்றின் திறவுகோலாகவும் தகவல் களஞ்சியமாகவும் திகழ்கின்றது. இதற்கு மேலாக, நூலகங்கள் எப்பொழுதும் பா.மொ.க வுக்கும் பெறுமதியானவைகளாகக் கொள்ளப்படும் உசாத்துணைப் பகுதிகள் முதலியனவற்றையும் கொண்டிருக்கின்றன.
- நூலகத்திற்கு செல்லும் முன்னர், வழமையான வகுப்பறை ஆசிரியர்களிடமிருந்து மாணவர்களுக்கு நூலகம் பற்றிய அறிமுகம் மற்றும் அதன் பயன்பாடு மற்றும் அவர்களுடைய விளக்கத்தை ஆழமாக்குதற்கு என்ன செய்யப்பட வேண்டும் என்பது பற்றி அறிந்துகொள்வது பயனுடையதாகும்.
- நூலகத்திற்கு செல்லும் முன்னர், நூலகப் பணியாளர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி பதிவினை மேற்கொள்வது இன்றியமையாததாகும். நூலகம் மாணவர்களின் தன் நாட்டு மொழியிலமைந்த நூல் தொகுதியை முன்கூட்டியே ஏற்பாடு செய்ய அல்லது முசனநச செய்ய வாய்ப்புகள் இருக்கலாம். செல்லும் முன்னர், நூலகத்தின் சுழற்சிக் கட்டுப்பாடுகள் பற்றி விளங்கிக்கொள்வது இன்றியமையாததாகும். பல சமூகங்களில் நூலக வளங்கள் மாணவர்களுக்கு எவ்வித கட்டணமுமின்றி இரவல் வழங்கப்படுகின்றன.
- முடிந்தால், ஒவ்வொரு மாணவனும் / மாணவியும் புத்தகமொன்றைக் கடனாகப் பெறவேண்டும். பின்னர் வரும் வகுப்புக்களில் அதைச் சுருக்கமாக வகுப்பிலுள்ள ஏனைய மாணவர்களுக்கு எடுத்துரைக்க வாய்ப்பு வழங்கப்படவேண்டும்.

---

# 5 டொமினோ நூல்

**இலக்கு**

*டொமினோ விளையாட்டை நூல்களுடன் விளையாடலாம். இது மாணவர்களை நூல் இருப்புகளுடன் (எ.டு. நூலகத்திலிருந்து) நெருக்கமான அறிமுகத்தை ஏற்படுத்த ஒரு வழக்கத்துக்கு மாறான ஒரு வழியாகும், அதனால் அவர்கள் அதைப் பற்றிக் கற்றுக்கொள்ளவும் புதிய நூல்களை (தனியார் திரட்டுகளிலிருந்தும் உள்ளடக்கப்பட்ட) அறிந்துகொள்ளவும் கற்கின்றனர்*

1ம் - 9ம் தரம்

20 - 30 மணித்துளிகள்



**கருவிகள்:**
பல வெவ்வேறு நூல்கள், பட நூல்கள், சஞ்சிகைகள், போன்றன.


**செயல்முறை:**

- ஒவ்வொரு மாணவரும் (அல்லது 2-3 பேர்கொண்டகுழுக்கள்) மூன்று அல்லது நான்கு நூல்களை கொண்டிருக்குமாறு ஒரு தொகுதி புத்தகங்கள் வகுப்பில் வழங்கப்படும். மாணவர்களின் வயதடிப்படையில் நூல்கள் வழங்கப்படுவதோடு தொடக்கநிலை மாணவர்களுக்குப் பக்கத்துணை செய்யவேண்டும். மாணவர்களுக்கு நூலைப் பார்வையிட ஐந்து நிமிடங்கள் வழங்கப்படும். மாணவர்கள் நூல்களின் அட்டையைநெருக்கமாகப் பார்ப்பர், சுருக்கத்தைப் படிப்பர், எழுத்துருவைப்பார்வையிடுவர். அதில் இருக்கக்கூடிய விளக்கப்படங்கள், பட்டியல், இயல் பிரிவுகள், அல்லது நூலாசிரியரின் புகைப்படம் போன்றவற்றையும் கவனிக்கவேண்டும். மாணவர்கள் பின்னர் டொமினோ விளையாட்டை விளையாடுவதற்காக நூல்களின் பண்புகளைப் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளச் செய்வதே இதன் இலக்காகும்.
- பின்னர் ஆசிரியர் அறிந்த பண்புகளின் அடிப்படையில் நூலொன்றை விபரிப்பார், அதாவது, அவன் / அவள் "அது ஒரு பட நூல், அது நல்ல நிறமுடையது, அதன் கருப்பொருள் நம் பிறப்பு நாட்டின் இயற்கை வளம்" என்றவாறு கூறலாம்.




அதற்கேற்ப, வழமையான டொமினோ விளையாட்டில் உள்ளவாறு ஒரு "கல்லானது" ஒத்த கல்லின் பக்கத்தில் வைக்கப்படுவது போல் ஒரு நூலானது அதற்கு ஒத்த பண்புகளுடைய இன்னொரு நூலுடன் வைக்கப்படும் (கீழே பார்க்க). அதற்குப் பக்கத்தில் இன்னொரு நூலைச் சேர்க்க விரும்புபவர் அதற்கான காரணத்தை விளக்கவேண்டும். ஏனையோர் அப்பண்பு தொடர்புபடுகிறதா என முடிவெடுப்பர். இங்கு எளிமையான பண்புகள் முதல் (எ.டு. நீல நிற அட்டைப்பக்கம், பெண் எழுத்தாளரால் எழுதப்பட்டது, தலைப்பானது ஒரு என ஆரம்பிக்கின்றது) சிக்கலானவற்றுடன் புத்தகத்தின் உட்பொருள் சார்ந்த காரணங்களையும் கருத்திற் கொள்ளலாம் (அதாவது, தாளில் தேர்ந்தெடுத்த கதை, கதையின் முதன்மைக் கதாமாந்தர்களும் சகோதரிகள், கதைக்களம் துருக்கியில் அமைந்துள்ளது).

- இந்த விளையாட்டை அனைத்து புத்தகங்களும் டொமினோவில் உள்ளடக்கப்படும் வரை விளையாடலாம் அல்லது 10-15 மணித்துளிகளின் பின் நிறுத்திக் கொள்ளலாம். இதைத் தொடர்ந்து ஒரு சிறு கலந்துரையாடல் "வைக்கப்பட்டுள்ள நூல்களில் எதை ஒவ்வொருவரும் வாசிக்க விரும்புகின்றனர்?" என்ற வினாவுடன் இடம்பெறலாம்.




# 6 முதல் வாக்கியங்கள்

**இலக்கு**

*இந்த எண்ணக்கருவின் மூலம் மாணவர்கள் வெவ்வேறு நூல்களுடனும் எழுத்துருக்களுடனும் நண்பர்களாகிக் கொண்டு எடுகோள்களை உருவாக்கி முழு எழுத்துருவையும் படிக்க ஊக்குவிக்கப்படுவர். தாங்கள் குறிப்பாக விரும்பிய முதல் வாக்கியத்தை அடிப்படையாகக்கொண்டு தாம் விரும்பியவாறு தம்முடைய கதையை எழுதலாம்.*

2ம் - 9ம் தரம் | 60 மணித்துளிகள்

**கருவிகள்:**
பல்வேறு நூல் தொகுதி மற்றும் சஞ்சிகைகள் (ஆசிரியரால் வழங்கப்படுபவை), A3 தாள்

**செயல்முறை:**

- பல எழுத்தாளர்களுக்கும் சில வேளைகளில் படிப்பவர்களுக்கும் கூட முதல் வாக்கியமானது மிக இன்றியமையாததாகிறது.

- மாணவர்கள் நூல்களிலும் சஞ்சிகைகளிலும் தமக்குப் பிடித்த முதன்மை வாக்கியங்களைத் தேடுவர். இதற்காக ஆசிரியர்களும் மூத்த மாணவர்களும் புதியவர்களுக்குத் துணை புரியலாம். மாணவர்கள் தாம் தெரிந்தெடுத்த முதல் வாக்கியங்களை தாள் ஒன்றில் அழகாக எழுதுவர் (A3 தாள்). மேலும் செயற்பாடுகளுக்கான வாய்ப்புகள் (குழுக்களாக அல்லது முழு வகுப்பாக):

  அ) மாணவர்கள் வாக்கியங்களைப் படித்து அது எந்த நூலில் அல்லது சஞ்சிகையிலிருந்து எடுக்கப்பட்டது என்பதைக் கண்டுபிடிக்க முயல்வர்.

  ஆ) அம் முதல் வாக்கியத்தின் அடிப்படையில் எத்தகைய கதை அமையலாம் என மாணவர்கள் கருதுகைகளை ஆக்குகின்றனர். எழுத்துரு எவ்வகைப்பட்டது எனவும் (திரில்லர், கற்பனைக் கதைகள், பத்திரிகைக் கட்டுரைகள், உண்மைக் கதைகள், அறிவியல் சாரா கதைகள், இயக்கும் ஆணைகள் போன்றன) மாணவர்கள் ஊகிக்க முயல்வர்.

**மாற்று முறைகள்:**

- மாணவர்கள் வழங்கப்பட்ட வாக்கியங்களிலிருந்து தாம் விரும்பிய ஒன்றை தெரிந்தெடுத்து அதன் அடிப்படையில் தாமாகவே கதையொன்றை இயற்றி பின்னர் அதை வழங்கப்பட்ட உண்மை எழுத்துருவுடன் ஒப்பிடல்.
- அதே போல் மாணவர்கள் நூல்களிலும் சஞ்சிகைகளிலும் தமக்குப் பிடித்த இறுதி வாக்கியங்களை தெரிந்தெடுத்து அதன் அடிப்படையில் அக்கதை எவ்வகைப் பட்டது எனவும் கதையோட்டம் பற்றியும் கருதுகோள்களை உருவாக்குவர்.
- அடுத்து வரும் பயிற்சி சூ7 (கருதுகோள்களை உருவாக்குதல்) ஒரு சிறந்த விரிவாக்கப் படிமுறையாகும்.

---

# 7 கருதுகோள்களை உருவாக்குதல்

**இலக்கு**

*ஒருவரின் சொந்த எதிர்பார்ப்புக்களுடனும் ஊகங்களுடனும் புனைகதை நூல்களுடன் ஒப்பிடக்கூடியதாக இருப்பதால் அவை படிப்பவரை மேலும் படிக்கத் தூண்டுகின்ற இன்றியமையாத காரணியாகும். ஒருவரின் ஊகங்கள் சில வேளைகளில் உண்மையானவையாக அல்லது பிழையானவையாக இருக்கலாம். இப் பயிற்சியானது கருதுகோள்களையும் மொழிசார் எதிர்பார்ப்புக்களையும் முறைப்படுத்த மாணவர்களின் விழிப்புணர்வை கூர்மையாக்குகின்றது.*

2ம் - 9ம் தரம் | 25 - 45 மணித்துளிகள்



**கருவிகள்:**
பல்வேறு புத்தகங்கள் (ஆசிரியரால் ஏற்கனவே தயாரிக்கப்பட்டவை)

**செயல்முறை:**

- மாணவர்கள் இருவர் கொண்ட குழுக்களாக கதையொன்றின் தொடக்கத்தை (எ.டு. முதலாவது இயல் அல்லது முதற் பக்கம்) படிக்கின்றனர். இளைய அல்லது பின்தங்கிய மாணவர்களுக்கு இதைப் படிக்கலாம் அல்லது பகுதியாக அல்லது முழுமையாகக் கூறலாம் (இதற்காக இளையவர்களும் முது மாணவர்களுமான குழுக்களை அமைக்கலாம்). வகுப்பின் அமைவிற்கேற்ப, இக்கருத்துக்காகப் பல்வேறு நூல்கள் பரிந்துரைக்கப்படலாம் (மாணவர்களின் வயது, பாலினம் மற்றும் விருப்புக்கள் அடிப்படையில்).
- அதன் பின், இரு குழுவினரும் கலந்துரையாடி கூடுதலான மேம்பாடுகள் பற்றிய தங்கள் எடுகோள்களை பட்டியலிடுவர். (கதை எவ்வாறு தொடரும், எது உணர்வூட்டுவதாக, மெதுவானதாக, வேடிக்கையானதாயிருக்கும்? ).
- குழுவினர் தமது கருதுகோள்களை வகுப்பில் முன்வைப்பர். நூலை அல்லது கதையைத் தெரிந்த யாராவது எழுத்துரு எவ்வாறு தொடர்கிறது எனக் கூறுவார். வகுப்பில் யாருமே எழுத்துருவை அல்லது நூலை வாசித்திருந்திருக்காவிடில், மாணவர்கள் தமது கருதுகோள்களை தாமே மீள்பார்வை செய்து கொள்ளலாம். அவர்கள் நூலைப் படித்து கதை வளர்ச்சி பற்றிய தங்கள் ஊகங்களை மூலப்படியுடன் ஒப்பிடுவர்.

---

**குறிப்புகள்:**

சிறந்த எளிமையான தொடக்கப் பயிற்சிக்கு, பயிற்சி #6 ஐ பார்க்க (முதல் வாக்கியங்கள்).

---

**மாற்று முறைகள்:**

- எல்லா அல்லது பல குழுவினர் ஒரே முதல் இயலை படித்திருந்தால், அவர்கள் பட்டிமன்றமொன்றில் ஈடுபடலாம். எந்த கருதுகோள் மிகப் பொருத்தமானது? ஏன்?
- கூட்டுப் படித்தலுக்கு இட்டுச்செல்வதற்கு இப்பயிற்சியும பொருத்தமானதாகும். இந் நூலின் தொடக்கம் உரத்துப் படிக்கப்படும் அனைத்து மாணவரும் எழுத்துருவுக்கான தமது கருதுகோள்களை எழுதிக்கொள்வர். பின்னர் இவை ஒரு புதையற் பெட்டியினுள் மறைத்து வைக்கப்படும். பொதுவான படித்தலின் முடிவில், பொருத்தமான கருதுகோள் எது என வகுப்பில் பரிசீலிக்கப்படும்.

I

# 8 வண்ணப் பைகளில் நூல்கள்

**இலக்கு**

*சின்னஞ்சிறார்கள் சிறப்பு விதமாக வியப்புகளை விரும்புவர். இக்கருத்துடன், அவர்கள் உள்ளடக்கம் பற்றி ஆர்வமடைகின்றனர், அதுவும் படிப்பதற்கான ஊக்குவிப்பை அதிகரிக்கும்.*

1ம் - 9ம் தரம்


30 மணித்துளிகள்



**கருவிகள்:**
பல்வேறு நூல்கள்,
அன்பளிப்பு பொதிசெய்யும் தாள்

**செயல்முறை:**

- ஆசிரியர் ஒவ்வொரு மாணவனுக்கும் / மாணவிக்கும் வண்ண வண்ண அன்பளிப்புப் பொதி செய்யும் தாளினால் பொதி செய்யப்பட்ட ஒரு நூலை ஒரு பையினுள் வைப்பார் (பின்னர் இதனை மூத்த மாணவர்களும் செய்யலாம்). பின்னர் இவ் வண்ண வண்ணப் பைகள் கூடையொன்றினுள் வைக்கப்பட்டு வகுப்பில் முன் வைக்கப்படும். வெவ்வேறு வயதினருக்கு வெவ்வேறு நிறங்களை பயன்படுத்துவது பயனுடையதாகும். (சிவப்புப் பைகள் ஶ்ரீ சிறார்களுக்கு, நீலம்: 4ஆம் - 6ஆம் தரம், பச்சை: 7ஆம் - 9ஆம் தரம்).
- ஒவ்வொரு பிள்ளையும் ஒரு "வண்ணப் பையை" எடுத்துப் பிரித்துப் பார்க்கலாம். முதல் படித்தலுக்காக, பக்கங்களைப் புரட்ட, நூலினுள் மேய ஒவ்வொருவருக்கும் 10 மணித்துளிகள் வழங்கப்படும். பிள்ளைக்கு அது ஏற்கனவே தெரிந்த நூலாயின், அல்லது முற்றிலும் அதனை எதுவும் செய்ய முடியவில்லையெனின், அவன் / அவள் ஆசிரியர் மூலம் வேறொன்றை பரிமாற்றிக்கொள்ளலாம்.
- தொடர் முடிவில், மாணவர்கள் நூல்களை படிப்பதற்கு அல்லது வேறொருவர் தமக்குப் படித்துக்காட்டுதற்கு வீட்டுக்கு எடுத்துச்செல்வர். ஒன்று அல்லது இரண்டு கிழமைகளின் பின்னர் பள்ளிக்குத் திருப்பி ஒப்படைக்கப்படும். மாணவர்கள் தாம் படித்தவற்றை மற்றவர்களுடன் பரிமாறி, ஒப்பிட்டு, படித்தல் முன்னூட்டல் குறிப்புகளை ஒவ்வொருவருக்கும் வழங்குவர்.



**மாற்று முறைகள்:**

முறையே வண்ணப் பைகளில் அல்லது பொதிகளில் மாணவர்கள் ஏற்கனவே அறிந்த நூல்களும் இருக்கலாம் (எ.டு. ஆசிரியரால் அந்த ஆண்டில் மாணவர்களுக்குப் படித்துக்காட்டியவை, அல்லது ஏனைய மாணவர்களால் வழங்கப்பட்டவை). மாணவர்கள் தங்கள் நூலின் உள்ளடக்கத்தை துல்லியமாக மீண்டும் ஒரு தடவை தம்முள்வாங்கிக் கொண்டு (மற்றைய மாணவர்களுக்குக் காட்டிக்கொள்ளாமல்) அவற்றுக்கு விடுகதைகளை எழுதிக்கொள்வர்: பின்னர் அதை ஏனையோரிடம் வினவி நூலின் பெயரைக் கண்டுபிடிக்கச் செய்யலாம். புதிர் வினாக்களுக்கு எடுத்துக்காட்டுகள்:"எனது நூலின் முதன்மைக் கதைமாந்தரின் தந்தை ஓர் அரசனாவார்", "எனது நூலின் கதை நம்முடைய நாட்டில் 1000 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றதாகும்", "எனது நூலின் முதன்மைக் கதைமாந்தர் இரு சிவப்புப் பின்னல் வாலை உடையவர்", முதலாவதாக வழங்கப்படும் தகவல் மிகப் பொதுவானதாக இருக்கவேண்டும் யாராலும் கண்டுபிடிக்க முடியாவிடில், மேலதிக தகவல்களை வழங்கலாம். (கருத்து #13 "துணுக்குத் திரள்" ஐயும் பார்க்க).

# 9–11 நூல்களையும் எழுத்தாக்கங்களையும் படித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

# 9 கட்டற்ற படிப்புத்தொடர்கள் (தனிப்பட்ட படித்தல்கள்)

**இலக்கு**

*வகுப்பில் நூல்களைக் கற்பதற்கு மேலதிகமாக, நூல்களைத் தமக்குரிய வேகத்தில் தம் தெரிவுகளுக்கேற்றவாறு படிக்க மாணவர்களுக்குச் சில வேளைகளில் நேரம் வேண்டப்படலாம். இது குறிப்பிட்ட அளவு அவர்களுடைய படித்தல் மற்றும் தகைமைக்கான ஊக்குவிப்பை கூட்டுகிறது.*

1ம் - 9ம் தரம் | 20 - 30 மணித்துளிகள்


**கருவிகள்:**
நூல்கள், சஞ்சிகைகள், நடைமுறை மற்றும் அன்றாட எழுத்துருக்கள், இணையத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பக்கங்கள் ஆகலாம்.

**செயல்முறை:**

கட்டற்ற படித்தல் தொடரானது 20-30 மணித்துளிகளுக்கு நடைபெறும் எல்லா மாணவர்களும் தாம் படித்தவற்றை அறிக்கையிடுதல், கேள்விகள் கேட்டல், பரிந்துரைகளை முன்வைத்தலை உடைய ஒரு கலந்துரையாடலுடன் இதனை முழுமைப்படுத்தலாம்.

**மதியுரைகள்**

- கட்டற்ற படிப்புத் தொடர் ஒழுங்குமுறையாக நடைபெறவேண்டும். இவ் வேலையானது பலவகைப்பட்ட பா.மொ.க வகுப்புக்கள் மற்றும் தொடர்ச்சியான செயன்முறைகளில், வகுப்புக்களில் வெவ்வேறு வயதினருடன் ஆசிரியர் ஈடுபடுகின்ற வேளையில், மிக நன்றாக செயற்படக் கூடியது.
- கட்டற்ற படிப்புத் தொடர்களில், மாணவர்கள் தாம் எதைப் படிக்க வேண்டும் என்பதைத் தீர்மானித்துக் கொள்ளலாம். அதற்காக அவர்கள் எங்காவது செல்லலாம், ஆனால் அங்கு படித்தல் மட்டுமன்றி வேறெதுவும் செய்யக்கூடாது.
- கட்டற்ற படிப்பு நேரத்தைப் பயனுள்ள முறையில் பயன்படுத்த, மாணவர்கள் படித்தல் திட்டமொன்றை உருவாக்கவும், அத்துடன் படித்தல் பதிவு ஒன்றைப் பேணவும் கற்றுக்கொள்ள வேண்டும. படித்தல் பதிவு ஒருவரின் படித்தல்கள் பற்றிப் பின்னர் கலந்துரையாட துணைசெய்யும். இரு திட்டங்களுக்கான குறிப்பிட்ட பரிந்துரைகளை சூ11 "கற்பித்தல் மதியுரைகள்" இல் காணலாம்.
- இக் கட்டற்ற வாசிப்புத்தொடர்கள் ஒரு குறித்த பணியில் 20 மணித்துளிகளுக்கு மேல் முழுக் கண்காணிப்பைச் செலுத்த முடியாத அல்லது நூலொன்றுடன் எளிதாக இயைபுபட முடியாத சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் ஏற்றவாறு அமைக்கப்படவேண்டும். தொடக்கத்திலாவது தெளிவான வழிகாட்டுதல்களும் அறிவுறுத்தல்களும் வழங்கப்படுவது இன்றியமையாதது. இத்தொடர்களின்போது ஒலிகள், கண்காணிப்புக்கலைப்பான்கள் ஆகியவை தடைசெய்யப்பட வேண்டும், மாணவர்கள் தங்கள் படித்தல் நேரத்தை முன்கூட்டியே திட்டமிடவேண்டும், மற்றும் அவர்களுடைய வேலைக்கு அவர்களே பொறுப்புடையவர்கள், தொடர் முடிவில் எதை எப்படி அவர்கள் படித்தார்கள் என்பது பற்றி அறிக்கையிட வேண்டும் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.
- மாற்றாக, கட்டற்ற படிப்புத்தொடர்களை முழுமையாக்க கீழே சூ11 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குழுக்களாகவோ வகுப்பாகவோ படிப்பில் ஈடுபடுவதும் சிறந்தது.



I


# 10 உரத்துப் படித்து மற்றவர்களுக்காக ஒலிப்பதிவு செய்தல்

**இலக்கு**

*இவ் எண்ணக்கரு இரு குறிக்கோள்களை உள்ளடக்கியது:*
*1. ஒன்று, மாணவர்கள் தங்குதடையின்றியும் வெளிப்பாட்டுத் திறனுடனும் ஒலிப்பதிவுக் கருவியொன்றில் பதிவு செய்வதற்கு எப்படி ஓர் எழுத்துருவைப் படித்தல் வேண்டும் எனக் கற்றுக்கொள்ளல்வேண்டும்.*
*2. மற்றையது, இவ்வாறு ஒலிப்பதிவு செய்து கொள்வது இளைய மற்றும் பின்தங்கிய மாணவர்களிடையே எழுத்துருக்களிலுள்ள ஆர்வத்தினை முன்னேற்றுதற்குத் துணைசெய்யவேண்டும், அவர்கள் வீடுகளில் அல்லது பள்ளிகளில் இவ் ஒலி ஆவணங்களை (ஒலிப்பதிவுப் நூல்கள் போல) செவிமடுப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது.*

2ம் - 9ம் தரம் | 30 - 45 மணித்துளிகள்

**கருவிகள்:**
வெவ்வேறு எழுத்துருக்கள் (சிறுகதைகள், கவிதைகள், சுவையான கட்டுரைகள், வேடிக்கைகள், நிகழ்ச்சித்தொடர்கள், நூல்கள் போன்றன), ஒலிப்பதிவுக் கருவி.



**செயல்முறை:**

- முதலில் ஆசிரியர் "அழகான" வெளிப்பாடு கொண்ட உரத்து வாசிப்பை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதை மாணவர்களுக்கு விளக்குவார், பின்னர் இது பயிற்சி செய்யப்படும். இதற்காக ஆசிரியர் முறையே குறைந்த படித்தலுக்கும் சிறப்பான படித்தலுக்கும் மாதிரியாக சிறிய எழுத்துருவொன்றை வாசித்துக் காட்டுவார் (எ.டு. சலிப்பான, மாறுதலே இல்லாத ஒலிப்பில், சரியான ஒலிப்பில்லாத எதிர் சொற்றிறன் கொண்ட படிப்பு): வேறுபாடுகள் என்ன? இன்றியமையாதன எவை? பொருத்தமான விதிமுறைகள் கரும்பலகையில் எழுதி விடப்படும்.
- தொடர்ந்து மாணவர்கள் எழுத்துருவொன்றை (தனித்தனியே, இணையாக அல்லது மூவர் கொண்ட குழுக்களாக) பெறுகின்றனர் அல்லது தாமே ஓர் எழுத்துருவைத் தெரிந்து கொள்வர். மாணவர்கள் அதனை சொற்றிறனுடன் படிக்கப் பழகுவர். எழுத்துருவின் தன்மையின் அடிப்படையில் மாணவர்கள் சில வகிபாகங்களை வெளிப்படுத்தலாம் அல்லது அவர்கள் சுழற்சி முறையில் படிக்கலாம் (உரத்துப் படிப்பதற்கு பயனுள்ள மதியுரைகளை பக்கம் 38 இல் பார்க்க).
- போதுமான சொற்றிறன் கொண்ட படித்தலுக்குப் பின், கேட்பொலி (யரனழை) ஆவணங்களை உருவாக்கலாம். ஒலிப்பதிவுகள் கையடக்கத்தொலைபேசி, கணினி, சொற்களை ஒலிக்கும் கருவி, ஒலிப்பதிவு நாடா போன்றவை மூலமாக ஒலிப்பதிவு செய்யலாம். சிறந்த ஒலித்தரம் பெறப்படுவது இன்றியமையாததாகும் (இதனை ஆசிரியர் கவனித்தல் வேண்டும்).
- நிறைவுசெய்யப்பட்ட கேட்பொலி (audio) ஆவணங்களை வகுப்பில் மீண்டும் கேட்க வழிசெய்யலாம். இப் பதிவுகளை வீடுகளிலே அல்லது கட்டற்ற வாசித்தல் தொடர் நேரத்தில் கேட்கவும் வெளியே கொண்டுசெல்ல வாய்ப்பு வழங்கவேண்டும். MP3 கள் அல்லது இறுவட்டுகள் ஆகிய மின்னியல் கோப்புகளை ஏனையவர்கள் அல்லது வகுப்பு அணுகுதற்கு வழிசெய்ய வேண்டும்.

---

**குறிப்புகள்:**

- இன்றியமையாதது: முன்கூட்டிய படித்தல் பயிற்சியின்றி ஒருபோதும் உரத்துப் படிக்காதீர்கள். இந்த வாய்வழி படித்தல் பயிற்சி, மாணவர்களுக்கு எதனை எவ்வாறு பயிற்சி செய்வதென தெளிவாகத் தெரிந்துகொண்டால், நல்ல வீட்டு வேலையாகவும் அமையலாம்.
- இதற்கு வேண்டிய பொருத்தமான கருவிகள் வருமாறு: சிறு எழுத்துரு அலகுகள் (சிறுகதைகள், வேடிக்கைகள், நிகழ்ச்சித்தொடர்கள், கவிதைகள், உரையாடல்கள்). சிறு நூலை விட முழுதாக ஒன்றைப் பதிவு செய்வதும் நலம். அறிவுறுத்தல் ஆலோசனை 1 ஐயும் பார்க்க.
- ஒலிப்பதிவுகள் ஒலி விளைவுகளூடாக மெருகூட்டப்படலாம் - பல்வேறு சிக்கலான இசை முதலியவற்றிலிருந்து ஒரு குறுகிய வானொலி நாடகம் ஒன்றை உருவாக்குதல் போன்று மெருகூட்டப்படலாம். இது பா.மொ.க வுக்கு வழங்கப்பட்டுள்ள நேர ஒதுக்கீட்டை விட கூடுமாதலால், பெரும்பாலான இவ் வேலைகள் வீட்டில் செய்யப்படுமாறு ஒதுக்கப்படலாம்.
- ஒரு கவரக்கூடிய பொருள் (இறுவட்டு, கேட்பொலிக் கோப்புகளின் தொகுப்பு, போன்றன) உருவாக்கப்படும் என்பதை மாணவர்கள் தொடக்கத்திலிருந்தே அறிந்திருக்க வேண்டும். இப்பொருளின் உருவாக்கம் (இறுவட்டு உறை) இணையத்திலோ அல்லது பெற்றோருக்கான நிகழ்ச்சிகளிலோ அதை முன்னிலைப்படுத்துவது இக் கருத்திட்டத்தின் மேலதிக பண்புகளாகும்.
- இக் கருத்திட்டம் வழமையான வகுப்பறைக் கற்பித்தலுடன் இணைக்கப் படுவதற்கும் மிகவும் பொருத்தமானது. இது இருமொழி மற்றும் பன்மொழி கேட்பொலிப் பதிவுகளையும் உள்ளடக்கலாம்.
- சில எழுத்துருக்கள் வகுப்புக்கு நேரடியாக வாய்மொழி எடுத்துரைப்பாக வழங்கப்படலாம்.

# 11 குழுக்களாக அல்லது வகுப்பாகப் படித்தல்

**இலக்கு**

*எல்லா மட்டங்களிலும் படித்தல் பட்டறிவுகளைப் பகிர்ந்து கொள்வது கல்வி சார்ந்ததும் உணர்வுசார்ந்ததுமாகும். கூட்டாகப் படிக்கும் எழுத்துரு தம்மிடையே கருத்துகளைப் பரிமாறல் பற்றி மாணவர்கள் எண்ணிப்பார்க்கலாம். இது புதிய முன்னோக்குகளை திறந்து வைப்பதோடு விளங்கிக் கொள்வதற்கான வெவ்வேறு வழிகளையும் முன்வைக்கின்றது. பொதுவான படித்தல் தொடர்ந்து இடம்பெறும் கலந்துரையாடல்களுக்கு உகந்த பல்வேறு வாய்ப்புக்களை வழங்குகின்றது. (கீழே பார்க்க)*

1ம் - 9ம் தரம் | 30 - 90 மணித்துளிகள்

**கருவிகள்:**
பல்வேறு ஒரே மாதிரியான நூல்கள் அல்லது எழுத்துருக்கள்.

**மாறுபாடு:**
ஒரே தலைப்பில் அமைந்த வெவ்வேறு எழுத்துருக்கள்.

**செயல்முறை:**

1. படிப்புப் படிமுறை (சீரான செயன்முறைகளுக்கு, கீழே பார்க்க)

   மாறுபாடு 1: எல்லா மாணவர்களும் ஒரே நூலை அல்லது எழுத்துருவை வாசிப்பர். இம் மாறுபாடு பொதுப் படிப்பு பட்டறிவு அடிப்படையில் கவர்ச்சியானதாக இருப்பினும், எழுத்துரு அனைத்து தேர்ச்சி மட்டங்களுக்கும் பொருத்தமானதாக அல்லது வெவ்வேறு வயது மாணவர்கள் கலந்த வகுப்பாக இல்லாதிருந்தால் மட்டுமே பா.மொ.க வுக்குப் பொருத்தமானதாகக் கொள்ளப்படும்.

   மாறுபாடு 2: மாணவர்கள் ஒரே தலைப்பின் கீழ் அமைந்த வெவ்வேறு எழுத் துருக்களைப் படிப்பர். பொதுப் படிப்பு பட்டறிவின் அடிப்படையில், மிகப் பொருத்தமான ஆய்வுப்பொருளானது எ.கா. "நம் பிறப்பு நாட்டின் வரலாற்றிலிருந்து", "கவிதைகள்", "நம் நாட்டைப்பற்றிய உண்மைக் கதைகள்", "எமது கவிஞர் ஒருவரைப் பற்றிய வெவ்வேறு எழுத்துருக்கள்" போன்றவை உள்ளடக்கப்படும். இத்தலைப்புகளுக்கான எழுத்துருக்கள் தேர்ச்சி மட்டங்கள் அல்லது வயது அடிப்படையில் தெரிவு செய்யப்பட வேண்டும் (எ.டு. புவியியல் பற்றிய பல்வேறு அளவான சிக்கல்களுடைய மூன்று உண்மை எழுத்துருக்கள், முதலியன). படிப்பு வகுப்பு முழுவதுமாக இடம்பெறாது, ஆனால் வயதடிப்படையிலும் தேர்ச்சி மட்டத்தின் அடிப்படையிலும் மூன்று குழுக்களாக இடம்பெற வேண்டும்.

2. தொடர் கலந்துரையாடல், செயற்படுத்தல்

   தெரிவு செய்யப்பட்ட மாறுபாட்டுடன், தொடர்ந்த கலந்துரையாடலானது முழு வகுப்பாக இடம்பெறும் (மாறுபாடு 1) அல்லது பொருத்தமான குழுக்களாக இடம்பெறலாம் (மாறுபாடு 2). இறுதியாக, மாறுபாடு 2 இல் விபரிக்கப்பட்டுள்ள குழுக்கள் உட்பட எல்லா மாணவர்களும் தமது படித்தல் பட்டறிவுகளை ஏனைய மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். பல தரப்பட்ட வயதினர் அதிகமுள்ள வகுப்புக்களில், மூத்த மாணவர்கள் எழுத்துருக்களை எவ்வாறு கையாள்கிறார்கள் தாம் படித்தவற்றை எவ்வாறு கலந்துரையாடுகின்றார்கள் என்பதை இளம் மாணவர்கள் கண்காணித்துக் கற்றுக் கொண்டு பயன்பெறுவர்.

   தொடர் கலந்துரையாடல்களின் மாறுபாடுகளும் கைகூடுகைகளும் பின்வருவனவற்றை உள்ளடக்குபவை: பேச்சுகள், தம்பக்க / எதிர்ப்பக்கக் கலந்துரையாடல்கள், வகிபங்கு / மேடைப்படைப்புகள், எழுதப்பட்ட ஒப்படைகள் போன்றன.

நெறிமுறை அணுகல்: படித்தல் எப்படி?

ஒரு பிள்ளை ஒரு வாக்கியத்தை அல்லது பல வாக்கியங்களை வரிசைப்படி உரத்துப் படிக்கும் பாரம்பரிய முறையானது வழக்கற்றுப்போனதும் தவிர்க்கப்பட வேண்டியதுமாகும். இது படிப்புத்திறனை மேம்படுத்தவோ வாசிப்பதை ஊக்குவிக்கவோ மாட்டாது. படிக்கும் வேகம், படிக்கும் முறைகள் மற்றும் படிப்புத் தகைமை ஆகியவற்றின் வேறுபாடுகள் மிக உயரியன

பின்வரும் மாறுபாடு பரிந்துரைக்கப்பட்டுள்ளது: படிப்பதற்காக மாணவர்களை இரண்டு அல்லது மூன்று குழுக்களாக வேறுபடுத்துக. இவ்வாறு வேறுபடுத்தும் போது ஒரு குழுவிலுள்ள நபர்கள் ஒரே தேர்ச்சி மட்டத்தைக் கொண்டிருக்குமாறு பார்த்துக் கொள்க.

படிக்கத் தொடங்க முன் ஒவ்வொரு குழுவும் தமக்கான படிப்புத் திட்டமொன்றை உருவாக்கிக் கொள்வர். படித்த பின் மாணவர்கள் தாம் எவ்வாறு முன்னெடுத்தனர் என்பதையும் தாம் இன்றியமையாத உள்ளீடாகக் கருதுபவற்றையும் படித்தல் பதிவில் குறித்துக்கொள்வர். தொடர்ந்து வரும் பக்கங்களில் இதற்கான

I

எடுத்துக்காட்டுகளைக் காணலாம்.
விரைவாகப் படித்த குழுக்கள் அல்லது படித்து முடித்த குழுக்கள் கூடிய பணிகள் பெறும், அவை வருமாறு:

- ஓர் இயலை அதனை வழுவின்றிக் கையகப்படுத்தும் வரையும் வாசித்தல் பயிற்சியைச் செய்யவும். ஒரு பதிவினை உருவாக்கவும். இதனை பின்னர் உங்கள் வகுப்புத் தோழர்களுக்கு வழங்கவும்.
- தனித்தனி இயல்களைச் சுருக்கி அவற்றைப் பின்னர் எடுத்துரைப்புச் செய்யவும், எ.டு. வகிபாகம், ஒரு வரைவு அல்லது வரைபடம் என்பதின் வடிவம்.
- தலைப்புப் பற்றிய அறிவை விரிவாக்குக, கருப்பொருள் அல்லது நூலாசிரியர் பற்றி கூடிய ஆய்வு நடத்துக.

**குறிப்புகள்:**

- கருவிகளின் தேர்வில் மாணவர்களுக்குக் தெர்வுரிமை இருப்பின், படிப்புக்கான ஊக்குவிப்பு வளர்கிறது. இந்த முடிவுக்கு, மாணவர்கள் உண்மையான தேர்வினைச் செய்வதற்கு பல்வேறு எழுத்துருக்கள் அல்லது நூல்கள் இருக்கவேண்டும் (2-4 ஒவ்வொரு அகவை அல்லது தேர்ச்சி மட்டத்துக்கு).
- குழுக்களாக அல்லது வகுப்பாக படித்தலை திரும்பத் திரும்ப பயற்சி செய்வது கட்டாயமாகும், ஏனெனில் அது கட்டற்ற படித்தல் தொடர்களிலிருந்து ஒரு மாற்றாக அதன் நல்ல முழுமைப்படுத்தலாவதைக் குறிக்கின்றது (பார்க்கவும் கற்பித்தல் பரிந்துரைகள் #9ஐப் பார்க்கவும்).

## எடுத்துக்காட்டுகள், படித்தல் திட்டம், படித்தல் அட்டவணை:

இவ்வெடுத்துக்காட்டுகள் பரிந்துரைகள் மாத்திரமே, இவை மாற்றியமைக்கப்படலாம். படித்தல் திட்டத்தின் சொல்லாக பழக்கமான விளிப்பினை (முன்னிலை ஒருமை, முன்னிலைப் பன்மை (டாச) க்கு எதிரான) "நீ" (னுர) யைத் தனிப்பயனாக்கலாம், இதனை தனிப்பட்டவர்கள் படித்தலுக்கு பொருத்தமாகப் பயன்படுத்தலாம்.

குழுவின் படித்தல் திட்டம்: ____________________

படித்தலைத் தொடங்க முன்னர், எவ்வளவு படித்தலைச் செய்யவுள்ளீர் மற்றும் எவ்வளவு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை திட்டமிடல் பயனுள்ளதாகும்.

அட்டவணையிலுள்ள பதிவு:

எந்த இயல் நீர் படிக்கவுள்ளீர்? எந்த நேரம் நீர் இந்த இயலை வாசித்திருப்பீர்?

| இயல் | கால அளவு |
|---|---|
| | |
| | |
| | |
| | |

திகதி: ____________

ஆசிரியர் ஒப்பம்: ____________________

குழு ஒப்பம்: ____________________

குழுவின் படித்தல் பதிவு:______________________________

படித்தல்களைத் தொடர்ந்து, தயவாக நீங்கள் எப்படி செயற்பட்டீர் என்பதையும் திட்டம் (படித்தல் திட்டம்) போதுமானதாக இருந்ததா என எண்ணிப்பார்க்கவும். தயவாக பின்வரும் கணிப்பீட்டை நிரப்பவும்:

நாம் எப்படி படித்தோம்

☐ நாம் அமைதியாகப் படித்தோம் (அவனாக / அவளாக)

☐ ______________________________எங்களுக்காகப் படித்தார்.

☐ நாம் திட்டமிட்ட அளவுக்குச் சென்றோம்.

☐ நாம் ____________ பக்கம் வரை படித்தோம்.

☐ நாம் வெவ்வேறு கட்டங்களில் உள்ளோம். ஆனால் எங்கள் எல்லோருக்கும்_________ பக்கம் வரையான கதை தெரியும்.

நாம் என்ன படித்துள்ளோம்: ______________________________

இக் கதைமாந்தர், செயல் அல்லது உண்மை குறிப்பாக எங்களைக் கவர்ந்தது.

______________________________

ஏன் இந்தகதை மாந்தர், செயல், உங்களைக் கவர்ந்தன என்பதை 2-3 வாக்கியங்களில் விவரிக்குக.

______________________________

______________________________

______________________________

எனக்கு, படித்தவற்றிலிருந்து இப் பந்திகள் மிகவும் இன்றியமையாதன:

______________________________

______________________________

______________________________

## படித்தல் பதிவுக்கு ஓர் எடுத்துக்காட்டு (1ஆம் - 2ஆம் தரம்)

நூல் தலைப்பு: ______________________________

நூலாசிரியர்: ______________________________

வரைதல்:

சொற்கள்: ______________________________

நான் நூலினைப் பின்வருமாறு கருதுகிறேன்

| மிக நல்லது ☺☺ | நல்லது ☺ | இரண்டாந்தரமானது ☹ | நல்லதல்ல ☹☹ |
|---|---|---|---|


I

# 12 எனது நூலை யாரால் கண்டுபிடிக்க முடியும்?

**இலக்கு**

*இப்புதிய எண்ணக்கருவுடன், மாணவர்கள் புதிய புத்தகங்களையும் பாடங்களையும் பற்றி கற்றுக் கொள்வதோடு, வாசிக்கவும் தூண்டப்படுவர். மாணவர்கள் ஒரு பக்கத்தை தெரிவு செய்து வாசிக்கும் போது அவ் விடயத்தை ஆழமாக உள்வாங்குவதோடு சரியாக வாசிக்கவும் ஆழமாக செவிமடுக்கவும் பழகிக் கொள்ள வேண்டும்.*

1ம் - 9ம் தரம் | 60 மணித்துளிகள்



**கருவிகள்:**
தெரிவு செய்த வெவ்வேறு நூல்களும் எழுத்துருக்களும் (படநூல்கள், அகரமுதலிகள், சஞ்சிகைகள் போன்றன) எழுத்துருக்கள் ஆசிரியராலோ மாணவர்களாலோ வழங்கப்படலாம்.

**செயல்முறை:**

- ஒவ்வொரு மாணவனும் / மாணவியும் ஒரு நூலை அல்லது எழுத்துருவைத் தெரிவுசெய்கிறான் / ள் அது என்ன நூல் என்பதை மற்றவர்கள் பார்க்காமல் இருக்கவேண்டும். புதிய மாணவர்கள் பட நூல் ஒன்றைத் தெரிவு செய்யலாம்.
- மாணவர்கள் "மறைவாக" தங்கள் நூல் தலைப்பினைப் பதிவதற்கு ஆசிரியர் பட்டியல் ஒன்றை ஆக்குவார்.
- மாணவர்கள் தலைப்பினை மறைப்பதற்கு தங்கள் நூலை ஓர் உறையினுள் இடுவர்.
- மாணவர்கள் தம் நூலிலிருந்து வகுப்புக்கு உரத்துப் படிப்பதற்காகப் பொருத்தமான ஒரு பந்தியைத் தேடுவர் (பந்தி கவர்ச்சியானதாகவும் சுவையானதாகவும் இருக்கும் அதே வேளை, நூல் பற்றிய எல்லாவற்றையும் எடுத்துக்காட்டி விடக்கூடாது). பொருத்தமான பந்தியைத் (அளவு: 1 / 3 - 1 பக்கம்) தெரிதல் எழுத்துருவின் ஆழமான தேர்வினை வேண்டிநிற்கும்.
- உரத்து படித்தலுக்குப் பயிற்சி செய்யவேண்டும்! உரத்துப் படித்தலுக்குப் பயிற்சி செய்ய மாணவர்களுக்கு போதுமான அளவு நேரத்தைப் பெறுவர் (வகுப்பறைக்கு வெளியே விரும்பத்தக்கது). இது வீட்டு வேலையாகவும் வழங்கப்படலாம். பட நூலைத் தெரிவு செய்யும் புதிய மாணவர்கள் அதிலுள்ள படமொன்றைப் பற்றி தெளிவாக விவரிப்பதற்குப் பணிக்கப்படுவர்.
- பின்னர் மாணவர்கள் தாம் தெரிவு செய்த பந்தியை வகுப்பில் படிப்பர் (அல்லது தெரிவுசெய்த படத்தை விவரிப்பர்). கேட்பவர்கள் அது எந்த நூலுக்குரியது அல்லது நூலின் வகை(திரில்லர், கற்பனையல்லாத கதை, கற்பனை கதைகள் போன்றன) என்ன என்பதை ஊகிக்க முயல்வர். மேலே உரத்துப் படிப்பதற்கான தலைப்புகள் மற்றும் நூலை ஊகிக்கும் பயிற்சிகளை 2-3 பாடங்களுக்கு மேலே பகிர்ந்துகொள்ளலாம்.

**குறிப்புகள்:**

இச் செயற்பாடானது ஒரு சிறிய போட்டியாகவும் நிகழ்த்தப்படலாம். சரியான தலைப்பை முதலில் கண்டுபிடிப்பவர் வெற்றி பெறுவார்.

**மாற்று முறைகள்:**

இச் செயற்பாடானது பல்வேறு வழிகளில் வேறுபடலாம். எடுத்துக்காட்டாக,

- பள்ளி மொழியில் எழுதப்பட்ட நூல்களையும் பயன்படுத்தலாம் இருப்பினும் முதல் மொழியிலேயே எடுத்துரைக்கப்பட வேண்டும்.
- ஆண்டு இறுதியில், ஆசிரியர் அந்த ஆண்டு முழுவதும் நூல்களிலிருந்து எடுத்து வகுப்பில் கலந்துரையாடிய பந்திகளை படிப்பார். அவை எந்த எழுத்துருவிலிருந்து எடுக்கப்பட்டன?
- அனைத்து தலைப்புப் பக்கங்களும் ஒரு தாளில் படியெடுக்கப்பட்டு இலக்கம் இடப்படும். மாணவர்கள் பந்திகளை அவற்றிற்குரிய தலைப்புப் பக்கங்களுடன் தொடர்புபடுத்துவர்.
- ஒரு குறிப்பிட்ட வகை பாடத்திற்கு தெரிவானது மட்டுப்படுத்தப்பட்டது (புனைகதைத் தலைப்புக்கள், உண்மை எழுத்துருக்கள், கவிதைகள், கற்பனைக் கதைகள்…).

- மாணவர்கள் பெற்றோர் மாலை நிகழ்வில் எழுத்துருப் பந்திகளைப் படிப்பர். பெற்றோரும் ஒரு நூற் பட்டியலைப் பெறுவர், ஊகிக்க வேண்டும்.
- மாணவர்கள் தமக்கு மிகவும் பிடித்த நூல்களை வகுப்புக்கு எடுத்து வந்து அதிலிருந்து வகுப்புக்குப் படிப்பர்.
- பெற்றோர், உறவினர்கள் மற்றும் ஏனைய ஆசிரியர்கள் அவர்களுக்கு பிடித்த நூல்களிலிருந்து ஒரு பந்தியைப் படிக்க அழைக்கப்படுவர்.

---

# 13 விடுகதை முடிச்சு

**இலக்கு**

*ஒரு நூலுக்கு அல்லது எழுத்துருவுக்கு விடுகதைகளைத் திரட்டுதற்கு, மாணவர்கள் எழுத்துருவின் விவரங்களிலும் திறவுப் பந்திகளிலும் கண்காணிப்புச் செலுத்தி கருவியினை மிக நெருக்கமாகப் படிக்க வேண்டும். விடுகதைகளை விடுவிப்பது சிறப்பாக இளம் பிள்ளைகளை படிப்பதற்குத் தூண்டுகின்றது.*

2ம் - 9ம் தரம் | 60 மணித்துளிகள்

**கருவிகள்:**
எழுத்துருக்கள் (நீண்ட கதைகள் அல்லாதவை, சஞ்சிகைகள் அல்லது இணையத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகள், சிறுவர்களுக்கான பட நூல்கள்) கடதாசித் தாள்கள், கத்தரிக்கோல், கம்பி.

**செயல்முறை:**

- தனியாள் வேலை: ஏற்கனவே தயார் செய்யப்பட்ட நூல் தொகுதியிலிருந்து மாணவர்கள் தம்மைக் கவரும் எழுத்துரு ஒன்றைத் தெரிவு செய்து அதை உன்னிப்பாக படித்து பாடத்தின் உட்பொருளை விளங்கிக் கொண்ட பின் விடையளிக்கக் கூடியவாறான வினாக்களை உருவாக்குவர்கள். எடுத்துக்காட்டுகள்: விடுமுறைக்குப் பின்னர் பள்ளியின் தொடக்க நாளில் கதாநாயகன் அணிந்த ஆடை என்ன? முதன்மைக் கதாப்பாத்திரத்தின் தந்தையின் பெயர் என்ன? ஆறு ஒலு திசைகாட்டியின் எத்திசை வழியே பாய்கின்றது?.
- இவ் வினாக்கள் தாளொன்றில் எழுத்துருவில் விடையளிக்கப்பட்ட வரிசையில் எழுதப்படும். ஒவ்வொரு வினாவின் கீழும் விடையெழுதுவதற்கு போதியளவு இடம் வழங்கப்படவேண்டும் (அதே தாளில் அல்லது இணைக்கப்பட்ட வெற்றுத்தாளில்).
- இக்கடதாசித் தாள்கள் நூலொன்றில் இணைக்கப்படும். இரு மாணவர்கள் நூலில் இணைக்கப்பட் விடுகதைகளையுடைய எழுத்துருக்களை பரிமாறிக்கொள்வர்.




- மாணவர்கள் மற்றவர்களிடமிருந்து பரிமாறப்பட்ட புத்தகத்தை அல்லது எழுத்துருவைப் படித்து (வீட்டுப்பாட ஒப்படையாக) விடுகதை முடிச்சிலுள்ள வினாக்களுக்கு விடையளிக்க முயற்சி செய்வர். பாடங்கள் படிக்கப்பட்டபின் விடைகள் ஒப்பிடப்படும்.
- மேலும் விடுகதைகளுக்கு விடையளிக்க விரும்புவோர் வேறு எழுத்துருக்களையும் அவற்றிற்குரிய விடுகதை முடிச்சுகளையும் ஏனைய மாணவர்களிடமிருந்து பெறலாம்.

---

**குறிப்புகள்:**

- "விடுகதை முடிச்சு" கருத்திட்டம் பல் கிழமைகளுக்கு நீட்டிக்கப்படலாம்.
- சரியாக எழுதவும் வாசிக்கவும் முடியாத சின்னஞ்சிறார்களுக்கு, இச் செயற்பாடானது பட நூல்களைப் பயன்படுத்தி மூத்த மாணவன் ஏற்படுத்திய விடுகதையைக் கொண்டு நிகழ்த்தப்படலாம்.

I

- "விடுகதை முடிச்சு" குழுக்களாலும் எளிதாக உருவாக்க முடியுமாகையால் தனிப்பட்ட மாணவர்கள் முழு நூலின் ஒரு பகுதியை மட்டும் படிக்கலாம்.
- நூலக பட்டறிவுகள் விடுகதை முடிச்சு உடைய நூல்கள் இளம் சிறார்களால் கூடுதலாக எடுத்துப் படிக்கப்படுவதைக் காட்டுகின்றன.

**மாற்று முறைகள்:**

வகுப்பறை நூலகத்திலுள்ள ஒவ்வொரு நூலுக்கும் மாணவர்கள் விடுகதை முடிச்சினை உருவாக்குதல் மூலம் ஆண்டு இறுதியில் பெரும்பாலும் அனைத்து நூல்களும் விடுகதை முடிச்சினைக் கொண்டிருக்கும்.

# 14 எழுத்தாக்கங்கள் பற்றிய வினாக்களை உருவாக்குதல்

**இலக்கு**

*ஒரு நூலைப் பற்றியோ அல்லது ஓர் எழுத்துருப் பற்றியோ வினாக்களை உருவாக்கி தீர்ப்பதற்கு எழுத்துரு உன்னிப்பாகப் படித்து விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, "விளங்கிக் கொள்ளல் பற்றிய வினாக்களையும்" மற்றும் "உருக்காட்டல் வினாக்களையும்" (கீழே பார்க்க) உருவாக்குவதற்கு, எழுத்துருவில் மறுமொழிகள் வெளிப்படையாக கூறப்படாமையால், உள்ளடக்கம் பற்றிய ஆழமான விளக்கம் வேண்டப்படுகிறது.*

4ம் - 9ம் தரம்

45 - 90 மணித்துளிகள்

**கருவிகள்:**
நூல்கள், சஞ்சிகைகள் (பெரும்பாலும் இணையத்திலிருந்து எழுத்துருக்கள்) குறிப்புத்தாள்

**செயல்முறை:**

- ஒரு கதையையோ, கட்டுரையையோ அல்லது முழு நூலையோ படித்த பின் வகுப்பு இரு குழுக்களாகப் பிரிக்கப்படும். குழுவிற்கு ஒப்படையாக எழுத்துருவின் உள்ளடக்கம் பற்றியும் முதன்மையான மையப்பொருள் பற்றியும் ஏனைய மாணவர்களிடம் வினவுவதற்கு வினாக்களை உருவாக்குதல். அவர்களுடைய வினாக்கள் பின்வரும் மூன்று வகைகளுக்குள் அடங்க வேண்டும்:
  - **நேரடி வினாக்கள்.** இவ் வினாக்களுக்கான விடைகள் பாடத்தில் காணப்படும். இவை பெரும்பாலும் நேரடியானவை (எ.டு. "சரி" அல்லது "பிழை" அல்லது துல்லியமாக காட்டி விடையளிக்கலாம்).
  - **உள்வாங்கல் வினாக்கள்.** இவ் வினாக்கள் உள்ளடக்கம் பற்றி ஆழமாக விளங்கிக்கொண்ட பின்னரே விடையளிக்கப்படக்கூடியவை. இவற்றுக்கு "கூர்ந்தநோக்குப் படித்தல்" வேண்டப்படுகிறது. இவற்றிற்கான விடைகள் முழுமையாக மயக்குநிலையிற் காணப்படுபவையல்ல (எ.டு. அவர் என்ன உணர்வில் இருந்தார்? ஏன் அவள் / அவன் இவ்வாறு நடந்துகொண்டாள் / ன்?).
  - **உருக்காட்டல் வினாக்கள்.** இவ் வகை வினாக்கள் உள்ளடக்கத்துக்கு மேற்பட்டவை. பொதுவாக இவற்றிற்கு சரியான விடைகள் இல்லை, மாண-வர்கள் மறுமொழிகளைக் கூற கலந்துரையாடல் வேண்டப்படுகிறது. (எ.டு. கதை முடிவின் பின்விளைவுகள் என்ன? ஏன் அவள் / அவன் இவ்வாறு நடந்துகொண்டாள் / ன்?).
- வினாக்களை விரிவுபடுத்தி மாணவர்கள் ஆசிரியரிடம் வழங்க வேண்டும். பின்னர் ஆசிரியர் வினாக்களை வழங்கி குழுக்களாகவோ அல்லது முழு வகுப்பாகவோ மாணவர்களை விடையளிக்கச் செய்வார்.
- வெவ்வேறு வகை வினாக்களுக்கிடையிலான வித்தியாசம் முன்கூட்டியே உதாரணங்களுடன் விரிவாக கலந்துரையாடப்படும். மதிப்பீட்டு வினாக்களுக்கு துல்லியமான விடைகள் இல்லாததால், எச் சந்தர்ப்பத்திலும், அவை தெளிவாகக் கலந்துரையாடப்பட வேண்டும்.

**குறிப்புகள்:**

- பெரும்பாலும் பல தரப்பட்ட அகவையினருடைய பா.மொ.க வகுப்புக்களில், பொருத்தமான மூன்று மட்டங்களின் பொருத்தமான வேறுபட்ட எழுத்துருக்களுடன் இப் பயிற்சியை மேற்கொள்ளலாம். அனைவரும் ஒரே தலைப்பில் இச் செயற்பாட்டை மேற்கொள்வது சிறந்தது (ஆனால் கட்டாயமானதல்ல). எ.டு. நம் பிறப்பு நாட்டுத் கற்பனைக் கதைகள், இடப்பெயர்வு வாழ்க்கை, இனவாதம், புவியியல், போன்றன.

- இம் மூன்று வகை மட்டங்களில் வினாக்களை வகைப்படுத்தல் ”வலுவான மொழி அளிக்கைகார்கள்” ஆகிய கல்விசார் பொருட்களிலிருந்து எடுக்கப்படுவது, அனேக மாணவர்களுக்கு பழக்கப்பட்டதுமாகும். குறைந்த மொழித்தேர்ச்சி (தற்போதும்) உடைய மாணவர்களுக்கு வினாக்கள் இரு வகையாக குறைக்கப்படும் (நேரடி வினாக்களும் உள்வாங்கல் வினாக்களும்).

---

# 15 ஒரு நூலுக்கான சுவரொட்டியொன்று உருவாக்குதல்

**இலக்கு**

*மாணவர்கள் தாம் படித்த நூலொன்றிற்கு சுவரொட்டிப்படமொன்றைத் தயாரிப்பர். அது நூலை உருக்காட்டல் செய்வதாயும் உள்ளடக்கத்தை சுருக்குவதாயும், இருப்பதோடு நூலாசிரியரையும் தலைப்பையும் பற்றிய ஆய்வையும் கொண்டிருக்க வேண்டும். அதே வேளை, மற்றவர்கள் நூலின் உள்ளடக்கத்தில் ஈடுபாடு உடையவர்களாகவும் அதனைத் தாங்களாகவே படிக்க விரும்புபவர்களாக அமைய நூலானது முன்னிலைப்படுத்த வேண்டும்.*

1ம் - 9ம் தரம்

60 - 90 மணித்துளிகள்

**கருவிகள்:**
பெரிய சுவரொட்டித் தாள் (A3 அல்லது A2 அளவு), நிறப் பென்சில்கள், வர்ணப் பேனாக்கள், பசை

**செயல்முறை:**

- கருத்திட்டமானது இரண்டு அல்லது மூன்று கிழமைகளுக்கு முன்னதாகவே அறிவிக்கப்படும். மாணவர்கள் தாம் தெரிவு செய்த புத்தகமொன்றிற்கு சுவரொட்டி படமொன்றை உருவாக்கி வகுப்பிற்குக் கொண்டுவருமாறு கேட்டுக்கொள்ளப் படுவர். அத்தோடு (பழைய மாணவர்களேனும்), நூலகங்களிலும் நூல் கடைகளிலும் உள்ள ஒரு நூலிற்கு எப்படி சுவரொட்டி எவ்வாறு அமைய வேண்டும் (எ.டு. சுவரொட்டிகள், நூல்கள் பற்றி சஞ்சிகைகளிலுள்ள எழுத்தாக்கங்கள்) என்பதைத் தாமே அறியவேண்டும். புதிய மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான பட நூலை அல்லது கதை நூலை முன்னிலைப்படுத்தலாம், ஆசிரியர் அல்லது மூத்த மாணவர் துணைசெய்யலாம்.
- சுவரொட்டிப்பட வேலைகள் தொடங்குவதற்கு முன், மாணவர்கள் ஒரு நூலிற்கு கவர்ச்சிகரமான விளம்பரமொன்றை ஆக்குதல் தொடர்பாகக் கலந்துரையாடுவர். மாணவர்கள் தமது நூலினைச் சுருக்கி தம் நூலின் உள்ளடக்கத்தை உணர்வூட்டுவதாகவும் கவர்ச்சியுடையதாகவும் கிராபிக் (பசயிாஉை) முறைகளைப் பயன்படுத்தியும் வாசகர்களை ஈர்க்கும் வகையிலும் தொகுத்து வழங்குவர். பணி: நூலாசிரியர் பற்றியும் செயற்பாட்டின் இடம், காலம் கதைக்களத்தின் காலத்தைப் பற்றிய மேலும் செய்திகள், பொருத்தமான விளக்கப்படங்களையும் தேடுக.
- அடுத்த தொடரில் (ஒரு பாடம் அல்லது இரு பாடங்கள்), மாணவர்கள் தமது நூலுக்கு சுவரொட்டிப்பட விளம்பரமொன்றை உருவாக்குவர். மாணவர்கள் தமது நூலுக்காக விளம்பரப் பதாகையொன்றையும் உருவாக்கலாம்.
- நிறைவு செய்யப்பட்ட சுவரொட்டிகள் ஒரு சிறு நிகழ்வில் காட்சிப்படுத்தப்படலாம். சிறுவர்கள் சிறந்த காட்சிப்படுத்தும் சுவரொட்டியை தெரிவுசெய்யலாம் (ஒவ்வொரு பிள்ளையும் மூன்று புள்ளிகள் வழங்கலாம்.).

---

**குறிப்புகள்:**

- இக்கருத்திட்டம் வழமையான வகுப்பறைக் கற்பித்தல் முறையில் கூட்டுக் கருத்திட்டமாகப் படித்தலை முன்னேற்றுதல் அல்லது கருத்திட்ட கிழமை சூழலில் பயன்படுத்தப்படுவதற்கு மிக உகந்ததாகும். வழமையான வகுப்பறை ஆசிரியர்களோடு முன்னரேயே தொடர்பினை ஏற்படுத்துவது மிகவும் நல்லதாகும். இவ்வாறான கூட்டுழைப்புக் கட்டமைப்புக்குள் உருவாக்கப்படும் சுவரொட்டிகள் இரு மொழி சார்ந்ததாக இருக்கக் கூடிய நன்மையும் உண்டு..
- ஒரு பிள்ளை தனது தன் நாட்டு மொழியில் எந்த நூலையும் அறியவில்லை, ஆனால் குடியேறிய நாட்டு மொழியில் பிடித்த நூலொன்றைக் கொண்டிருப்பின் அவன் / அவள் அதை தனது பாரம்பரிய மொழியில் விவரிப்பான் / ள்
- மாணவர்கள் நூல்களைப் பற்றி உருவாக்கிய சுவரொட்டிகளில் அல்லது எழுதிய எழுத்துருக்களில் பல நூலகங்களுக்கு ஈடுபாடு உண்டு. அவர்களுடைய சுவரொட்டிகள் நூலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டால் குறிப்பாக வகுப்புக்கு ஊக்குவிப்பாக அமைகின்றது.

I

- மூத்த மாணவர்கள் வயடிடநவள அல்லது ளஅயசவிழநெள இன் உதவியுடன் நூலொன்றுக்கு வசயடைநச ஒன்றை தயாரிக்க விரும்பலாம். இதற்கான எளிய வழிகாட்டியொன்று http://www.phlu.ch/dienstleistung/zentrum-medienbildung/medienbildung/buchtrailer என்னும் இணையத்தள முகவரியில் காணப்படுகின்றது.


---

# 16 "நூல் ஸ்லாம் (slam)"

**இலக்கு**

*இப்பகுதியின் பிரதான எண்ணக்கருவானது இளைஞர்களை படிக்கத்தூண்டுவதாகும். மேலும், அவர்கள் தம்மால் இயன்றளவு உள்ளடக்கத்தைத் தொகுத்து அதைக் கவரக்கூடியதாகவும் ஆக்கப் பாங்கிலும் எடுத்துரைக்கக் கற்கின்றனர்.*

5ம் - 9ம் தரம் | 90 மணித்துளிகள்



**கருவிகள்:**
வெவ்வேறு நூல்கள் (கற்பனையல்லாத கதைகள், கவிதைகள், சஞ்சிகைகள் போன்றன), விசில், நிறுத்தற் கடிகாரம்

**செயல்முறை:**

- ஆசிரியர் இரண்டு அல்லது மூன்று கிழமைகளுக்கு முன்னதாகவே "ஸ்லாம்", "நூல் ஸ்லாம்" ஆகிய பதங்களை விளக்குவார் (கீழே பார்க்க). அவர் கருத்திட்டம் பற்றியும் தேவையான முன்னாயத்தங்கள் பற்றியும் வகுப்பில் கூறுவார். மாணவர்கள் (தனியாக அல்லது இருவர் கொண்ட குழுக்களாக). தாம் முன்வைப்பதற்கு நூல் ஒன்றை (அல்லது இன்னொரு எழுத்துரு சஞ்சிகையிலிருந்து) முடிவு செய்து கொள்ளவேண்டும் அவர்கள் 3 மணித்துளி விளக்கக் காட்சியொன்றை தயாரிப்பது பற்றி எண்ண வேண்டும். அதுவும் உருவாக்கமாக, கவர்ச்சியானதாக, விளக்கமானதாக மற்றும் வேடிக்கையானதாக இருக்கவேண்டும் (எடுத்துக்காட்டு ரப் இசை, கட்டற்ற முறையில் மறுதேர்வு செய்க, உரத்துப் படித்தல், விளம்பரப்படுத்தும் தளம், போன்றன). 'Book slam' என google இல் தேடுவதன் மூலம் இணையத்தளத்தில் பல்வேறு எடுத்துக்காட்டுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

- ஏற்பாடுகளை மேற்கொள்ளுதலும் பயிற்சியெடுத்தலும் (ஒரு கிழமைக்கு முன்னரே தேவையான நேரம் - ஒரு பாடம்). மாணவர்கள் தமது எடுத்துரைப்புப் பற்றிய எண்ணக்கருவை தீர்மானித்தவுடன், அதை அவர்கள் இன்னொரு மாணவனுடன் / மாணவியுடன் அல்லது குழுவுடன் கலந்துரையாடி அதை மேம்படுத்துவதற்கான பின்னூட்டல்களையும் பரிந்துரைகளையும் பெற்றுக்கொள்ளல். இன்றியமையாதது: உள்ளடக்கச் சுருக்கத்தினை மிகக் குறைந்த அளவிலேயே வைத்திதிருக்க வேண்டும் விரிவான விளக்கத்திற்கு நேரம் போதாது. மாணவர்கள் கேட்போருக்கு எது மிக்க சுவாரசியமானதென்றும் அவர்கள் நூல் பற்றிய எடுத்துரைப்பு எவ்வாறு அவர்களை ஈர்க்கலாம் என்றும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

- நடைமுறைப்படுத்துதல் (தேவையான நேரம்: ஒரு பாட வேளை): ஒவ்வொரு மாணவருக்கும் (அல்லது இருவர் கொண்ட குழுவுக்கு) தங்கள் எடுத்துரைப்புக்கு மூன்று நிமிட மணித்துளிகளே வழங்கப்படும். இரு மாணவர்கள் விசில் மற்றும் நிறுத்தற் கடிகாரத்துடன் நேரத்தை முகாமை செய்வதற்கு அமர்த்தப்படுவர். பொதுமக்கள் முன்வைக்கப்பட்ட எழுத்துருக்களை அல்லது நூல்களை மதிப்பிட்டு புள்ளிகளை வழங்குவர். அவர்கள் 1-9 வரை இலக்கமிடப்பட்ட அட்டைகளை உயர்த்திக்காட்ட அதை ஒருவர் கூட்டி மொத்தப் புள்ளிகளை கரும்பலகையில் குறித்துக் கொள்ள வேண்டும். அதிக புள்ளிகளைப் பெற்றவரே வெற்றி பெறுவார். அனைத்து புத்தகங்களும் எழுத்துருக்களும் காட்சிப்படுத்தப்பட்டு மாணவர்களால் கடனாகப் பெற்றுக் கொண்டுபோயுமிருக்கலாம்.

---

**குறிப்புகள்:**

நூல் slam இன் விதிமுறைகள் கவிதை slam இன் அடிப்படையானவை: கேட்போரால் மதிப்பிடப்படும் ஒரு குறுகிய விளக்கக் காட்சி.

---

**மாற்று முறைகள்:**

நூல் slam வழமையான வகுப்பறைக் கற்பித்தலுடன் கூட்டிணைவாக உவப்பாக நடத்தலாம். இதனால் இது இரு மொழியிலும் நடத்தப்படும். பெற்றோர் கூட்டம், மற்றும் வகுப்பு ஒன்றுகூடல் ஆகியனவும் நூல் slam நடாத்துவதற்கான சிறந்த கட்டமைப்பாகும்.

# 17 நூல் பற்றிய அறிமுகச்சந்திப்பு (Dating)

**இலக்கு**

*மாணவர்கள் ஒரு நூலின் அல்லது இன்னொரு எழுத்துருவின் உள்ளடக்கத்தை நன்றாகச் சுருக்கி அதை அவர்களுக்கு எதிரே இருப்பவர்களுக்கு 4 முதல் 5 நிமிடத்திற்குள் எடுத்துரைக்க வேண்டும். குறுகிய எடுத்துரைப்புகளூடாக ஏனைய மாணவர்கள் சுவையான நூல்கள் மற்றும் கட்டுரைகள் பற்றி அறிந்து கொள்வதோடு தத்தமது தெரிவிற்கேற்ப படிக்க நூல்களைப் பற்றியும் அறிந்துகொள்வர்.*

4ம் - 9ம் தரம் | 60 - 90 மணித்துளிகள்

**கருவிகள்:**
வெவ்வேறு நூல்கள், புனைகதை அல்லாதவை உட்பட, கவிதைநூல்கள், சஞ்சிகைகள், போன்றன, நிறுத்தற் கடிகாரம்

**செயல்முறை:**

- ஏற்பாடு செய்தல்

  கருத்திட்டம் மற்றும் கால எல்லை பற்றி ஆசிரியரின் விளக்கத்தைத் தொடர்ந்து, ஒவ்வொரு மாணவரும் ஒரு நூலை அல்லது ஓர் எழுத்துருவைத் தெரிவு செய்து கொள்வர். பின்னர் எடுத்துரைப்புக்கு நினைவுத் துணையாக உள்ளடக்கம் விரைவாக சுருக்கப்படுகிறது (சில திறப்புச் சொற்களுடன் எழுத்தில்). எந்த நூலை அல்லது எழுத்துருவை எவர் எடுத்துரைப்பார் என ஒரு பட்டியல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்பாடு செய்தல் வீட்டு வேலை ஒப்படையாகவும் வழங்கப்படலாம்.

- நடைமுறைப்படுத்துதல்

  வகுப்பறை இரு குழுக்களாகப் பிரித்துக் கொள்ளப்படும். ஓர் அரைவாசிப் பகுதியினர் கதை கூறும் போது மற்றைய அரைவாசிப் பகுதியினர் அதை செவிமடுப்பர். கதை சொல்லிகளுக்கு அறையில் வெவ்வேறு மேசைகள் வழங்கப்படும். கேட்போர் கதை கூறுபவர்களுடைய மேசைகளில் உட்கார்ந்து கேள்விகள் கேட்கவும் கலந்துரையாடவும் 5 மணித்துளிகள் வழங்கப்படும். 5 மணித்துளிகளின் பின்னர் கேட்போர் அடுத்த மேசைக்கு மாறிக்கொள்வர். இதை மற்றைய குழுவினரும் மேற்கொள்வர். இதனால் எல்லா மாணவர்களும் கேட்பர் கதை சொல்வர். நிறைவுக் கலந்துரையாடலில், மாணவர்கள் தமது பட்டறிவுகளை உருக்காட்டி சுருக்கமாக கூறி, எடுத்துரைப்புகளின் தரம் பற்றி எடுத்துக்காட்டுகளுடன் பகிர்ந்து கொள்வர்.

---

**குறிப்புகள்:**

சொல் பற்றியது: நூல் Dating என்பது 'speed dating' எண்ணக்கருவிலிருந்து மாறுபட்டது. இது துணைவர் / துணைவி தேடுதற்கான ஒழுங்கமைத்த ஒரு முறை. இதில் இரு பங்காளிகள் 5 மணித்துளிகள் எதிரெதிரே இருந்து தம்மைப் பற்றிப் பேசுவர். ஆளுக்காள் புரிந்துணர்வு இருப்பின் பங்காளிகள் மீண்டும் எதிர்கொள்வர். நூல் Dating இருவர் எதிரெதிரே உட்கார்ந்து தம்மைப் பற்றி உரையாடுதல் போன்றது. நூல் Dating இன் முதன்மை நோக்கமாவது ஓர் ஆளுக்குப் பதிலாக, ஒரு நூலைப் பற்றி ஐந்து மணித்துளிகளில் அறியக்கூடியதை அறிதல். அறிந்து கொண்டு, அதை மேம்படுத்தி, கேட்போருக்கு அதை படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுதல்.

I

# 18 உரத்துப் படித்தல்: ஒரு சுய மதிப்பீடு

**இலக்கு**

*பா.மொ.க மாணவர்கள் தமது மற்றும் பிற எழுத்துருக்களை அடிக்கடி உரத்துப் படிப்பர். எனினும் உரத்துப் படித்தல் பயிற்சிசெய்யப்படவேண்டியது. அவர்களுக்கு ஏற்கனவே நன்றாக என்ன தெரியும் எங்கு அவர்கள் இன்னும் முன்னேறலாம் என்பதை மாணவர்கள் விளங்கிக்கொள்ள தன் மதிப்பீடு படிவம் துணைசெய்யும்.*

2ம் - 9ம் தரம் | 20 மணித்துளிகள்

**கருவிகள்:**
தன்-மதிப்பீட்டுப் படிவங்களின் படிகள் (கீழே பார்க்க)

**செயல்முறை:**

உரத்து படித்த பின்னர், மாணவர்கள் தன் மதிப்பீட்டுப் படிவத்தை முழுமைப் படுத்துவர். கட்டங்களுக்குள்ள பரப்புகள் பகுதியாக அல்லது படிப்படியாக நிறந்தீட்டப்பட வேண்டும். (மேலிருந்து கீழ் வரை). இந்த தன் கணிப்பீடு ஆசிரியர் மேம்படுத்துவதற்காக முன்வைக்கும் பரிந்துரைகளுடன் ஒப்பிடப்படும். பல தடுமாற்றங்கள் உடைய மாணவர், தங்குதடையின்றி படிப்பதற்கான பயிற்சிகளையும் நிறைவு செய்ய வேண்டும். (கற்பித்தல் வழிகாட்டுதல் 22 ஐ பார்க்க).

## உரத்து வாசித்தல்: சுயமதிப்பீட்டிற்கான படிவம்

உங்களுக்குப் பொருந்தக்கூடிய தெரிவுகளுக்கு இள நிறந்தீட்டுக

**நுட்பமாக வாசித்தல்**

| | | |
|---|---|---|
| நான் தனித்தனி சொற்களையும் எளிய வாக்கியங்களையும் தெளிவாகவும் விளங்கக் கூடியவாறும் படிக்கின்றேன் | நான் குறுகிய எழுத்துருக்களை தெளிவாகவும் விளங்கக் கூடியவாறும் படிக்கின்றேன். நான் படித்தலில் பிழை விடுவது அரிது | நான் நீண்ட, கடின எழுத்துருக்களைத் தெளிவாகவும் விளங்கக் கூடியவாறும் படிக்கின்றேன். நான் தடுமாறாமல் படிக்கின்றேன். |

**படிக்கும் வேகம் / படிக்கும் தன்மை**

| | | |
|---|---|---|
| நான் ஏற்கனவே குறிப்பிட்ட பந்திகளை தங்கு தடையின்றி படித்தேன், மற்றையவை இன்னும் தடையுடன் படிக்கிறேன். | நான் பெரும்பாலும் ஒரே வேகத்தில் தங்குதடையின்றி படிக்கின்றேன். | நான் விரைவாகவோ அல்லது மெதுவாகவோ, உள்ளடக்கத்துடன் தொடர்புபடுத்தி படிக்கின்றேன். |

**குரல் / வெளிப்பாடு**

| | | |
|---|---|---|
| உள்ளடக்கத்தின் அடிப்படையில் சில சொற்களை அழுத்திக் கூறுகிறேன். | நான் எழுத்துருக்கு ஏற்றவாறு அடிக்கடி எனது குரலை மாற்றுவேன். இதன் மூலம் எடுத்துக்காட்டாக, இன்றியமையாத பந்திகளை அழுத்திக்கூறுவேன். | நான் வெளிப்படையாக வலியுறுத்தவும் எனது குரலை மாற்றவும் முடியும். நான்சிறப்பாக வலியுறுத்திக்கூற வேண்டியவற்றுக்கு நிறுத்தங்களை பயன்படுத்து கின்றேன். |

# 19 ஒருவர் தான் படித்ததை மீட்டுப்பார்த்தல்

இலக்கு

*வினாக்கொத்தின் துணையுடன் மாணவர்கள் தமது தன் படிப்பு நடத்தையை மீளாய்வு செய்யலாம். இது மாணவர்களின் படிப்புப் பழக்கத்தை அறிந்துகொள்ள ஆசிரியருக்கு நுண்ணறிவை வழங்குகிறது. இது மாணவர்களோடு கலந்துரையாடுவதற்கு அடிப்படையாக இருப்பதோடு மாணவர்களின் விருப்புக்கேற்ப வாசிப்புத் தெரிவுகளுக்கு முன்னுரிமை வழங்கவும் உதவுகின்றது.*

2ம் - 9ம் தரம் | 20 மணித்துளிகள்

**கருவிகள்:**
மதிப்பாய்வுகளின் படிகள் (கீழே பார்க்க).

**செயல்முறை:**

ஒவ்வொரு மாணவரும் வினாப்பட்டியலை முழுமை செய்வர். ஆசிரியர் அவற்றைத் திரட்டி மாணவர்களுக்கு தன் பின்னூட்டல்களையும் வழங்குவார். இக் கலந்துரையாடல்கள் உடனடியாக நடத்தப்பட வேண்டியதில்லை. படிப்படியாக பா.மொ.க கற்பித்தலின்போது நடாத்தப்படலாம்.

**குறிப்புகள்:**

இந்த மதிப்பாய்வை 6 அல்லது 12 திங்கள்களுக்குப் பின்னர் நிகழ்த்துவது முடிவுகளை ஒப்பிட்டுப் பார்க்க பயனுடையது. படிப்பு நடத்தை மாறியுள்ளதா?

**வேறுபாடுகள்:**

வினாக்கள் அகவைக்கேற்ப உருவாக்கப்பட வேண்டும். எ.டு. கணினியில் படிப்புப் பற்றிய கூடுதல் வினாக்கள் பழைய மாணவருக்காக சேர்க்கப்படலாம்.

## ஒருவரின் சுய படித்தல் பற்றிய வினாக்கோவை

மதிப்பாய்வு பகுதி 1

**1. நான் எப்படி படிக்கின்றேன்?**

- ☐ நான் ஒவ்வொரு நாளும் வீட்டில் படிக்கின்றேன்.
- ☐ நான் வாரத்திற்கு ஒரு தடவை அல்லது இரு தடவை வீட்டில் படிக்கின்றேன்
- ☐ நான் பெரும்பாலும் வீட்டில் படிப்பதில்லை.
- ☐ நான் எப்போதும் படிக்க விரும்பும் ஒன்றைப் பெற்றுக்கொள்கின்றேன்.
- ☐ நான் யாராவது எனக்காகப் படிப்பதை விரும்புகின்றேன்.
- ☐ நான் எனது கட்டற்ற விருப்புக்கேற்ப வீட்டில் படிக்கின்றேன்.
- ☐ வழமையாக நான் நூலை வாசித்து முடிப்பதில்லை.
- ☐ நான் பெரும்பாலும் ஒரு திரையிலேயே படிக்கின்றேன்.
- ☐ நான் புதிதாக எதையாவது படிக்கும்போது எப்போதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

**2. நான் எதை வாசிக்கின்றேன்**

*நான் பெரும்பாலும் எழுத்துருக்களைப் படிப்பது*

☐ முதல் மொழியில் ☐ பள்ளி மொழியில்

*நான் பெரும்பாலும் படிக்க விரும்புவது*

- ☐ கிளர்ச்சி ஊட்டுபவை
- ☐ சஞ்சிகைகள்
- ☐ இணையக் கட்டுரைகள்
- ☐ புதிதாக ஏதாவது கற்கக்கூடிய நூல்கள் (புனைவல்லாதவை)
- ☐ நம் தாய்நாடு பற்றிய நூல்களும் வேறு எழுத்துருக்களும்
- ☐ வீரதீரக் கதைகள்
- ☐ காதல் கதைகள்
- ☐ காற்பந்து அல்லது வேறு விளையாட்டுக்கள் தொடர்பான நூல்கள்
- ☐ வரலாற்றோடு தொடர்புற்ற நூல்கள்
- ☐ விலங்குகள் பற்றிய கதைகள்
- ☐ குதிரைகள் பற்றிய கதைகள்
- ☐ வேடிக்கைக் கதைகள்
- ☐ வேறு, எடுத்துக்காட்டாக : ____________________

____________________

I

மதிப்பாய்வு பகுதி 2:

இணையத்தளத்தில் எனக்குப் பிடித்த நூல் அல்லது ஒரு பக்கம் உள்ளது, அது மிகவும் சுவாரசியமானது.
தலைப்பின் பெயர: ______________________

______________________

______________________

ஒரு நூலிலிருந்து அல்லது ஒரு எழுத்துருவிலிருந்து எனக்குப் பிடித்த கதைமாந்தரொன்று உள்ளது.
அக்கதைமாந்தரின் பெயர்: ______________________

______________________

______________________

**3. படிக்கும் இடம்**

எனக்குப் பெரும்பாலும்...............வாசிக்கப் பிடிக்கும்.
(எ.டு. கட்டிலிலிருந்து, வெளியிலிருந்து, பாடசாலையிலிருந்து மற்றும் பல).

______________________

______________________

**4. கருத்தில் கொள்ள**

- ☐ நான் படித்ததைக் கொண்டு மற்றவர்களுடன் கலந்துரையாடப் பிடிக்கும்.
- ☐ மற்றவர்கள்(எ.கா. நண்பர்கள்) எனக்கு படிப்புத் தொடர்பான மதியுரை வழங்கும்போது மகிழ்ச்சியடைவேன்.

படிக்கும்போது குறிப்பாக எனக்கு எது இன்றியமையாதது? ______

______________________

______________________

______________________

# பகுதி II:
# படித்தற் பயிற்சி

II

# பயிற்சி மற்றும் படித்தல் திறன்களுக்கான மதியுரைகள் வாசிப்புப் பயிற்சி மூன்று வகைக்குள் அடங்கும்

## படித்தல் திறன்கள்

கற்பித்தல் முன்மொழிவுகள் 20-23:

இங்கே முன்வைக்கப்படும் மதியுரைகள் ஆசிரியர்களுக்கு தமது முதல் மொழியிலுள்ள குறைநிறைகளுக்கு அமைவாக கைக்கொள்ளக்கூடிய பயிற்சி முறையை உள்ளடக்கியுள்ளதுடன் தமது வகுப்புக்களின் குறிப்பிடத்தக்க தேவைகளையும் உள்ளடக்கியுள்ளது. எழுத்துகள், சொற்கள் மற்றும் சிறு வாக்கியங்கள் பெரியளவில் தன்னிச்சையாக வரவேண்டும், அப்போதுதான் படிப்பவர்களால் எழுத்துருவின் கருத்தில் முழுமையாக கருத்தூன்ற முடியும். தங்கு தடையின்றிப் படிக்கக்கூடிய மாணவர்கள் இவ்வகையான பயிற்சிகளிலிலிருந்து விடுபடலாம். இவ்வாறான பயிற்சிச் செயற்பாட்டுக் கட்டத்தின்போது அவர்களுடைய தெரிவிற்கு ஏற்றாற்போல் எழுத்துருவையும் நூல்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும் (மேற்கூறிய #9 "கட்டற்ற படிப்புத் தொடர்வரிசைகள்" ஐப் பார்க்கவும்).

## தடங்கலின்றிப் படித்தல்

கற்பித்தல் முன்மொழிவு 24:

ஓர் எழுத்துருவைக் குறிப்பிட்டதொரு விரைவில் படித்தால் மிக நன்றாக விளங்கிக்கொள்ள முடியும். வாசிப்பவர்கள் மீண்டும் மீண்டும் வாசிக்கும்போது விரைவாக அல்லது தங்குதடையின்றி மட்டும் படிப்பதில்லை. மாறாக அவர்கள் உள்ளடக்கத்தை மிக நன்றாகப் விளங்கிக்கொள்கின்றனர் என்பது பட்டறிவு வெளிக்காட்டியுள்ளது. அதே பழமொழி இங்கும் நன்றாகப் பயன்படுகிறது: கற்றல் செயற்பாடு எவ்வளவு தன்னிச்சையாகின்றதோ, அவ்வளவு கூடுதலாகப் படிப்பவர்கள் தங்கள் எழுத்துருவின் உள்ளடக்கத்தில் கருத்தூன்றவும் அதை நன்றாக விளங்கிக்கொள்கின்றனர். தங்குதடையின்றி படித்தற்குரிய பயற்சி சிறு தொடர் வரிசையில் கொடுக்கப்பட வேண்டும், எ.டு. மூன்று தொடக்கம் நான்கு வரையான கிழமைகளில் வகுப்புத் தொடங்குவதற்கு முன் 10-15 நிமிட மணித்துளிகள் பயிற்சி கொடுத்தல். தங்குதடையின்றிப் படிப்பதை மேம்படுத்துவதற்காக விளையாட்டில் விதிகள், அல்லது விரல் பயிற்சிக்காக ஒரு கருவியை மீட்டுவதோடு ஒப்பிட்டுப்பார்க்கலாம்

## படித்தல் மதிநுட்பங்கள்

கற்பித்தல் முன்மொழிவு 25-27:

மூன்றாவது பயிற்சிப்பகுதி வெவ்வேறு எழுத்துருவில் எவ்வாறு மாணவர்கள் கண்காணிப்புச் செலுத்த வேண்டுமென்பதைப் பற்றிய விளக்கமளிக்கின்றதோடு அவர்களை தன்னிச்சையாக படிப்பதற்கு வேண்டுமென்றே ஏற்பாடு செய்வதாகும். இது எவ்வாறு எழுத்துருக்களை படிப்பது, எழுத்துருக் கடினங்களைக் கையாள்வது அத்துடன் படிக்கும் கருவிகளை எவ்வாறு சுருக்குவது மற்றும் மதிப்பீடு செய்வது என்பன தொடர்பான மதியுரைகளையும் பயிற்சிகளையும் வழங்குகின்றது.

வகுப்பறையில் ஆசிரியரால் படிப்பு மதிநுட்பங்கள் கலந்துரையாடப்பட வேண்டும். இவ் அறிமுகத்தைத் தொடர்ந்து, மதிநுட்பங்கள் மீண்டும் மீண்டும் பயிற்றுவிக்கப் படுவதுடன் வெவ்வேறு எழுத்துருக்களுடன் உறுதிப்படுத்தவும் வேண்டும். வகுப்பறைக் கற்பித்தலில் தற்போது பயிற்றுவிக்கப்படுவதற்கு பயன்படுத்தப்படும் எழுத்துருக்களில் இந்த மதிநுட்பங்கள் பயன்படுத்தப்படுமானால் இவ் வேலை சிறப்பாய் அமையும்.

கூடுதல் படிப்பு மதிநுட்பங்களுக்கும் தகவல்களுக்கும் "பா.மொ.க வுக்கு மதிநுட்பங்கள் மற்றும் உத்திகளை கற்றலும் கற்பித்தலும்" (இத் தொடரின் தொகுதி 05 பா.மொ.க வுக்கான கற்பித்தல் பரிந்துரைகள்) பார்வையிடவும். அதில் பகுதி II மற்றம் பகுதி III இல் மேலதிக பயனுள்ள படிப்பு நுட்பங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன).

II

# 20 எழுத்துக்களை தன்னிச்சையாக அடையாளங்காணுதல்.

**இலக்கு**

*மாணவர்கள் ஒரே பார்வையில் எழுத்துகளையும் அசைகளையும் அடையாளங் காண்பதற்கு தமது திறனை பயிற்சி மூலம் வளர்த்துக் கொள்கின்றனர். இது படிப்பு விரைவின் அதிகரிப்பிற்கு இட்டுச்செல்கின்றது.*

1ம் - 4ம் தரம் | 10 - 15 மணித்துளிகள்

**கருவிகள்:**
குறிப்பிடத்தக்க பயிற்சிகளுக்கு உருவாக்கப்பட்ட பணித்தாள்கள். கீழே பார்க்கவும்.

**செயல்முறை:**

முதல் மொழியில் வரிவடிவ எழுத்துக்களை அடையாளங் காண்பதற்கான இலக்கு அவ்வகையான மாணவர்களில் பெரும்பாலானோர் அவர்களுடைய பள்ளி மொழியிலே தங்கியிருப்பதால் இதனை அறிந்திருப்பதில்லை. அது தன்னிச்சையாக இயன்றவரை அறியப்பட வேண்டுமென்பதுடன் அவை பல்வேறு பயிற்சிகளால் அடையலாம்.

எடுத்துக்காட்டுகள்:

- எழுத்துகளைத் திரட்டல் (பார்க்கவும் பயிற்சி (அ) தேவைக்கேற்றாற்போல் பயிற்சியை மாற்றியமைக்க முடியும்).
- எழுத்துகளை ஒன்றுபடுத்தல். தெளிவாக எழுதப்பட்ட எழுத்துகளைக் கொண்ட இரண்டு மூன்று தாள்கள் இப்பயிற்சிக்கான சிறந்த மாதிரியாகும். இக்கீலங்கள் ஒன்றுக்கொன்று அருகிலோ அல்லது ஒன்றின்மேல் ஒன்றாகவோ வைத்து எழுத்துகளின் புதிய கூட்டிணைவுகளை உருவாக்கும் விதத்தில் நகர்த்தப்படும்.
- எழுத்துகளின் கூட்டிணைவை இலகுவில் அடையாளங்காணலாம். (பார்க்கவும் பயிற்சி ஆ)
- அசைகளைத் தொகுத்தல் (மேலே "எழுத்துகளை ஒன்றுபடுத்தல்" குறிப்பிடப்பட்டதுபோல் தாள் கீலங்களோடு கூட நன்றாக செயற்படக்கூடியது).
- வழமைக்கு மாறான வகையிலான தட்டச்சு எழுத்துகளை முகங்களை விளங்கிக்கொள்ளுதல் (இந்தப் பயிற்சிக்கு ஒரு எழுத்துருவினை வெவ்வேறு எழுத்து வடிவ வகைக்குள் ஆசிரியரால் மாற்ற முடியும்).

**குறிப்புகள்:**

- வழமையான வகுப்பறைக் கற்பித்தலில் கற்பிக்கப்படாத எழுத்து வடிவங்கள் இவ்வகையிலான பயிற்சிக்கு ஒரு குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கின்றன. அறிமுகத்தில் இயல் 01 அ வை பார்க்கவும்.
- ஒரு பங்காளியுடன் வேலைசெய்வதற்கு பல பயிற்சிகள் உகந்ததாக அமையும்.
- தேவைப்படுகின்ற பயிற்சித்தாள்கள் புது மாணவர்களுக்காக பழைய மாணவர்களால் தயாரித்து வழங்க முடியும்.
- இவ்வகையிலான பயிற்சிகள் பழைய மாணவர்களால் தமது முதல்மொழியில் எழுத்து வடிவங்களை அடையாளங் காண்பதில் பிரச்சினையை எதிர்கொண்டால் பயன்படுத்தலாம்.

## பயிற்சி அ)

**எத்தனை M எழுத்துக்களை உங்களால் இனங்காண முடியும்?**
**எல்லா P எழுத்துக்களையும் கண்டுபிடிக்க.**
**W எழுத்தில் 5ஐ விட அதிகமாகவோ குறைவாகவோ காணப்படுகின்றது?**

P T U F M W H J K F M L R W D M N P Q M Z G G O
P H W M N W S L R J L M W N D H B W B E W M W
K R Ö Ü N O Y P B M W Z K P W N L R N P E R N L G
P A M E J L K A G T H I R W L B P M T A B P W N R
M S L F J P Q X Y G I D M T K T Ü W Ä A Ä Q M O D
G F H K R O E N W M W N V C I K T L W P N E M O
U T F W G Ü N O Y P B M W Z K P W N L R N P E R
N L G P A M E J L Ü N O L R N P E N L G P A M E J L

பயிற்சி ஆ)

கீழே காணப்படும் சொற்களுள் Sch, Sp மற்றும் pf ஆகியவற்றைப் பார்க்கவும். எத்தனை Sch,Sp மற்றும் pf களைக் காண்கின்றீர்கள் என்பதை எழுதுக.

sch ◯ sp ◯ pf ◯

shipshape, witchcraft, moonlight, distinguish, knowledge, shreds, brainstorm, glimpse, scallop, embellishment, theater, goldfish, heather, splice, zenith, sniffles, ghostly, featherweight, cyclist, diminished, smooth, rather, spinach, replenish, scholastic, duckling, scientist, industrious, puppet, thimble, uncertainty, gnash, footprint, splash, opulent, thrifty, spaceman, junction, highlight, scissors, fatherland, sprightly, snowflake, otherwise, airspeed, ghoulish, scrutiny, tarnish, shade, astonish, shocking, catlike, fishpond, throughout, shrimp, jestingly, spoilsport,..).

---

# 21 சொற்களை மிக வேகமாகப் படித்தல்.

**இலக்கு**

*உடனடியாக இனங்காணக்கூடிய அடிக்கடி பயன்படுத்தும் சொற்களின் பிரதிமைகளின் விரிவாக்கம் மற்றும் பயிற்சி அதேபோல் விரைவாக சொற்களை அடையாளங் காணுதல், ஒவ்வொரு எழுத்தாகக் கண்டறிந்ததை நீக்குதல் (காட்சிச் சொற்கோவை) ஆகியன .இப்பயிற்சியின் நோக்கு. இது மேம்படுத்தப்பட்ட படிப்பு விரைவுக்கு இட்டுச்செல்கின்றது.*

1ம் - 4ம் தரம் | 10 - 15 மணித்துளிகள்

**கருவிகள்:**
பயிற்சிகளுக்கு முறையாக ஏற்படுத்தப்பட்ட பணித்தாள்கள். கீழே பார்க்கவும்.

**செயல்முறை:**

குறிப்பிட்ட அடிக்கடி பயன்படுத்தும் சொற்களின் பிரதிமைகளைப் பெரும்பாலும் தன்னிச்சையாக இனங்காண்பதற்கான இலக்கு வெவ்வேறான பயிற்சிகளுடன் அணுகக்கூடியது. எடுத்துக்காட்டாக,

- சிக்கலுடைய சொற்களைப் படித்தல் (கீழேயுள்ள அ பயிற்சியைப்பார்க்கவும்).
- உடனடியாக அடிக்கடி பயன்படுத்தும் குறுஞ்சொற்களை இனங்காணுதல் (கீழேயுள்ள ஆ பயிற்சியைப்பாரக்கவும்).
- தவறாகச் சீரமைக்கப்பட்ட எழுத்துக்களுடனான சொற்களைப் படித்தல் (கீழேயுள்ள இ பயிற்சியைப்பார்க்கவும்).
- அடிக்கடி பயன்படுத்தும் சொற்களுக்கான ஒத்த ஓசையுடைய சொற்களைக் கண்டுகொள்ளுதல் (காடு-வீடு-மாடு).
- செய்தித்தாள் கட்டுரை அல்லது செய்தி ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட எழுத்துருவிலிருந்து அடிக்கடி பயன்படுத்தப்பட்ட சொற்களை அடையாளங்கண்டு அவற்றை வர்ணங்களால் தனித்துக் காட்டவும் (எ.டு. ”அதிகமாக” அல்லது ”பல”, ”மிகவும்”, ”இருக்கலாம்” அல்லது ”மற்றது” இவ் எழுத்துருவில் மீண்டும் மீண்டும் அடிக்கடி பயன்படுத்தப்பட்ட சொற்கள்).
- இணைக்கும் சொற்கள்: ஒன்றாக இணையும் சொற்களின் சோடிகளைக் கொண்ட செயற்பாட்டுத்தாள் ஒன்றினை மாணவர்கள் பெறுவார்கள். ஆனால் அவை தனித்தனியாக எழுதப்பட்டதுடன் அவை சரிசெய்யப்பட வேண்டும். ஒன்றாக இணைந்த சொற்களை அம்புக்குறியால் இணைக்க வேண்டும் (எ.டு. மெக்கானிக்-குறடு, நாய்-குரைக்கும், மற்றும் பல).

---

**குறிப்புகள்:**

- இணையாக வேலை செய்வதற்கு பல பயிற்சிகள் சிறந்தனவாக அமையும்.
- தேவைப்படுகின்ற பணித்தாள்களில் பெரும்பாலானவற்றை புது மாணவர்களுக்காக பழைய மாணவர்களால் தயாரித்து வழங்க முடியும்.
- இவ்வகையிலான பயிற்சிகள் பழைய மாணவர்களால் தமது முதல்மொழியில் எழுத்து வடிவங்களை அடையாளங் காண்பதில் சிக்கலை எதிர்கொண்டால் பயன்படுத்தலாம்.

II

பயிற்சி அ)

**இயலுமானவரை சாத்தியமானவகையில் துல்லியமாக வாக்கியங்களை படிக்கவும். அவற்றைப் பலதடவைகள் படித்து உங்கள் படிப்பு விரைவைப் பெருக்கவும்.**

PonXs und Pf&rde untersch?iden s?ch ganz ein?ach in d%r Größe. Mit ein&r Messlatte oder ei5em Band wird vom B=den b&s zum höchsten Punkt d%s Pferderückens ge?essen.
Die Größe des P5erdes nennt m&n Stockmaß. P&nys haben e%n Stockmaß b*s zu einem Meter 48 Zentimeter. Pf&rde sind größer.

---

பயிற்சி ஆ)

ஒரு காகிதத்துண்டை எடுக்கவும். பின்வரும் எழுத்து விடயத்தை காகிதத்தால் மூடவும். தற்போது முதல்வரியை வெளியே தெரியுமாறு காட்டவும் (மிக அளவாக மட்டும்) அத்துடன் நீங்கள் எதை வாசித்தீர்கள் என்பதைச் சொல்லவும். பின், மிகக் குறைவாக இரண்டாவது வரியைக் காட்டவும். பின் எதை வாசித்தீர்கள் என்பதைச்சொல்லி அதேபோல் மீண்டும் செய்யவும்.

**எங்கே?**

**மட்டுமா**

**அதனுடன் வெளியே**

**அத்துடன் தற்போதுவரை சோடியாக**

---

பயிற்சி இ)

**இப்பயிற்சியில் எழுத்துக்கள் தவறாக ஒழுங்கமைக்கப்பட்டுளளன. எழுத்துருவை துல்லியமாகவும் விரைவாகவும் படிக்க இயலுமானவரை எழுத்துருவைப் பல தடவைகள் படிக்கவும்.**

Always follow your nose

We can distinguesh up to 10.000 fragrances and stroe in our memry. To keip oders apart is not only important to reconize dengers and dstingesh for exampl edble from spoild fud, but our snse of smel is also cloley tied to aur motionl life-ths we conect entirely diffrnt situation and muuds with dffrent fragrances. In nordre to smel things, two tiny sintr molecule (molecule are tniest of two or three artoms) which by inhaling reach the olfactory mucosa in the upper nasal cvity when inhalin with the air.

# 22 வாக்கியங்களை முழுமையாகப் படித்தல்

**இலக்கு**

*20 மற்றும் 21 ஆகிய பரிந்துரைகளுக்குள் இப்பயிற்சி இணைக்கப்பட்டுள்ளது, தொடர்கள் பரப்புகளுடன் தொடர்கின்றது. அடையாளங்கண்டுகொள்ளுதல், முழுமைப்படுத்தல் மற்றும் பொருளுடன் தொடர்புடையதாக எளிதாக்கும் அடிக்கடி பயன்படுத்தப்படும் தொடர்களின் கூட்டிணைவு, அதனுடன் படிப்புச் செயன்முறை.*

1ம் - 4ம் தரம் | 10 - 15 மணித்துளிகள்

**கருவிகள்:**
பயிற்சிகளுக்கு முறையாக ஏற்படுத்தப்பட்ட பணித்தாள்கள். கீழே பார்க்கவும்

**செயல்முறை:**

முதல் மொழியில் குறிப்பாக அடிக்கடி பயின்றுவரும் தொடர்கள் தங்குதடையின்றி இனங்காணுதல் மற்றும் விளக்கமளித்தல் இலக்கினைப் பல்வேறு பயிற்சிகளுடன் அணுகமுடியும். எடுத்துக்காட்டுகள்:

- சிறிய வாக்கியத்திலிருந்து பெரிய வாக்கியம் வரை (பின்வரும் பயிற்சி "அ" இனைப் பார்க்கவும்) நீண்ட காகிதத்தாள் கீலத்துடன் மிகச்சிறப்பாக நிறைவேற்றலாம்.
- வாக்கியங்களை முழுமைப்படுத்துதல் (கீழேயுள்ள பயிற்சி "ஆ" வைப் பார்க்கவும்).
- தொடர்களை ஒழுங்கிணைத்தல்: இந்தப் பயிற்சிக்கு ஆசிரியர் காகிதத்தாளைப் பகிர்ந்தளிப்பார். நடுவிலிருந்து கீழ்வரை ஒரு கோடால் பக்கங்கள் பிரிக்கப்படும். இடப்பக்கத்தில் வாக்கியத்தின் தொடக்கமும் வலப்பக்கத்தில் வாக்கியத்தின் இரண்டாம் பகுதியும் அமையும். ஆனால் அவை வெவ்வேறு ஒழுங்கிலாகும். ஒன்றாக வரும் வாக்கியத்தின் தொடக்கம் மற்றும் முடிவுப்பகுதிகளை சரியாக ஒன்றுசேர்க்க மாணவர்கள் கோடினை வரையவேண்டும். (எடுத்துக்காட்டு: கோடை காலத்தில், நான் கடலில் மகிழ்ச்சியாக → நீந்துவேன்).

**குறிப்புகள்:**

- இப்பயிற்சிகளில் பெரும்பாலானவை அவர்கள் இணையாக வேலைசெய்வதற்கு கைகொடுக்கும்.
- இவ்வகையான பயிற்சிகளுக்குரிய பெரும்பாலான பணித்தாள்களை புதுமாணவர்களுக்கு பழைய மாணவர்களால் தயாரித்து வழங்க முடியும்.
- அதேபோல் இத்தகைய பயிற்சிகளை பழைய மாணவர்களுடன் முன்னெடுக்கக்கூடிய சந்தர்ப்பமுள்ளது. குறிப்பாக அவர்கள் தமது முதல்மொழியில் தொடர்களைக் கையாள்வதில் இன்று வரை சிக்கலை எதிர்கொண்டால் பயன்படுத்தலாம்.

---

## பயிற்சி அ)

**பின்வரும் வாக்கியங்களை பலமுறை வாசிக்கவும்.**

பீற்றர் உப்பைத் தெளித்தான்.

பீற்றர் இரகசியமாய் உப்பைத் தெளித்தான்.

பீற்றர் இரகசியமாய் தேநீரில் உப்பைத் தெளித்தான்.

எனது சுட்டித்தனமான தம்பி பீற்றர் இரகசியமாய் தேநீரில் உப்பைத் தெளித்தான்.

எனது தம்பி பீற்றர் இரகசியமாய் எமது அம்மாவின் தேநீரில் உப்பைத் தெளித்தான்.

பயிற்சி ஆ)

| | |
|---|---|
| வலப்பக்கத்தில் தவறவிடப்பட்ட பகுதிகளைக் கண்டுபிடித்து அதனை உரிய இடத்தில் எழுதவும். | |
| இது வெள்ளிக்கிழமை ________நேரம். | பகல் |
| _________ வட்டமாக இருக்கின்றனர் | பிள்ளைகள் |
| ஆசிரியர் __________சொல்கின்றார் | கதை |

# 23 நான் படித்ததை விளங்கிக்கொள்ளல்.

**இலக்கு**

*வாக்கியம் மற்றும் / அல்லது குறுகிய எழுத்துரு தொடர்பாக உள்வாங்குதல் செயற்பயிற்சி.*

1ம் - 5ம் தரம் | 10 - 15 மணித்துளிகள்

**கருவிகள்:**
பயிற்சிகளுக்கு வேண்டிய முன்னரே ஏற்பாடு செய்த பணித்தாள்கள். கீழே பார்க்கவும்.

**செயல்முறை:**

தனித்தனியாக வாக்கியங்களை சிறிய அளவில் விளங்கிக்கொள்ளுதல் அத்துடன் / அல்லது ஒரு சிறிய எழுத்துரு பல்வேறு பயிற்சிகளினூடாக பயிற்சியெடுக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டுகள்:

- எழுத்துருக்களையும் படங்களையும் ஒப்பிடவும். மாணவர்கள் இரண்டு தாள்களைப் பெற்றுக்கொள்வர் முதலாவது எட்டு வாக்கியங்களை அல்லது சிறு எழுத்துருக்கள் (#1 - 8), இரண்டாவது எட்டுப் படங்களைக் கொண்டிருக்கும் (a – h). அவர்கள் இப்போது அவற்றுக்கிடையேயான ஒத்த தன்மையைக் கண்டுகொள்ளு-தல் வேண்டும் (எ.டு. முதலாவது எழுத்துரு 1 "d" படத்துடன் ஒத்துப்போகின்றது).
- எழுத்துருக்களை மீள ஒழுங்குபடுத்துதல் (பார்க்கவும் பயிற்சி அ).
- எழுத்துருக்களில் வழுக்களைக் கண்டுபிடித்தல் (பார்க்கவும் பயிற்சி ஆ).
- சரியான மற்றும் பிழையான வாக்கியங்களை இனங்காணுதல்: 20 கூற்றுக்களைக் கொண்டவொரு பணித்தாள் பகிர்ந்தளிக்கப்படும் (எடுத்துக்காட்டாக, "நாய்களால் பறக்க முடியும்", "துருக்கியில் பல்வேறு மொழிகள் பேசப்படுகின்றன"). பின்னர் ஒவ்வொரு கூற்றும் அவை சரியா அல்லது பிழையா என சரிபார்க்கப்படும்.

**குறிப்புகள்:**

- தமது பங்காளியுடன் நன்றாக வேலை செய்வதற்கு பல பயிற்சிகள் கைகொடுக்கும்.
- தேவைப்படுகின்ற பணித்தாள்களில் பெரும்பாலானவற்றை புது மாணவர்களுக்காக பழைய மாணவர்களால் உருவாக்கி வழங்க முடியும்.
- இவ்வகையிலான பயிற்சிகளை, பழைய மாணவர்களால் தமது முதல்மொழியில் எழுத்து வடிவங்களை அடையாளங் காண்பதில் சிக்கலை எதிர்கொண்டால், பயன்படுத்தலாம்.

## பயிற்சி அ)

**முற்றுமுழுதாக வேறுபட்ட இரண்டு விடயங்கள் ஒன்றுடனொன்று கலந்துள்ளன. இரு வேறுபட்ட நிறங்களிலான இரண்டு பேனா அல்லது இரு நிற அடையாளமிடுபவைகளை எடுத்துக்கொள்ளவும். அத்துடன் ஒன்றாக வரக்கூடிய பகுதிகளை கோடிட்டுக்காட்டவும்.**

விண்வெளியை அடைவது மனித குலத்தின் பழைய கனவாகும். மைக் விழித்தபடி மோவை தனது கையில் வைத்தபடி படுத்திருக்கின்றான். 1969இல், மூன்று விண்வெளி வீரர்கள் அமெரிக்காவிலிருந்து புறப்பட்டனர். அவர்கள் ராக்கெட்டில் நிலவுக்குச் சென்றனர். மோ ஆழ்ந்த உறக்கத்திலுள்ளது. மோ, மைக்கினால் அடைத்து வளர்க்கப்படும் கொரில்லாவாகும். மைக் தான் செல்லும் எல்லா இடத்திற்கும் அதைத் தன்னுடன் அழைத்துச்செல்வார். நீல் ஆம் ஸ்ரோங் நிலவில் கால்பதித்த முதல் மனிதனாவான். பாடசாலைக்கு மட்டுமல்லாது ஆசிரியர்களுக்கும் கொரில்லாவைப் பிடிக்காது. விண்வெளி வீரர்கள் நிலவிலிருந்து பூமிக்கு ரொக்கட்டைக் கொண்டுவந்தனர்.

## பயிற்சி ஆ)

**இங்கே 7 வழுக்கள் மறைந்துள்ளன. அவற்றைக் குறிப்பிடுக.**


Stewed apples

Ingredients

6 tart apples, sugar,cinnamon ,very little water

This is how is done

Take thew bananas, peel them and cut them into pieces. Now take a book and add very little water. Place the pan on the washing machine and add the apples together with about 3 table spoons of salt. Now you have to let the whole thing sleep for aqbout 8-10 minutes at medium heat and stir to keep it from burning. When the apple pieces are green, the stew is done. Now you can add a little gasoline.




II

# 24 தடங்கலின்றிப் படித்தலைப் பயிற்சிசெய்தல்

## இலக்கு

*வாசிப்புத்தகைமையை மேம்படுத்துவதே தங்குதடையின்றிப் படிப்பதன் இலக்காகும். தங்குதடையின்றிப் படித்தல் (தங்குதடையின்றியும் பிழையின்றியும் படிக்கும் இயலுமை) மற்றும் படிப்புத்தகைமை ஆகியவற்றிற்கிடையேயான நேரடித் தொடர்பு பற்றிய ஐயம் எதுவுமில்லை. நீண்ட காலத்துக்கு மேலாக இப் பயிற்சிகளை நிர்வகிப்பது மிக இன்றியமையாததாகும் (பா.மொ.க வில் ஆகக்குறைந்தது 4-6 கிழமைகள்) அதேசமயம் பயிற்சிக்காலத்தில் 10-15 மணித்துளிகள் போதுமானதாகும். இங்கே முதலீடு செய்யப்படும் நேரம் முயற்சிக்கு சிறந்த பலனைக் கொடுக்கும், குறிப்பாக படிப்பில் ஏற்படும் முன்னேற்றம் உடனடியாக மாணவர்களுக்கு வெளிப்படையாக இருப்பதால், இது பொதுவாகவே முன்னேற்றமடைந்த தன் எண்ணக்கருவிற்கு இட்டுச்செல்லும். பா.மொ.க வகுப்பறைகள் அகவை மற்றும் தேர்ச்சியில் பலவகைப்பட்டதாக இருக்கும்போது, பயிற்சிக்கான எழுத்துருக்கள் ஆகக்குறைந்தது 3 மட்டங்களுக்காவது ஏற்படுத்தல் வேண்டும்.*

1ம் - 9ம் தரம் | 10 - 15 மணித்துளிகள்

**கருவிகள்:**
வேறுபட்ட அகவை மற்றும் தகைமை மட்டங்களுக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட எழுத்துருக்கள் படிப்பதற்கான பணித்தாள்கள் மற்றும் தன் மதிப்பீட்டிற்கான வினாக்களினூடாகக் கட்டுப்படுத்தல், மற்றும் படித்தல் நேரம் மற்றும் பின்னூட்டல்கள் (பின்வரும் எழுத்துருக்கள் மற்றும் பரப்பைப் பார்க்கவும்).

**செயல்முறை:**

- பயிற்சிக்காலத்தில் பல கிழமைகளுக்கு முன் ஆசிரியர் மாணவர்களுக்கு இலக்கு மற்றும் நோக்கம் என்பவற்றைப்பற்றி தெரியப்படுத்துவார். அவர் அதே சமயத்தில் ஆலோசனை வழங்க வேண்டிவரும். அதாவது முதல் மொழியில் படிப்புப் பயிற்சி வழமையான வகுப்பறைக் கற்பித்தல்களில் படிப்பதற்கும் கூட நன்மை பயக்கும். இவ் அறிமுகப்பகுதியில் மாணவர்கள் அவர்களுடைய வழமையான வகுப்புக்களில் விழிப்பாயிருக்கின்றனர் என்பதைக் காட்டும் பட்டறிவுகள் மற்றும் நுட்பங்கள் இனங்காணப்பட வேண்டும்.

---

உருப்படியான நடைமுறைப்படுத்தல் தொடர்பான பரிந்துரைகள்:

- பயிற்சிகளுக்கு முன்னால் மாணவர்களுக்கு துல்லியமான அறிவுறுத்தல்களை வழங்குவது மிக இன்றியமையாதது. அப்போதுதான் அவர்களால் தம்மால் இயன்றவரை பயிற்சியை சுயமாக முன்னெடுக்க முடியும். இது ஆசிரியர் ஒவ்வொரு மாணவர்களாகக் கூர்ந்து அவதானிப்பதற்கு அதிக நேரத்தை எடுப்பதுடன் அவர்களுடன் சேர்ந்து செயற்படவும் ஆலோசனை வழங்கவும் உதவியாகவிருக்கும்.
- இப் பகுதிப் பயிற்சியில் கருத்தூன்றிச் செவிமடுத்தல் நன்றாகப் படிப்பது எவ்வளவு இன்றியமையாததோ அதே போன்றதாயுள்ளது. கருத்தூன்றிய செவிமடுத்தல் மாணவர்களுக்கு விளங்கப்படுத்த வேண்டுமென்பதுடன் இது பயிற்சிக்கு முன்னதாக பயிற்சியெடுக்கப்பட வேண்டும் (சில மாணவர்கள் உரத்துப் படிக்கும்போது ஏனைய மாணவர்கள் படிப்பதில் அவர்கள் எதிர்கொண்ட தவறுகளைக் குறித்துக்காட்ட வேண்டும்).
- தங்குதடையின்றி படிப்பதற்கு குழுவாக பயிற்சியெடுக்க வேண்டும். இக் குழு ஒரே அறிவு மட்டம் மற்றும் ஒத்த அகவையுடைய மாணவர்களை உள்ளடக்கியிருக்கும். அவர்களுக்கிடையேயான படிப்புத் தேர்ச்சியில் காணப்படும் வேறுபாடு கூடியதாக இருக்கக்கூடாது.
- படிப்புத் துல்லியம் மற்றும் வாசிப்பு விரைவில் கண்காணிப்புச் செலுத்தவேண்டும். இந்நோக்கத்திற்காக ஒரு நிறுத்தற்கடிகாரம் பயன்படுத்த வேண்டும் (இலக்கு நேரங்களுக்கு, கீழே பார்க்கவும்).
- மாணவர்களின் அகவை மற்றும் பயிற்சியின் கடுமை என்பவற்றிற்கேற்ப, குறிப்பிடத்தக்க பண்புகள் மற்றும் ஏற்படக்கூடிய தவறுகள் ஆகியவற்றிலே கண்காணிப்புச் செய்தல் தீர்மானிக்கப்படும்.
  - படிப்பு ஓட்டம் (தேக்கநிலைகள்)
  - படிப்புத் துல்லியம் (நாக்குப் பிறழ்தலால் ஏற்படும் வழுக்கள், தவிர்த்தல், தவறாக படிக்கப்பட்ட சொற்கள், மற்றும் பல).
  - படிப்பில் தெளிவு (பதங்களை விழுங்குதல், பொருத்தமான ஒலியளவு, மற்றும் பல).
  - படிப்பில் உணர்வு வெளிப்பாடு (ஒரே ஒலியளவில் படித்தல், கரகரத்த குரலில் படித்தல், மற்றும் பல).

- ஒவ்வொரு குழுவும் தற்போது ஓர் எழுத்துரையை பெற்றுக்கொள்வர். ஒரு முறை படிப்புத்தாள், மற்றொரு முறை பரிசீலிக்கும் தாள் (அடுத்த பக்கத்தில் எடுத்துக்காட்டுகளைப் பார்க்கவும்). அனைத்து அகவை மற்றும் தேர்ச்சி மட்டங்களுக்கான உகந்த பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதற்காக எழுத்துருக்களை வேறுபட்ட தேர்ச்சி மட்டங்களுக்கு தயாரிக்க வேண்டும். குழு உறுப்பினர்கள் யார் முதலில் வாசிப்பது (மாணவர் 1) யார் செவிமடுப்பது (மாணவர் 2) என்பதில் தங்களுக்கிடையே இணக்கப்பாட்டினைக் கொண்டிருப்பர்.

- மாணவர் 1 முதல் தடவையாக எழுத்துருவை உரத்துப் படித்த பின் தாளின் கீழே காணப்படும் வினாக்களுக்கும் விடையளிப்பார் (கடினத்தை மதிப்பீடு செய்தல் "அடுத்தமுறை, நான் ……எண்ணுகின்றேன்"). மாணவர் 2, மாணவர் 1 எழுத்துருவை படிப்பதற்குப் பயன்படுத்திய நேரத்தைக் கணிப்பிடுவதுடன் அதைப் பரிசீலிக்கும் தாளில் பதிவு செய்து பின்னூட்டலை வழங்குதல் ("உங்களுக்கு எனது பின்னூட்டல் குறிப்பு").

- மாணவர் 1 ஓர் எழுத்துருவை இரண்டாம் தடவையாக பின் மூன்றாம் தடவையாக படித்தல். ஒவ்வொரு சுற்றும் தன் மதிப்பீடு மற்றும் பின்னூட்டல், அளவிடுதல் மற்றும் மேற்குறிப்பிட்டவாறு நேரத்தைப் பதிவிடுதல் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

- வகிபங்கை மாற்றிச் செய்தல் இப்போது மாணவர் 2 அதே எழுத்துருவை 3 தடவைகள் படிப்பார் (அல்லது அதே தேர்ச்சி மட்டத்திலிருந்து வேறுபட்ட எழுத்துருவை வாசிப்பார்). மாணவர் 1 நேரத்தைக் கணிப்பிட்டு பின்னூட்டலை வழங்குவார்.

- கட்டுப்பாட்டுத்தாள்கள் திரட்டப்பட்டன. படிப்பவர்களால் மேற்கொள்ளப்படும் வழமையான இவ்வகையான பதிவுசெய்தல்கள் படிப்பு நாளேட்டினை வழங்குகின்றமையானது ஆவணப்படுத்தல் செயற்பாடாகும்.

- அவ்வப்போது வகுப்பறையில் சிறிய கலந்துரையாடலை மேற்கொள்ள வேண்டும்: எவ்வகையான வளர்ச்சியை நீங்கள் அடைந்தீர்கள், எதை அவதானித்தீர்கள், மற்றும் பல.

---

**குறிப்புகள்:**

- எச் சூழ்நிலையிலும் இப் பயிற்சியின் நோக்கம் யார் இயன்றவரை எழுத்துருவை விரைவாக படிக்கின்றார்கள் என்பதைப் பார்ப்பதற்காக ஒரு போட்டி எனக் கருதப்படக்கூடாது. இந்நோக்கத்திற்காக உகந்த அகவை மற்றும் குறிப்பிட்ட இலக்கு, நேர அடைவு மட்டம் ஆகியன வழங்கப்படுகின்றன. தொடக்க மட்ட படிப்பவர்களுக்கு இவை நிமிடத்திற்கு 65 சொற்களாகவே இருக்கவேண்டும். சிறந்த அடைவு மட்டத்திலுள்ள மாணவர்களுக்கு நிமிடத்துக்கு 100 சொற்கள் மற்றும் முழுமையாக வாசிப்பவர்களுக்கு நிமிடத்துக்கு 130 சொற்களாக இருக்க வேண்டும்.

- படிக்கப்படும் எழுத்துரையின் நீளம்: 90 செக்கன்களில் படிக்கக்கூடியதாக எழுத்துரைகள் அமைய வேண்டும். இது அண்ணளவாக மட்டம் 1 ற்கு 100 சொற்களும், அண்ணளவாக மட்டம் 2ற்கு 150 சொற்களும் மட்டம் 3 ற்கு 200 சொற்களையும் மொழிபெயர்க்கின்றது.

- ஒவ்வொரு படிப்பு மற்றும் பரிசீலிக்கும் தாள்கள் தன் மதிப்பீடு மற்றும் அளவிடும் நேரம் தொடர்பான வினாக்களை முறையாகக் கொண்டிருக்க வேண்டும். அதேபோல் பின்வரும் பக்கத்திலுள்ள எடுத்துக்காட்டுகளில் காணப்படுவதுபோல் "உங்களுக்கான எனது பின்னூட்டல் குறிப்புகள்" கொண்டிருக்கும்.

- வினைத்திறன் மற்றும் பேண் தகைமை எனும் விடயங்களில் பா.மொ.க வகுப்பில் தங்குதடையின்றி படித்தலில் பயிற்சியெடுத்தல் வழமையான வகுப்பறை கற்பித்தல்களுடன் (அல்லது ஆகக்குறைந்தது மிகக் குறைந்தளவு வழமையான வகுப்பறை ஆசிரியர்களுடன்) இணைந்து செயற்படுவது உகந்ததாக அமையும். இது உண்மையாக வழமையான வகுப்பறை ஆசிரியர்களிடமிருந்து கண்டடைவது சிறப்பானதாகும். அத்துடன் அவர்களுடைய மொழிகற்பித்தல் கருவிகள், பயன்படுத்தக்கூடிய எடுத்துக்காட்டுகள் மற்றும் அவர்களுடைய வழமையான வகுப்புக்களிடமிருந்து அறிந்ததைக்கொண்டு மாணவர்களைப் பயிற்றுவித்தல்.

- பதிவு செய்தற் கருவியில் படிப்பதை அதே வேளையே பதிவுசெய்வது பயனுடையதாகவிருக்கும். பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் அங்கே தன் விவரத்தை உரத்துப் படிக்கும் வேளை ஏற்படும் தொடர்ச்சியான பதிவுகள் மூலம் படிப்பவர்கள் தமது முன்னேற்றத்தைச் செவிமடுக்கலாம். அத்துடன் பதிவு செய்யப்பட்ட தவறுகளின் எண்ணிக்கை குறைந்துசெல்வதைக் காணலாம்.

II

## மாதிரி வாசிப்புத்தாள்

(நடுத்தர மட்டம் 156 சொற்கள்)

**அகழெலி**

அகழெலி நிலத்துக்குக் கீழ் வசிப்பவை. அவை நிலத்தில் 12 செ.மீ. வரை வளரும். அவற்றிற்கு மிகக் குறைந்தளவு பார்வையே உண்டு. அவற்றின் சிறிய கண்களால் வெளிச்சம் மற்றும் இருட்டை மட்டுமே வேறுபடுத்த முடியும். அவை நிலத்தின் கீழ் வாழ்வதால் அவற்றிற்கு பார்வை தேவைப்படாது. அகழெலிக்கு மிகக்குறைந்தளவு வளர்ச்சியடைந்த செவிப்புலனே உண்டு. பரிமாற்றத்தில் அவற்றால் தமது தலைமுடியைக்கொண்டு செவிமடுக்க முடியும். அகழெலி மெல்லிய அதிர்வையே பெற்றுக்கொள்ளும். தமது தலைமுடியைக் கொண்டு அலைதல், நகர்வு மற்றும் காற்றழுத்தத்தில் கூட மாற்றத்தை உணரமுடியும். இதனால், தமது நிலக்கீழ் பாதைகளில் ஒன்றில் மண்புழு விழுமென்றால் உடனடியாக அவ்விடத்துக்குச் செல்லும். அகழெலி மாற்று நேர அடிப்படையில் வாழ்கின்றன: அவை நான்கு மணித்தியாலங்கள் தோண்டுகின்றன, வேட்டையாடுகின்றன மற்றும் உணவு உண்கின்றன. பின், நான்கு மணித்தியாலங்களுக்கு உறங்குகின்றன. ஒவ்வொரு வேலைமாற்றமும் ஒரு நாளைக்கு மூன்று வேளை நடைபெறும். சிக்கலான சுரங்கப்பாதை அமைப்பைத் தோண்டுவதோடு 200மீ களுக்கு விரிந்து செல்கின்றது. அத்துடன் நில மட்டத்திலிருந்து 70செ.மீ. கீழே காணப்படுகின்றது. "படுக்கையறை" யிலிருந்து ஒரு பக்கமாக தமக்காக கூடு அறையையும் சரக்கு அறையையும் நிர்மாணிக்கின்றன. எவ்வாறாயினும் சுரங்கம் பெரும்பாலான பகுதிகள் மண்புழுப் பொறிகளாகவே காணப்படுகின்றன.

எனக்கு இவ்விடயத்தை வாசிப்பது:

☐ எளிமையானது
☐ ஓரளவுக்கு எளிமையானது
☐ ஓரளவுக்குக் கடினமானது
☐ கடினமானது

அடுத்த முறை ……… எதிர்பார்க்கின்றேன்:

☐ மிகத் துல்லியமாக படிக்க முயல்கின்றேன்.
☐ மிகத் தங்குதடையின்றிப் படிக்க முயல்கின்றேன்.
☐ நான் அதேபோல் நன்றாக படிப்பேன்.
☐ நான்………



## மாதிரி கட்டுப்பாட்டுத்தாள்

**அகழெலி**

அகழெலி நிலத்துக்குக் கீழ் வசிப்பவை. அவை நிலத்தில் 12செ.மீ. வரை வளரும். அவற்றிற்கு மிகக் குறைந்தளவு பார்வையே உண்டு. அவற்றின் சிறிய கண்களால் வெளிச்சம் மற்றும் இருட்டை மட்டுமே வேறுபடுத்த முடியும். அவை நிலத்தின் கீழ் வாழ்வதால் அவற்றிற்கு பார்வை தேவைப்படாது. அகழெலிக்கு மிகக்குறைந்தளவு வளர்ச்சியடைந்த செவிப்புலனே உண்டு. பரிமாற்றத்தில் அவற்றால் தமது தலைமுடியைக்கொண்டு செவிமடுக்க முடியும். அகழெலி மெல்லிய அதிர்வையே பெற்றுக்கொள்ளும். தமது தலைமுடியைக்கொண்டு அலைதல், நகர்வு மற்றும் காற்றழுத்தத்தில் கூட மாற்றத்தை உணரமுடியும். இதனால் ,தமது நிலக்கீழ் பாதைகளில் ஒன்றில் மண்புழு விழுமென்றால் உடனடியாக அவ்விடத்துக்குச் செல்லும். அகழ் எலி மாற்று நேர அடிப்படையில் வாழ்கின்றன: அவை நான்கு மணித்தியாலங்கள் தோண்டுகின்றன, வேட்டையாடுகின்றன மற்றும் உணவு உண்கின்றன. பின், நான்கு மணித்தியாலங்களுக்கு உறங்குகின்றன. ஒவ்வொரு வேலைமாற்றமும் ஒரு நாளைக்கு மூன்று வேளை நடைபெறும். சிக்கலான சுரங்கப்பாதை அமைப்பைத் தோண்டுவதோடு 200மீ களுக்கு விரிந்து செல்கின்றது. அத்துடன் நில மட்டத்திலிருந்து 70 செ.மீ. கீழே காணப்படுகின்றது. "படுக்கையறை" யிலிருந்து ஒரு பக்கமாக தமக்காக கூடு அறையையும் சரக்கு அறையையும் நிர்மாணிக்கின்றன. எவ்வாறாயினும் சுரங்கம் பெரும்பாலான பகுதிகள் மண்புழுப் பொறிகளாகவே காணப்படுகின்றன

156 சொற்கள், இலக்கு நேரம் 1 மணித்துளி 30 வினாடிகள்

படிக்கும் நேரம்: 1. படிப்பு _____மணித்துளி _____வினாடிகள்
படிக்கும் நேரம்: 2. படிப்பு _____மணித்துளி _____வினாடிகள்
படிக்கும் நேரம்: 3. படிப்பு _____மணித்துளி _____வினாடிகள்

உங்களுக்கான எனது முன்னூட்டற் குறிப்புகள்

☐ மிகத் துல்லியமாக படிக்க முயல்க.
☐ மிகத் தங்குதடையின்றிப் படிக்க முயல்க.
☐ அதேபோல் மீண்டும் நன்றாகப் படிக்கவும்.
☐ ஏனையவை …

# 25 படிப்பதற்கு முன்னரான மதிநுட்பங்கள்

இலக்கு

*தாம் எதிர்கொள்ளவுள்ள படித்தல் ஒப்படையில் தம்மை எவ்வாறு ஏற்பாடு செய்து கொள்வதென்பதை படிப்பவர்கள் அறிகின்றபோது, அவர்களது படித்தலை விளங்கிக்கொள்ளும் செயற்பாடு உண்மையில் முன்னேற்றமடைகின்றது என்னும் நிகழ்தகவு கூடியதாக உள்ளது. இப்பயிற்சியானது இந்நோக்கத்திற்காக பயனுள்ள மதிநுட்பத்தை மாணவர்களுக்கு வழங்குகின்றது.*

3ம் - 9ம் தரம் | 30 மணித்துளிகள்

**கருவிகள்:**
தற்போதைய வகுப்பறைக் கற்பித்தல் எழுத்துருக்கள், சிறுகதைகள், கற்பனை சாராத படைப்புக்கள், நூல்கள், சஞ்சிகைகள் கருவிகள் இரண்டு தொடக்கம் மூன்று வயது மற்றும் வெவ்வேறு திறமை மட்டங்களுக்கு உருவாக்கப்பட வேண்டும்

**செயல்முறை:**

- அறிமுகம், தொடக்கத் தகவல்: ஓர் எழுத்துருவை படிப்பதற்கு முன் எவ்வாறு மதிப்பிடுவது மற்றும் அறிந்துகொள்வது என்பதை 3 படிமுறைகளில் ஆசிரியர் குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டு மூலம் விளங்கப்படுத்துவார். எழுத்துரு தொடர்பான வினாக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும், எடுத்துக்காட்டாக:
  - இவ் எழுத்துருவிலிருந்து எதை எதிர்பார்க்கின்றேன் எவ்வகையான படிப்பு மதிநுட்பம் பயனுடையது (நான் எழுத்துருவை மேலோட்டமாகப் பார்க்க வேண்டுமா? ஒவ்வொரு சிறிய தகவலையும் அறிந்திருக்க வேண்டுமா? நான் சில தகவல்களை மட்டும் எதிர்பார்க்கின்றேனா? ).
  - எழுத்துரு எவ்வகையினுள் உட்படுகின்றது.?
  - எழுத்துரு எவ்வளவு கடினமானது எக் கடினங்கள் எதிர்பார்க்கப்பட வேண்டும், எங்கே, அவற்றைத்தீர்க்க என்ன செய்ய வேண்டும்?.
  - இவ் எழுத்துருவை விளங்கிக்கொள்ள முன்னைய அறிவு தேவையா?.
- இவ் ஒப்படைக்கும் அனைத்து அடுத்தடுத்த பயிற்சிகளுக்கும், பின்வரும் படிமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இதை மாணவர்கள் எழுத்தில் பெற்றக்கொள்வர் அல்லது கரும்பலகையிலிருந்து படியெடுப்பர்:
  - **கருப்பொருளையும் எழுத்துரு வகையையும் அடையாளங்காணல்:** எழுத்துருவின் பண்புகளைப் பிரித்தறிவது (படங்கள், வரைபடங்கள், தலைப்புக்கள் மற்றும் பல).
  - **முன்னைய அறிவைச் செயற்படுத்துதல்:** தலைப்பின் திறவுச் சொற்களைக் குறித்துக்கொள்ளவும், எடுத்துக்கொள்ளல், எழுத்துரு உள்ளடக்கம் பற்றிய ஊகங்களையும் வினாக்களையும் உருவாக்குக.
  - **படிப்பு மாதிரியை எடுத்தல்:** சில வாக்கியங்களை நெருக்கமாக படிக்கவும், எப்படி முழுமையான எழுத்துருவைச் சிறப்பாகப் படிப்பது, மற்றும் அதற்கு வேண்டப்படும் நேரத்தைக் கணிப்பிடுவது என்பதையும் கருத்தில்கொள்ளவும்.
- மாணவர்கள் வேறுபடுத்தப்பட்ட எழுத்துருக்களைப் பெற்றுக்கொள்வர் (அகவை மற்றும் செயற்றிறன் மட்டம் என்பவற்றிற்கு ஏற்ப) மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட மூன்று படிமுறைகளைப் பின்பற்றுக. இவை தனித்தனியாக அல்லது ஒரு பங்காளியுடன் மேற்கொள்ளப்படலாம்.
- இச் செயற்பாடு பட்டறிவுகளின் குறுகிய பரிமாற்றத்துடன் நிறைவடையும்.

**குறிப்புகள்:**

- இவ்வகையான பயிற்சிகள் உண்மையில் வேறுபட்ட எழுத்துருக்களுடன் மீண்டும் நடாத்தப்பட வேண்டும். இப் படிப்பு மதிநுட்பங்கள் வகுப்பறையின் உண்மையான எழுத்துருக்களுடன் பயிற்சியெடுத்தால் சிறப்பாக அமையும்.
- 25-27 பயிற்சிகள் ஒன்றுடனொன்று நெருங்கிய தொடர்பைக் கொண்டன, எனவே அதேபோல் மாணவர்களிடம் முன்வைக்கப்படவும் பயிற்சியளிக்கப்படவும் வேண்டும்.
- மேலே குறிப்பிடப்பட்ட படிமுறைகள், அவற்றுடன் 26ம் மற்றும் 27ம் படிமுறைகளுடன் "வாசிப்பு மதிநுட்பங்கள்" எனும் தலைப்பைக் கொண்ட பணித்தாளாகத் தொகுக்கப்பட முடியும்.

# 26 படிக்கும் போது மதிநுட்பங்கள்

**இலக்கு**

*படிப்புத் தகைமையை கூட்டுதற்கு, மாணவர்கள் முதலில் கடினமான சொற்களை அல்லது எழுத்துருப் பந்திகளை எவ்வாறு வேண்டுமென்றே மற்றும் நோக்கத்துடன் கையாள்வது என்பதை கற்றுப் பயிற்சிசெய்தல் வேண்டும். இரண்டாவதாக, ஒரு எழுத்துருவின் நடுவண் அல்லது திறவுக் கருத்துகள் பற்றிய விழிப்புணர்வை உயர்த்தவேண்டும் (முதன்மைச் சிக்கல்கள் என்ன, எழுத்துருவிலுள்ள திறவுக் கூற்றுக்கள் என்ன?).*

3ம் - 9ம் தரம் | 30 மணித்துளிகள்

**கருவிகள்:**
வகுப்பறைப் பாடநூல்கள், சிறுகதைகள், கற்பனை சாராத படைப்புக்கள், சஞ்சிகைகள். 2-3 வேறுபட்ட அகவை மற்றும் தகைமை மட்டங்களுக்குக் கருவிகள் உருவாக்கப்படவேண்டும்

**செயல்முறை:**

- எவ்வாறு எழுத்துருக் கடினங்களைக் கையகப்படுத்துவது மற்றும் எவ்வாறு முதன்மைக் குறிப்புகளை அடையாளங்காண்பது பற்றி ஒன்று அல்லது பல எடுத்துக்காட்டுகளுடன் ஆசிரியர்கள் எடுத்துக்காட்டுவர். ஆசிரியர் அதற்கு இணையான படிநிலைகளின் மாதிரியைச் செய்து காட்டி அவ்வாறு செய்யும்போது "உரத்து வெளியாக எண்ணினால்" இது சிறப்பானதாய் அமையும்.
- பின்வரும் இரண்டு படிநிலைகள் இச்செயற்பாட்டின் நடுநிலையாகும். இதை மாணவர்கள் எழுத்தில் பெற்றக்கொள்வர் அல்லது கரும்பலகையிலிருந்து படியெடுப்பர்:
  - **கடினமான பந்திகளை அடையாளங்காணுதல்,** தெளிவாக்குதலும் விளங்கிக்கொள்ளுதலும்: தொடக்கப் படிப்பு, திரும்பப் படித்தல், எழுத்துரு, கலைக்களஞ்சியங்கள், அகரமுதலிகள், மற்றும் இணையத்தைப் பயன்படுத்தி விளக்கங்களைத் தனியாகத் தேடல்.
  - திறவுக் கூற்றுக்களை இனங்காணுதல், எழுத்துரையை கருத்தமைய பந்திகளாகப் பிரித்தல். கருத்தமைவிற்கு ஏற்ப பந்திகளுக்குத் தலைப்புகளைத் தேர்வு செய்தல்.




- மேற்குறிப்பிட்ட செயல்முறை அனைவராலும் புரிந்துகொள்ளப்பட்டால் மாணவர்கள் அவர்களது வயது அல்லது தகைமைகளுக்கு ஏற்ப பிறிதொரு எழுத்து விடயத்தைப் பெற்றுக்கொள்வர் (வயது உகந்ததாகவும் புலமை மட்டத்தில் வேறுபடுத்தப்பட்டதாகவும் மேற்குறிப்பிட்ட இரண்டு கூற்றுக்களுக்கும் அமைவாய் தாமாகவே ஒரு எழுத்து விடயத்தின் முக்கிய கூற்றை அடையாளங்காண்பர்). இவை தனித்தனியாகவோ அல்லது சோடியாகவோ மேற்கொள்ளப்படலாம்.
- இது சுருக்கமான விமர்சனம் மற்றும் இம்முறையினூடாக அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளல் ஆகியவற்றோடு நிறைவடையும்.

---

**குறிப்புகள்:**

- உண்மையில், இவ்வகையான பயிற்சிகள் மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்பட வேண்டும். வேறுபட்ட படித்தற்கருவிகளோடு முன்னெடுக்கப்பட வேண்டும். அத்துடன் இவ் எண்ணக்கருவின் அடிப்படையில் மாணவர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட வேண்டும்.

- பயிற்சிகள் 25-27 நெருங்கிய தொடர்பு கொண்டன என்பதை மாணவர்களுக்கு அறியப்படுத்துவதோடு எண்ணக்கருவின் அடிப்படையில் மாணவர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்படவேண்டும்.
- மேலே விவரிக்கப்பட்ட படிமுறைகள் வாசிப்பு நுட்பங்கள் என்ற தலைப்பின் கீழ் பயிற்சித்தாள்களில் 25 மற்றும் 27 இலக்கங்களின் படிமுறைகளுடன் மேற்கொள்ளவேண்டும்
- முக்கிய கூற்றுக்களை விளங்கிக் கொள்வதற்கான உத்திகளும் நுட்பங்களும் தொகுதி 05 பாரம்பரிய மொழிக் கற்பித்தலுக்கான கற்றல் நுட்பங்கள் மற்றும் உத்திகளைக் கற்பித்தலில் காணமுடிகின்றது(05வது வெளியீடான பாரம்பரிய மொழிக் கற்பித்தலுக்கான கற்பித்தல் ஆலோசனைகள் எனும் நூலின் தொடர்ச்சியில் காணலாம்). "எழுத்து விடயத்தில் மிக முக்கிய விடயங்களை உருவாக்குதல்" 9ஐப் பார்க்கவும்).

---

# 27 படித்தலின் பின்னான மதிநுட்பங்கள்

**இலக்கு**

*முதலாவது, ஓர் எழுத்தாக்கத்தைப் படித்த பின் எவ்வாறு அதைச் சுருக்கமுடியும் என்பதை மாணவர்கள் முதலில் கற்க வேண்டும். எழுத்தாக்க வகையை அடிப்படையாகக் கொண்டு இதற்குப் பல பயனுடைய அணுகுமுறைகள் காணப்படுகின்றன. இரண்டாவதாக, எவ்வாறு கட்டற்ற முறையில் ஒரு கருத்தை உருவாக்கி விளங்கப்படுத்தி அதை நியாயப்படுத்தி எவ்வாறு கற்பது என்பதையும் எவ்வாறு அது தொடர்பாகப் பயிற்சியெடுப்பது என்பதையும் கற்றுக்கொள்ள வேண்டும்.*

3ம் - 9ம் தரம் | 30 மணித்துளிகள்

**கருவிகள்:**
வகுப்பறைப் பாடநூல்கள், சிறுகதைகள், கற்பனை சாராத படைப்புக்கள், சஞ்சிகைகள், 2-3 வேறுபட்ட அகவை மற்றும் தகைமை மட்டங்களுக்குக் கருவிகள் உருவாக்கப்படவேண்டும்

**செயல்முறை:**

- பல்வேறு வகையில் உள்ளடக்கத்தை எவ்வாறு சுருக்கமாகக் குறிப்பிடுவ தென்பதை ஆசிரியர் விளங்கப்படுத்தி செய்து காட்டுவார். இது வேறுபட்ட எழுத்தாக்கங்களுடன் பயிற்சி செய்யப்படும் (2-3 வெவ்வேறு மட்டங்களிலான எழுத்தாக்கங்கள் மற்றும் 2-3 வெவ்வேறு வகைகளிலான எழுத்தாக்கங்கள் இதற்குப் பயன்படுத்தப்படும் (எ.டு. புனைகதைகள் அல்லாதவை, வரலாறு மற்றும் பல). பின்னர் வகுப்பு முழுவதும் எழுத்தாக்கங்கள் பற்றிய கருத்துக்களை உருவாக்கி அவற்றை தாமாகவே தக்கவைப்பர். ஒரு உரையில் ஒருவரின் சொந்தக் கருத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயப்படுத்தல் ஆகியவை வகுப்பில் ஒன்றாக விவாதிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.
- மாணவர்கள் கரும்பலகையிலிருந்து அல்லது எழுத்துப்படியாகப் பெற்றுக்கொள்ளும் பின்வரும் பயிற்சிக்குரிய செயன்முறையை எல்லோரும் ஒருமுறை விளங்கிக்கொள்ளும்போது பின்வரும் படிமுறைகள் பயன்படுத்தப்படும்:
  - **உள்ளடக்கத்தைச் சுருக்குதல்:** எழுத்தாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு வெவ்வேறு வடிவங்கள் பயனுடையனவாகும். எ.டு. விளக்கப்படம், காலத்தொடர்ச்சிப் பட்டியல்கள் / காலவரிசை, வகிபங்கு, மீண்டும் எடுத்துரைத்தல், வரைபு விவரிப்புக்கள், மற்றும் பல.
  - **ஓர் எழுத்தாக்கத்தை மதிப்பிடுதல்:** படித்த பின், பின்வருவன போன்ற வினாக்களுக்கு பதிலளிக்கப்பட வேண்டுமென்பதுடன் அவை கலந்துரையாடப்படவேண்டும்: எவ்வாறு இவ் எழுத்தாக்கத்தை விரும்பினீர்கள்?, எதை நீங்கள் ஆர்வமாகக் கருதினீர்கள், எது உங்களுக்குப் புதியதாக இருந்தது? இதன் பொருள் பற்றிய உங்கள் கருத்து யாது?, இதை யாருக்கு உங்களால் பரிந்துரைக்க முடியும்?
- அனைத்து மாணவர்களும் இவ் அணுகுமுறையை விளங்கிக்கொள்ளும்போது அவர்கள் பல்வேறு எழுததாக்கங்களைப் பெற்றுக்கொள்வார்கள் (அவர்களுடைய வயது மற்றும் தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக). தனியாக அல்லது இணையாக மேலே குறிப்பிடப்பட்ட குறிப்புகளுக்கு அமைவாக அவர்கள் கருத்துக்களை தனியாக அல்லது இணையாக உருவாக்கவும் பயிற்சி செய்கின்றனர்.

குறிப்புகள்:

- இத்தகைய பயிற்சிகள் வேறுபட்ட படிப்புக் கருவிகளுடன் திரும்பத் திரும்ப நடத்தப்படவேண்டும். நிறைவாக, வழமையான வகுப்பறைக் கற்பித்தலின் எழுத்தாக்கங்களுடன் செயற்பாட்டுப் பயிற்சி இடம்பெறும்.
- பயிற்சிகள் சூ25-27 நெருக்கமாகத் தொடர்புற்றவை, இச் சூழலில் அவை எடுத்துரைக்கப்படுவதுடன் மாணவர்களுடன் பயற்சி செய்யப்பட வேண்டும்.
- மேலே குறிப்பிடப்பட்ட படிமுறைகள் சூ 25-26 இன் படிமுறைகளுடன் சேர்த்து "படித்தல் மதிநுட்பங்கள்" என்ற தலைப்பில் ஒரு பணித்தாளில் சுருக்கியமைக்கலாம்.
- சுருக்கங்கள் உருவாக்க மதிநுட்பங்களும் பரிந்துரைகளும் தொகுதி 5 "பா.மொ.க வில் மதிநுட்பங்கள் பரிந்துரைகளைக் கற்றலைக் கற்பித்தல்" ("பா.மொ.க வுக்கு கற்பித்தல் பரிந்துரைகள்" தொடரின் நூல் 5) பார்க்கவும் சூ10 "நல்ல சுருக்கங்களை உருவாக்கல்".

# பகுதி **III:**

# இலக்கிய – பண்பாட்டு  கல்வி

# வகுப்பறையில் இலக்கியத்தை உள்வாங்கிக்கொள்வதை ஊக்கப்படுத்த எண்ணற்ற வழிகள் உள.

**கற்பித்தல் பரிந்துரைகள் 28-30**

தன் நாட்டு மொழிக்கல்வியின் ஓர் இன்றியமையாத இலக்கு மாணவர்கள் தமது தன் நாட்டு மொழியின் அழகை பாராட்டுமாறு அவர்களை உருவாக்கி, தமது நாட்டின் பண்பாட்டுப் பல்வகைமைக்கு அவர்களை அறிமுகப்படுத்தி அதன் இலக்கிய வெளிப்பாடுகளை - அதாவது கற்பனைக்கதைகள், கதைசொல்லுதல், கதைகள், கவிதைகள் மற்றும் இவை போன்றவற்றை அறிமுகப்படுத்துவது ஆகும். ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு பண்பாடும் தமக்குரிய தனித்துவமான கதைகளைக்கொண்டிருக்கும், அவை மிக வளமான கட்டுக் கதைகள், கற்பனைக் கதைகள், பாரம்பரியக் கதைகளாகவும் அமையும்.

எழுத்துப்பங்கங்களின் உள்ளடக்கத்தைக் கற்பனை செய்து பார்க்கப் பல மாணவர்களுக்கு கூடுதல் துணை தேவைப்படும். இவை பெரும்பாலும் இரண்டு மாணவர்கள் குழுக்களுடன் தொடர்புடையது: கல்வி அடிப்படையில் நன்மையடையாத குடும்பத்திலிருந்து வருபவர்கள் அதாவது வீட்டில் இலக்கியத்தை கற்கமுடியாதவர்கள், தாம் பிறந்த நாட்டுடன் நெருக்கத்தை ஏற்படுத்தாத அதாவது தமது விடுமுறையை மட்டும் அங்கே செலவிடுபவர்கள். அது மட்டுமல்லாது அவர்கள் எப்போதும் நிகழ்வு நடைபெறும் இடங்களுடன் பழக்கமில்லாதவர்களாகவும் வீரர்களுடனும் பாரம்பரியக் கதைகளுடனும் தொடர்பு இல்லாதவர்களாகவும் இருப்பர் (புராணகதை றொஸ்பா அல்பானியாவிலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் தெரியும். ஆனால் அல்பானிய குடிபெயர்ந்தவர்கள் அறிந்திருக்கவில்லை). மேலும் தாம் பிறந்த நாட்டிற்கும் புலம்பெயர் நாட்டிற்கும் இடையே அடிக்கடி விழுமிய வேறுபாடுகள் உள்ளன. ஏனெனில் அங்குள்ள இலக்கியங்கள் பகுதி அடிப்படையில் பல்வேறு விதிமுறைகளையும் மரபுகளையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் பல்வேறு வகையாகப் பகிர்ந்தளிக்கப்படும் வகிபாகங்கள், சடங்குகள் மற்றும் நடத்தைகள் ஆகியவற்றை மீண்டும் குறிப்பிடுகின்றன. இது கூட ஏமாற்றம் மற்றும் விளங்கிக் கொள்வதில் சிக்கல்கள் ஆகியவற்றுக்கு இட்டுச்செல்லக்கூடியது.

பின்வரும் எடுத்துக்காட்டுகள் பா.மொ.க ஆசிரியர்கள் எவ்வாறு தமது மாணவர்களின் பட்டறிவுகளை இலக்கியத்தோடு அதாவது மொழியியல் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட எழுத்துருக்களுடன் வழிப்படுத்த முடியும் மற்றும் எவ்வாறு பல்வேறு ஒப்படைகள் மூலம் இலக்கிய எழுத்துருக்களை உள்வாங்கிக்கொள்வதில் பயிற்சி செய்யவேண்டும் என்பதையும் விளங்கப்படுத்துகின்றன.

# 28 கேட்டல்

## இலக்கு

*மாணவர்கள் தமது தன் நாட்டு மொழியின் அழகைப் பாராட்டவும் உணர்ந்து கொள்ளவும் வாய்ப்புப் பெற்றுக்கொள்கின்றனர். இச் செவிமடுத்தல் பட்டறிவானது ஒலி, சந்தம், ஒத்திசை மற்றும் ஆக்கமுறையில் வடிவமைக்கப்பட்ட மொழியின் அழகியல் ஆகியவற்றில் அவர்களுக்குக் கூருணர்ச்சியை ஏற்படுத்தவேண்டும். கவிதைகள் கேட்டல் பட்டுணர்வுக்கு அடிப்படையாக மிக நல்ல பணியாற்றுகின்றன, அவ்வாறான கவிதைகளை www.lurikline.org இணையத்தளம் (கீழே பார்க்கவும்) போன்றவற்றில் காணலாம்*

5ம் - 9ம் தரம் | 30 - 45 மணித்துளிகள்

**கருவிகள்:**
இயலுமெனில் இணையத்தளம் மற்றும் அச்சுப்பொறியை அணுகவும்.



**செயல்முறை:**

- www.lyrikline.org எனும் இணையத்தளத்திற்கு மாறிகளைக் கொண்டு அணுகக்கூடியதாக இருத்தல். ஆசிரியர் இணையத்தளப் பக்கத்தை அறிமுகம் செய்தல். பின் மாணவர்கள் இருவரை உள்ளடக்கிய குழுவை உருவாக்குவர். இந்த இணையத்தளத்தில் தமது தன் நாட்டு மொழியிலுள்ள தமக்கு விருப்பமான ஒரு கவிதையைக் கண்டுபிடிப்பர். பின், அவர்கள் அக்கவிதையை வகுப்புக்கு எடுத்துரைப்பதுடன், பின்வரும் வினாக்களுக்கு விடை கூறவேண்டும்.
  - இதுவொரு கவிதையென எவ்வாறு கூறுவீர்கள்?
  - இக்கவிதையின முதன்மைக் கருப்பொருள் யாது?
  - குறிப்பாக எச் சொற்கள் அல்லது வாக்கியங்கள் அழகானவையாக அமைகின்றன?
  - இக்கவிதையில் காணப்படும் மனநிலை என்ன?
  - இக்கவிதைக்குப் பொருத்தமான நிறம் அல்லது இசை யாது?
  - இக்கவிதை குறிப்பாக யாரைக் கவரும்?
- பா.மொ.க வகுப்பறையில் இவ் இணையத்தளத்தை அணுக வசதி இல்லையெனில் இவ் ஆய்வை வீட்டு வேலையாக ஒதுக்கலாம். இதன் குரல்பதிவு ,பதிவுக் கோவையாக வகுப்பறைக்குக் கொண்டுவரவேண்டும்.
- www.lyrikline.org இணையத்தளத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக அல்லது அந்த வளத்துக்கு மேலதிகமாக, செவிமடுத்தல் பயிற்சியை எழுத்துருக்கள் மற்றும் படிப்பவர்களுடன் பயிற்சியை மேற்கொள்ள முடியும்: சிறுவர் பாடல் வரிகள், சிறு கதைகள், நகைச்சுவைகள் மற்றும் பல ஆசிரியர்களால், பெற்றோரால் அல்லது மாணவர்களால் (விரைவான தயாரிப்பின் பின்) படிக்கப்படும். அத்துடன் குரல் பதிவுக் கோவைகளின் தொகுப்பை பெற்றுக் கொள்ள அவை பதிவு செய்யப்படும். (கற்பித்தல் பரிந்துரைகள் 10ஐயும் பார்க்கவும், உரத்துப் படித்தல் மற்றும் ஏனையவர்களுக்காக குரல் பதிவினை மேற்கொள்ளல்).

**குறிப்புகள்:**

- www.lyrikline.org பாட்டுவரித் தளத்தைக் கருத்தில் எடுத்தல்: இவ் இணையத்தளம் உண்மையிலேயே ஒரு புதையலாகும். இது 60ற்கு மேற்பட்ட மொழிகளில் கவிதைகளைக் கொண்டுள்ளது. அவை படைப்பாளிகளாலேயே உரக்க வாசிக்கப்படும். அத்துடன் அவர்களைப்பற்றிய சுய விவரத் தகவல்களை வழங்குகின்றது. அடிக்கடி ஜேர்மன்மொழியில் மொழிபெயர்ப்புண்டு அல்லது இணையத்தளத்தால் ஏற்கக்கூடிய அல்லது ஏனைய மொழிகளுக்கும் மொழி பெயர்ப்பு உண்டு. இணையத்தளத்தைக் கையாளுதல்: தளத்தில் செல்லுதற்கு மொழியைத் தேர்ந்தெடுக்கவும் பின்னர் விரும்பிய கவிதை மொழியை தேர்வு செய்யவும் "search term" எனும் இடத்தில் கவிதைகளின் விருப்பு மொழியை உள்ளீடு செய்யவும்.

---

**மாற்று முறைகள்:**

பல தகுந்த விரிவாக்க நிலைகள் உள்ளன, அதாவது:

- எழுத்துருக்கள் (அடிக்கடி மொழிபெயர்ப்புடன்) அச்சிட முடியுமென்பதுடன் அவை பிரதிபண்ணப்படுகின்றன. இது மொழி ஒப்புமைகள் மற்றும் மொழி தொடர்பிலான கண்காணிப்புகளுக்கு வாய்ப்பிக்கின்றது.
- மாணவர்கள் தமக்கு விரும்பிய கவிதையைப் படித்துப் பயிற்சி செய்து அதைத் தாமாகவே வகுப்பில் ஓதிக் காட்டுவர்.
- மாணவர்கள் பிற மொழிகளில் கவிதைகளைச் கவிதையைச் செவிமடுப்ப-துடன், அழகான செவிமடுத்தல் பட்டறிவை தீர்மானிப்பர் மற்றும் / அல்லது தம்முடைய மொழியுடன் ஒப்பிட்டுப் பார்ப்பர் (ஒலி, பேச்சு, சந்தம், இன்னிசை, போக்கு மற்றும் பல).


---

# 29 நூலிலுள்ள கதை மாந்தர்கள்

**இலக்கு**

*ஓர் எழுத்துருவை படிக்கும்போது, மாணவர்கள் இன்றியமையாத கதைத்தலைவன் அல்லது பிறிதொரு ஆளின் உருவப் பிரதியை உருவாக்குவதுடன் இக்கதை மாந்தரின் பட்டறிவினை ஆழமாகப் பகுப்பாய்வு செய்வர். ஆழமான விளங்கிக் கொள்ளல் மற்றும் இனங்காணுதல், மாணவர்கள் கதைக்கரு மற்றும் கதை மாந்தர்களுக்கிடையிலான தொடர்புகளை விளங்கிக்கொள்வதற்கு இன்றியமையாததாயுள்ளது.*

5ம் - 9ம் தரம் | 90 மணித்துளிகள்




**கருவிகள்:**
வரலாற்று நூல், கதை நூல் அல்லது முழுமையான நூல் (படங்களை உள்ளடக்கிய ஒரு நூலும் கூட) தாள், வர்ணம் தீட்டும் பென்சில்கள்

**செயல்முறை:**

- ஒரு நூலைப் படிக்கும்போது அல்லது படித்த பின் (கதை நூல் அல்லது பட நூல்) மாணவர்கள் கதைத்தலைவன் அல்லது பல்வேறு இன்றியமையாத உருவங்களின் பிரதிமையை அல்லது தன் விவரத்தை உருவாக்குவார்கள். இதை ஒரு தனிப்பட்ட அல்லது இருவர் இணைந்து மேற்கொள்ளும் ஒப்படையாக நிறைவேற்ற முடியும். ஒப்படைக்கு முன் அவ்வாறான பிரதிமைக்கு அல்லது விபரத்திற்கான முக்கியமான கருத்துக்களைக் கலந்துரையாடுவர். எ.டு.,
  - அந் நபர் எங்கே வசிக்கின்றார்?
  - அந்நபரின் தோற்றம் எப்படியுள்ளது?
  - குறிப்பாக நன்றாகவிருக்க இந்நபரால் என்ன செய்ய முடியும்? என்ன செய்யக் கூடாது?
  - இந்நபரை எக் கவலை ஆட்கொண்டுள்ளது?
  - இந்நபரின் குடும்பம் பற்றி உமக்கு என்ன தெரியம்?
  - வேறு யார் இந்நபருக்கு இன்றியமையாதவர்கள்?
  - இந்நபரோடு நண்பராக இருக்க விரும்புகின்றீர்களா? ஆம் எனில் ஏன்? இல்லையெனில் ஏன்?

III

- எழுத்து மூலமான மறுமொழிகளுடன், பிரதிமை அந்நபரின் வடிவமைப்பினையும் உள்ளடக்க வேண்டும்.
- பிரதிமைகள் பின்னர் கலந்துரையாடப்பட்டு ஒப்பிடப்படும், முதலில் குழுக்களாக, பின்னர் வகுப்பு முழுவதும்.




**குறிப்புகள்:**

இக்கருத்திட்டம் 7-9 தர மாணவர்களுடன் நடத்தப்படலாம். உருவம், மொழி, செயற்பாடு ஆகியவற்றையொட்டி ஒப்படைகள் எளிமையானவையாக அல்லது பெரிதும் அறைகூவலுடையனவாக ஆகலாம்.

# 30 உருவக அடிப்படையில் ஓர் இடத்தைக் கற்பனை செய்தல்.

**இலக்கு**

*இச் செயற்பாடு மாணவர்களின் உள்ளார்ந்த புலன்கள் மற்றும் ஒரு காட்சி அல்லது மனநிலையினைக் கற்பனை செய்து பார்க்கத்தூண்டுமென்பதுடன் ஒரு எழுத்து விடயத்தைப் புரிந்து கொள்வதில் வாசிப்பவர்களின் உள்ளார்ந்த புலன், மிக முக்கிய கூறாகும். அதேசமயம், பல மாணவர்கள் தாம் ஏற்கனவே அவற்றின் உருவங்களைப் பெற்றிருக்காவிட்டால் இடங்கள், மக்கள், அல்லது மனநிலையைக் கற்பனை செய்வதில் சிக்கல்கள் இருக்கும்.*

1ம் - 9ம் தரம் | 45 மணித்துளிகள்

**கருவிகள்:**
கதைப்புத்தகம் அல்லது கதை சொல்லுதல் (இயலுமெனில், பல்வேறு மட்டங்களுக்கான 2-3 எழுத்துருக்கள்)

**செயல்முறை:**

- ஆசிரியர் கதையொன்றை வகுப்பிற்கு படித்துக் காட்டுவார். அனைத்து அகவை மட்டங்களுக்கும் ஒரு கதை பொருந்துமெனில், இது முழு வகுப்பையும் உள்ளடக்கலாம். இல்லையெனில் வேறுபட்ட வயதுக் குறிப்புடைய கதைகள் அவற்றிற்குத் தேவைப்படும்.
- வகுப்பு முழுவதும் (அல்லது வெவ்வேறு அகவை மற்றும் தகைமை மட்டங்களில்) உள்ளடக்கத்தைச் சுருக்குதல், விளங்கிக்கொள்வது தொடர்பாக தொடுக்கப்படும் வினாக்கள் தெளிவாக்கப்படும். சிக்கலான எழுத்துருக்களுள் பிரதியொன்று முன்னரேயே வழங்கப்படும். அப்போது தான் மாணவர்கள் தமக்கான உள்ளடக்கத்தை மீட்டிப்பார்ப்பார்கள்.
- அதுவொரு திரைப்படமாக எண்ணி, கண்ணை மூடியவாறு இக்கதையில் வரும் இன்றியமையாத செயற்பாட்டுக் காட்சியைக் கற்பனை செய்து பார்க்கவேண்டும். பின்வரும் வினாக்கள் (இவ்விடயத்தில் அவர்களுக்கு படிக்கக் கூடியதாக அறையொன்றும் உள்ளடக்கப்பட்டிருக்கும்) இக் கற்பனைச் செயற்பாட்டிற்கு உதவக்கூடும்.
  - சாளரங்கள் உண்டா?
  - கதவு எங்கே அமைந்துள்ளது?
  - அங்கு எவ்வகையான தளபாடங்கள் உள்ளன?
  - அறை இருட்டாக உள்ளதா? வெளிச்சம் போடப்பட்டுள்ளதா? அல்லது அறையினுள் சூரிய வெளிச்சம் படுகின்றதா?
  - சுவரில் படங்கள் உள்ளதா?
  - நீங்கள் இந்த அறையில் இருக்கும்போது எப்படி உணர்கின்றீர்கள், ஏன்?
- தமது உள்ளகப் படங்களை அனைத்து மாணவர்களும் முழுமைப்படுத்திய குறுகிய நேரத்தின் பின் மாணவர்கள் தமது அறையின் வரைபடத்தை வரைவர் அல்லது இந்த அறையில் உள்ளன என்று அவர்கள் கற்பனை செய்தவற்றை அல்லது அந்த அறையில் என்ன இருக்குமென்று அவர்கள் எண்ணுபவற்றை எழுதிக்காட்டுவர்.
- பின் தமது பெறுபேறுகளைப்பற்றிக் கலந்தாலோசிக்க துணையொன்றைத் தேடுவர். அத்துடன் தமது கணிப்பீடுகளை மதிப்பீடு செய்ய மேலதிக நேரத்தைப் பெற்றுக்கொள்வதுடன் தேவையேற்படின் தெளிவின்மையைத் தெளிவுபடுத்துவர்.
- இறுதியாக எழுத்து விடயங்களும் சித்திரங்களும் ஒப்பிட்டுப்பார்த்து வகுப்பறையிலுள்ள அனைத்து மாணவர்களும் கலந்துரையாடுவர்.

---

**மாற்று முறைகள்:**

- இப்பயிற்சிகள் மீண்டும் மீண்டும் பல தடவைகள் செய்யப்பட வேண்டும்.
- இதுவும் கூட மனநிலை மற்றும் உணர்வுகள் அல்லது அதில் ஈடுபட்டுள்ள நபர்களைக் கொண்டு பின்பற்றப்படவும் மாற்றியமைக்கப்படவும் வேண்டும்.

# நூற்பட்டியல்


Bertschi-Kaufmann, Andrea (Hrsg.) (2007): Lesekompetenz – Leseleistung – Leseförderung. Grundlagen, Modelle und Materialien. Seelze- Velber und Zug: Kallmeyer & Klett und Balmer.

Bibliomedia, QUIMS (2005): Sprachenvielfalt in Schule und Bibliothek, Solothurn: Bibliomedia.

Kruse, Gerd; Maria Riss; Ursula Rickli; Thomas Sommer (2010): Lesen. Das Training 1. Bern: Schulverlag plus.

Kruse, Gerd; Maria Riss; Thomas Sommer (2012): Lesen. Das Training 2. Bern: Schulverlag plus.

Kruse, Gerd; Maria Riss; Thomas Sommer (2013): Lesen. Das Training 3. Bern: Schulverlag plus.

Isler, Dieter (2005): Schule und Bibliothek – Zusammenarbeit vor Ort. In: Leseforum 14/2005, S. 51– 53. Link: www.leseforum.ch/myUploadData/files/14_Bulletin_2005.pdf

Riss, Maria (2012): Alles und Nichts. Didaktischer Kommentar. Bern: Schulverlag plus.

Rosebrock, Cornelia et al. (2011): Leseflüssigkeit fördern. Lautleseverfahren für die Primar- und Sekundarstufe. Seelze: Kallmeyer & Klett.

Rosebrock, Cornelia; Daniel Nix (2008): Grundlagen der Lesedidaktik und der systematischen schulischen Leseförderung. Baltmannsweiler: Schneider Hohengehren.

Spinner, Kaspar (2007): Lesen als ästhetische Bildung. In: Andrea Bertschi-Kaufmann (Hrsg.): Lesekompetenz – Leseleistung – Leseförderung. Seelze-Velber und Zug: Kallmeyer & Klett und Balmer, S. 83–94.

Sträuli, Barbara et al. (2005): Leseknick – Lesekick. Leseförderung in vielsprachigen Schulen. Zürich: Lehrmittelverlag des Kantons Zürich.

"பாரம்பரிய மொழிக் கல்விக் கருவிகள்" தொடர் ஆறு தொகுதிகளைக் கொண்டது, பாரம்-பரிய மொழிக் கல்வியின் (பா.மொ.க, சுவிற்சர்லாந்தில்: HSK) தரத்தினைக் கூட்டுதற்காகவும் வழமையான வகுப்பறைக் கல்வியுடன் இதன் இணைப்புத் தொடுப்பினை மேம்படுத்தவும் வடிவமைக்கப்பட்டது.

இவ்வெளியீடுகள் எதிர்கால மற்றும் தற்போதைய பாரம்பரியமொழி ஆசிரியர்களின் திட்டவட்டமான வேண்டுகைகளையும் அவர்களின் பிறந்த நாடுகளில் அல்லது குடியே-ற்ற நாடுகளில் துணைசெய்யும் நிறுவனங்களையும் பற்றிக் கூறுகின்றன. அடித்தளம் நூல் (கைநூலும் பணிநூலும்: அடித்தளங்களும் பின்னணிகளும்) மேலை மற்றும் வடக்கு ஐரோப்பிய நாடுகளில் தற்போதைய ஆசிரியக்கலை, கற்பித்தல் மற்றும் நெறிமுறை பற்றிய திறவுப் பண்புகளை உள்ளடக்குகின்றன.

பணிநூல்கள் கற்பித்தல் பரிந்துரைகளையும் பல்வேறு அறிவுறுத்தல் பரப்புகளுக்கான (பாரம்பரிய மொழியில் எழுத்து ஊக்குவிப்பு, முதலியன) தூண்டிகளையும் திட்ட மாதிரிகளையும் வழங்குகின்றன. இவ்வெளியீடுகள் தொடக்கத்திலிருந்தே கற்பித்தல் மதியுரைகளின் நடைமுறை இணக்கப்பாட்டினையும் பயன்பாட்டினையும் உறுதிப்படுத்துவதற்காக பா.மொ.க ஆசிரியர்களின் நெருக்கமான உடனுழைப்புடன் உருவாக்கப்பட்டன.

தொடர் பின்வரும் வெளியீடுகளை உள்ளடக்குகின்றது:




"பாரம்பரிய மொழி கற்பித்தற் கருவிகள்" வெளியீடுகள் ஜெர்மன், ஆங்கிலம், அல்பானியன், பொஸ்னியன் / குரோசியன் / சேர்பியன் / போர்த்துகீஸ், துருக்கீஸ் மற்றும் தமிழ் ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ளன. இவை சூரிச் ஆசிரியர் பல்கலைக்கழகத்தின் பன்னாட்டுக் கல்விக் கருத்திட்டங்களின் நடுவகத்தினால் (ப.க.க IPE) வெளியிடப்பட்டன.